[illegible] Series No 7

A 524

# olkappia Moolam.

[With Head Notes, Author's Sketch Etc.]

2/-

EDITED BY

PANDIT P C PUNNAIVANANATHAN,

EDITOR, PANDIYA NESAN, MADURA.

MEENAKSHI VILAS PRESS, MADURA.

இலக்கியரத்நகோவை—மணி ௭

# தொல்காப்பிய மூலம்

[கருத்து, பாடபேதக்குறிப்பு முதலியவற்றுடன்]

மதுரைத் தமிழ்ச்சங்கத்துறுப்பினரும்,
ஆங்கில கலாசாலைப் பரீக்ஷகர் சங்கத்தமைச்
சரும், செந்நாப்போதார் செந்தமிழ்ச்சங்கத்
தலைவரும், ஸௌராஷ்டிர ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியரும், பாண்டியநேசன்
பத்திரிகாசிரியருமாகிய

திருத்தகு

## T. சிதம்பரபுன்னைவனநாதமுதலியார்

பதிப்பித்தது

மதுரை
P. N. சிதம்பரமுதலியார் அன் கோ,
வெளியிட்டது.

காப்பிரைட் ரிஜிஸ்டர்டு

1922
துந்துபி

விலை ரூபாய். ௧

பி. நா. சிதம்பரமுதலியார் அண் கோ,
புத்தக வியாபாரம், மதுரை.

# FOREWORD

BY

M R.Ry T C SRINIVASA IYENGAR Avl. B A B L.
High Court Vakil, MADURA,
MEMBER, LEGISLATIVE COUNCIL, MADRAS
AND
Honorary Secretary, MADURA TAMIL SANGAM,
MADURA

Tholkappiam is the earliest work in the Tamil language now extant. The author Thrinathoomagni Muni, son of Jamathagni Rishi, is one of the twelve disciples of Agasthya, the patron saint of the Tamils. Being a Bhargava, he goes by his family name in its dravidianised form, and as such is familiarly known as Tholkappiar (தொல்காப்பியர்)

The introduction to the work was written by Panambaranar, the author's friend and colleague as a disciple. From it we learn that the work was read out to learned men in the presence of Athankotasan another of the eminent disciples of Agasthya, in the court of the Pandiyan King. That the work must have passed through the critical ordeal and won high approbation is borne out by two undoubted circumstances

viz that, after this work, that earlier work of the master Agasthya, became obselete and that in spite of many later learned works on the subject தொல்காப்பியம் and its classical commentaries have, through all the time extending over several centuries, continued to be the source of authority in grammar.

It is difficult to fix the date of this great work. That it is very ancient goes without saying. This work is said to be a work of the second of the renowned Sangams The introductory verse of Panambaranar states that the work is full of the principles from Ainthra Vyakarnam. It is deducible therefrom that when Tholkappiam was composed either Paniniya Vyakarnam did not exist or had not attained any celebrity If the inference be correct, the work must have been composed 5 or 6 centuries before the Christian era

Malavai Mahalinga Ayyar was the first to print the 1st book of this work. The late C. W. Thamotharam Pillai, several years ago, laid the Tamils, under a deep debt of gratitude by bringing out in print an edition of all the 3 books of this work with the commentary. Some years back that indefatigable worker in

the cause of Tamil, Mr Bavananthaın Pillai, brought out an edition of the 3rd book of this work with commentary. The Madura Tamil Sangam published a section of one of the books of the work with a commentary Mr M Ragaviengar the chief Tamil Pandit of the Tamil Lexicon Committee, has, at the instance of Dr. Sri Kanta Litt. D of Colombo written a lucid exposition of the principles of the third and biggest book of தொல்காப்பியம் in fine prose and this was published by the Madura Tamil Sangam recently.

My friend Pandit P C. Punnaivananatha Mudaliar's plucky attempt to bring out a neat and handy edition of the Text alone of the great work for easy and ready reference with head notes of the subject matter of the Sutrams, will be widely appreciated and encouraged. Though the work requires no introduction to the public, still, it is a great pleasure to me to comply with my friend's desire to write this brief preface.

Madura
21—5—22

T C. SRINIVASAN,

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமைத்தமிழா
சிரியரும், செந்தமிழ்ப்பத்திராசிரியரும்,
சென்னைக்கு விஜயஞ்செய்த மாட்சிமிக்க வேல்ஸ்
இளவரசரவர்களால் சன்மானிக்கப்பெற்ற
தமிழ்ப்புலவர்களிலொருவருமாகிய
எதிர்க்கோட்டை
ஸ்ரீமத் திரு நாராயணையங்காரவர்கள்
எழுதிய சிறப்புரை

---

இக்காலத்துள்ள பழைய தமிழ் நூல்களிற் சிறந்ததாயும், முற்காலத்திருந்த தமிழ் நூல்வகைகளையும், செய்யுள்வகைகளையும் வழக்கு வகைகளையும் அறிதற்குச் சிறந்த கருவியாயுமிருக்கிற தொல்காப்பியத்தைப் பலரெழுதியவுரையுடன் பலபகுதிகளாகப் பலரும் அச்சிட்டிருப்பினும், இதுகாறும் மூலபாடம் மட்டும் தனியே ஒருபுத்தகமாக ஒருவராலும் பதிப்பிக்கப்படாதிருந்த குறை தீருமாறு, மதுரைத் தமிழ்ச்சங்கத்திற் கல்விபயின்றவரும், மதுரையில் ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் தமிழ்ப்

* மற்றைப்புலவர்கள், மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள், திருநெல்வேலி ஹிந்து காலேஜ் தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீ சுப்பிரமணியக்கவிராயரவர்கள், தஞ்சாவூர்க்கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஸ்ரீ எல். உலகநாதபிள்ளையவர்கள்.

பாண்டித்துரையாயிருப்பவருமான ஸ்ரீமத். புன்னைவனநாத முதலியாரவர்கள் பல பிரதிகளை வைத்து ஒப்புப்பார்த்து மூலசூத்திரங்களை ஒருங்கெழுதி, ஒவ்வொரு சூத்திரத்தின் முதலில் நுதலும்பொருள் காட்டி, தொல்காப்பியத்தின் வேறான சில முத்தகச் செய்யுட்களைப் பாயிரத்தின் புறம்பே காப்பாகச் சேர்த்துப் பனம்பாரனார், அத்திரேயன் பேராசிரியன் இவர்களியற்றிய பாயிரச் செய்யுள்களுடன் அச்சிட்டிருப்பது பாராட்டத்தக்கது.

இப்புத்தகம் மூலபாடம் வரப்பண்ணுமவர்களும், வந்தபின்னும் மறவாதிருக்கச் சிந்திப்பவர்களும், பிறர்க்கும் திருக்குறள்மூலம் போலமிகவுமுபயோகமாகும் இப்புத்தகத்தை அச்சிட்டுதவியதன்றியே, செய்யுட்பாடக்கோவை முதலிய சில புத்தகங்களைத் திரட்டியும் இயற்றியும் அச்சிட்டுதவிய முதலியாரவர்கள் ஊக்கமும் உழைப்பும் பாராட்டத்தக்கன. இன்னோரன்ன பழந்தமிழ்நூல்களை அச்சிட்டுதவிவரும் பி. நா. சிதம்பர முதலியார் கம்பெனியாருக்குத் தமிழ்மக்கள் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையராவர்.

மதுரை
26-5-22

திரு. நாராயணையங்கார்.

உ

தொல்காப்பியப்பாயிரவிருத்தியாசிரியர்
அரசஞ்சண்முகனார் மாணாக்கரும், மதுரைத் தமிழ்ச்
சங்கத்தலைவரும், திருவாலவாயுடையார் கோயிற்
புடையாரும் ஆகிய

## திருவாளர். ம. சுந்தரபாண்டிய ஓதுவார்

### அவர்கள் கூறிய

# சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா

---

வண்ணீர்க் கருங்கடல் மலருல குவப்பத்
தண்ணுறுந் தாதிற் றமிழ்நிலங் கமழும்
எழுத்தொலி முறையி னியன்றுசொன் முடிநிப்
பழுத்தரும் பொருட்சுவை பரந்த தொல்காப்பிய
பாயிரத் தறுநூற் றொருபது சூத்திரத்
தாயுழ வொன்பா னியலருங் கிளைத்தே
தென்மது ராபுரித் தொன்ன முது சங்க
மன்னினின் றிடைகடை மாசறு புலவர்க்
கொருதா ளாகிநல் லுரைபல சிவணி
மருவுறு தமிழ்மொழி மக்கட் குறுதியிற்
சிறந்து பின்னூறு மொழிச்சிறு விழிகள்
திறந்திடத் தொல்காப் பியன்சிமிழ்ப் பித்தனன்

அத்தகு தொன்னூல விததக மூலம
வழககா றமைய வரைநதுறா லாசான்
ஒழுககா றமைவர லாறறுட னுதவினன
பூமபொழி லெழிலபெறு புத்த நேரியுண
மேபபடு வேளாண குறமுடியாா வழி
வழிவரு மாஙகில மொழிபுணர் மாணபிற
கழிபெறு கடறகரைக ககைதையங கானல
உபபளக கண்காண உதவியம டணிபினன
செபபரும புகழுடைச சிதம்பர நாதன
நலகிய தீநதமிழ நலங்கனி நாவினன
மலகிய தமிழசசங கததமர் மாண்பினன்
செளராட டிரவுயர் தரககலைக கூடத
தொவவிய தமிழககலைக கொருமுத லாசான
ஆங்கில சாலை யமர்தரு பணடிதா
பாஙகுறு சஙகமும பலஅவைக களமும
போறறிடின னெழுதும் புலமை யோனெனப
போறறுறு தகையினன் புண்ணியன திருத்தகு
புன்னைவன நாதன் என்னு
மன்னுபேர் நிறுவிய வாயமை யோனே.

தாநதபிஷூ
வைகாசிமீ கசஉ } சுந்தரபாண்டிய ஓதுவார்,

உ

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை.

"தந்தமொன் றேப்கருங் குன்றைபன் பாரத்துப
புந்தியெவண் பாற்கடல் நாட்டுதூடம்
செந்தமிழ் அமிர்தம் திரண்டெழற் பொருட்டே."

வீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்து வழங்கப்பெறும் பாஷைகள் தொளாயிரத்துக்குக் குறையாதவை. இவற்றுள் நாகரிகம் வாய்ந்த மக்களால் பேசப்பட்டுப் பண்டைக்காலமுதல் இன்றுவரை உய்ந்திருக்கும் சீரியமொழிகள் இப்ரேயம், கிரீக், லத்தீன், சமஸ்கிருதம், தமிழ் என்ற ஐந்துமென விலியம் ஹண்டர் முதலிய ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். இவற்றுள் ஒன்றாகிய தமிழ்மொழியானது உலகவழக்கு, நூலவழக்கு என்னுமிருவழக்குச் சிறப்புடையதாகிக் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவாதிய உண்ணாட்டு மொழிகளுக்குத் தாயகமாகவும் நின்று பிறமொழியினுதவியின்றியே தனித்தியங்கும் வன்மையையுடையது. இம்மொழி, இலக்கணநூல்கள் செய்யப்பெறுதற்கு வெகுகால முன்னரே மக்கள் வழக்கிற் சிறந்து பொருளிலக்கிய வழக்குகளைக் கொண்டு சிறந்திலங்கியது என்பது, 'பழந்திரா

விடர்கள்' என்ற வியாசத்தில் ஸ்ரீ E. S. W சேஞ்திராஜா அவர்கள் L. L. B. M. R. A. S. எழுதிய குறிப்புகளால் விளங்குகிறது.

ஓர் நாட்டின் அறிவு நாகரீக வளர்ச்சியை ஆராய்தற்கு, அந்நாட்டின் அரசியல் முறை, வாணிபம் முதலியவை கருவியாயிருப்பன போல, அந்நாட்டின மொழி திட்பநுட்பஞ்செறிந்த இலக்கிய இலக்கண அமைதியுற்று வளப்பமுற்றிருப்பதும் கருவியாம். இம்முறையில் நக்காப மொழியாகிய தமிழ் பிறமொழிகளிற் காணப்பெறாத பொருளிலக்கணச் சிறப்புடையதாயிருப்பது கவனிக்கத்தக்கது பொருளிலக்கணம் அகம் புறம் என்றிருவகைத்து. பட்டாங்கு யாண்டும் ஒப்பநிகழ்தலால் பொருளிலக்கணம் எம்மொழிக்கண்ணும் உளதேனும் இலக்கண நூலாகச் செய்து கற்றறியப்படுவது தமிழ்மொழியொன்றிற்றான். தமிழ்மொழிக்கண் பொருளிலக்கணக் கேள்வியான் கற்போர்க்கு நூற்பொருள்கள் நன்குணரப்பட்டு எஞ்சாது சுவைபயந்து நிற்கின்றன. இதனான் எம்மொழியினும் தமிழ்மொழி இனிதெனவும் நறுந்தமிழ், கனிதமிழ் எனவும் சான்றோரால் பாராட்டப்படுவதாயிற்று. மேலும் வேறுமொழியினுதவியின்றித் தனித்தியங்குமியல்புடையது என்பது; "தமிழ்மொழிப்புண

ர்ச்சிக்கப்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைக் குறிப்புவினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும், வடமொழியிற் „பெறப்படா" என வடமொழி தென்மொழிக்கடலைநிலைகண்ட மாதவர் சிவஞானமுனிவர் கூறுவதானுணரப்படும். ஆகவே, தமிழ்மொழி இனிமையுடைய மொழியென்பதும் தனித்தியங்கும் தனிமொழியென்பதும் பெறப்படுவதாம்.

எந்நிலத்து மக்கள் தம்மொழியை வளர்க்கின்றார்களோ அந்நிலத்து மக்களே முன்னுக்கத் துயர்ந்தவராவர். இவ்வுண்மை மேனாட்டு நாகரிகமக்களிடத்தும், ஜப்பானியரிடத்தும், நந்நாட்டில் வங்காளிகளிடத்தும் ஆந்திரர்களிடத்தும் கண்கூடாம். இவர்கள் யாவரும் தத்தம் மொழியிலுள்ள நூல்களைக் கிரமமாக ஆராய்ந்தும், காலந்தோறும் பயன்படத்தக்க நூல்களையியற்றியும், தம்மொழியிலில்லாத நூல்களைப்பிறமொழிகளினின்றும் மொழிபெயர்த்தும், முன்னிருந்தருகிய பயன்படுநூல்களைத் தேடிப்பதிப்பிட்டுஞ்செய்தும், வானசாத்திரம், இரசா

யன சாத்திரம், பிரகிருதிசாத்திரம் முதலியவை
களைத் தாய்மொழியிலேயே பயிலத்தக்க வித்தியா
சாலைகளை ஏற்படுத்தியும் தத்தம் மொழியை வளர்
த்துப்பெருமையுற்றுள்ளார்கள்.

தமிழ்நாட்டு மூவேந்தர்களாகிய சேரபாண்
டிய சோழமன்னர்களாலும், குறுநில மன்னர்க
ளாலும், புலவர்களாலும் பாராட்டி வளர்க்கப்பெ
ற்ற நம் பைந்தமிழ்மாது பின்னர் வந்த ஆட்சி
வேறுபாட்டால் ஒளியிழந்து உறக்கங்கொண்டு
இயங்கினளாயினும், பதினொன்பதாம் நூற்றாண்
டின் பிற்பாதி முதல் மிஷனரிமார் ஒருபாலும், ஆரி
சாட்சியார் மறுபாலுமாய் அவளுக்குத் தாதியரும்
தோழியருமாகி அக்கம் பக்கம் பவனிவர, அச்சி
யந்திரசாலை ஒருபுறமும் வித்தியாசாலை மறுபுறமு
மாக நின்று கைலாகுகொடுத்து உடன் செல்லச்
செல்லும் இக்கன்னியின் கன்னல்மொழி, ஒய்யார
நடை முதலியவற்றையுணர்ந்து செவிலித்தாயுறவை
பொருந்திய பலவாறாகச் சிதறுண்டு ஒளிமழுங்கி
நின்ற புலவர்களை ஒருங்கு கூட்டி நச்சுமதியிலுணரும்
முச்சங்கத்தின் பின் நான்காந்தமிழ்ச்சங்கமொன்
றை 1901௵ மேமீ 24௳ சங்கம் வளர்த்த கூட
லாகிய இம்மதுரையில் நிறுவி, அதன் வாயிலாகக்
கிடைத்த பலபிரபுக்களின் பொருளும் உதவியும்

கொண்டு, தேடுவாரும், படிப்பாரும் இன்றிச்செல் லுக்கிரையாய் மூலைக்குமூலை துயின்று பூச்சணம் பிடித்துக்கிடந்த ஏட்டுச்சுவடிகளை அறிஞர் மூல மாகச்சேகரித்து எழுதுவோரால் ஏற்பட்ட கரலி கித அபத்தங்களை வரன்முறையறிஞர்களைக்கொ ண்டு களைந்து தமிழுலகு கண்டு மகிழும்வண்ணம் அச்சுவாகனமேற்றி யலங்கரித்துச் சிறப்பளித்த ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவரவர்களின் தமி ழ்ப்பற்று நம்மாலும் நம்வழித்தோன்றல்களாலும் மறக்கப்படாததொன்றன்றோ? நமது சீர்பதமிழ் மொழி இயல் இசை நாடகம் எனும் முத்திறம் வாய்ந்த இயல்பினையுடையது. இயற்றமிழென் பது உலகவழக்கு செய்யுள்வழக்கு எனும் இரு வகைவழக்கினும் இயங்குகின்ற இலக்கிய இலக் கண நூல்களின் தொகுதியெனக். இசைத்தமி ழென்பது சொல்லினியிசைத்துப் பண்ணியங்கு மாறு தாளத்தின் வரையறுத்துப் பொருளமைதி பெறப் பாடும் பாட்டும், இசையின்வழிப்பாகப் பண் பிறக்கும் பாட்டுமாகிக் கேட்பார்க்கின்பம் பயக் கும் பான்மையது. நாடகத்தமிழென்பது இயலும் இசையும் உரையும் பொருந்திக் காண்பார்க்கும் கே ட்பார்க்கும் காட்சியின்பமும் கேள்வியின்பமுமளி த்துப் பொருள்பெறக் கதைதழுவி வரும் கூத

துவிகற்பமுடையது. இம்மூவகையிலக்கணமும் அகத்தியனார்தென்னாடடைதற்கு முன்னரேதமிழ் நாட்டில் நூலளவாக வழங்கியவெனினும், அந் நூல இன்னினனபெயருடன் வழங்கிறறென்பது தெறறென விளங்காதொழிந்தமையால் அகத்தியர் செய்த இலககணமே முத்தமிழிற்கு முதனூலாக கபபெறப்பட்டதென்க.

இவ்வகத்தியம், வேறெம்மொழியினும் இது வரை காணப்படாத 1200 சூத்திரங்களியன்றதென்று கருதப்படுமாயின், இதறகு ஏற்றஇலக்கியம் தமிழ்நாட்டில வெகுகாலத்திறகு முன்னிருந்தே ததும்பித்தழைததுச சிறந திருககவேண்டு மெனபது,

"இலககணம் என்ப திலககிய முறையுற
வைதத தென்று வழங்கப படுமே"
"இலக்கியம இன்றி இலககணம இன்றே
எள்ளின் றாகில எண்ணெயும இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினினின் றெடுபடும் இலக்கணம்"

என்ற இவ்வாசிரியர் சூத்திரங்களாலெளிதில உணரத்தக்கது இவவகத்தியம தலைசசங்கத்துக்கும் இடைசசங்கத்துக்கும இலக்கணமாகச சிறந்தது.

ஆயிரக்கணக்கான சூத்திரங்களினமைந்து கற்பார்க்கருமையுடையதாகி நின்ற அவ்வகத்தியத்தை ஆசிரியர்பால கற்றுணர்ந்த தொலகாப்பிய முனிவர் முதலிய பன்னிருமாணவரும, யாவரும எளிதிற் கற்றின்புறுமாறு தததம பெயரான் வெவ்வேறிலக்கணம இயற்றியதுடன், பன்னிருவரும சேர்ந்து பன்னிருபடலம என்னும நூலொன்றும் இயற்றினார்கள. இவற்றுள திரணதூமாக்கினியென்னும இயற்பெயரையுடைய தொலகாப்பியனாராற் செய்யப்பெற்ற இலக்கணமே தொலகாப்பியம் எனபபடும. இது அகத்தியத்துடன் இடைச்சங்க காலத்திலக்கணமாகப பொருந்தி விளங்கியதுடன்,நாளிதுவரை தமிழுக்கோர் தனிச்சுடரபோல விளங்கும் இலக்கண நூலும ஆகும. இது எழுத்து, சொல, பொருள் என்னும மூன்றதிகாரங்களையுடையது ஒவ்வோர் அதிகாரமும தனித்தனி ஒன்பதியலகளையுடையது. இயலகளின் வைப்புமுறையும அவை காணப்படும இடமும அவ்வவ்வதிகார முதலிற பதிப்பிக்கப்பட்டிருக்கும சூத்திரத்தொகை வகைச செய்யுள்களாலும, உள்ளுறையாலும் உணரப்படும

இறையனார், இயற்றமிழ் முதல் இலக்கண நூலாகச்சிறந்திலங்கும் இந்நூற்கு, உரையாசிரிய

ராகிய இளம்பூரண அடிகள், சேனாவரையர், பேரா
சிரியர் கல்லாடர், நச்சினார்க்கினியர் என்ற ஐவர்
உரைவிரித்துள்ளார்கள். முதன்முதல் இவர்களில்,
அறிதற்கரிதாகிய தொல்காப்பியக்கடலைத் தம்மதி
வலிகொண்டு கடைந்து முதல் இலக்கணவமு
தம் அளித்த பெரியார்; இளம்பூரண அடிகளாவர்.
இவர் உரைப்போக்கைத்தழுவி நன்னூலியற்றிய
பவணந்தியார் அந்நூலிற் சில சூத்திரங்கள் செய்
திருப்பதாகச் சொல்லப்பெறுதலால் பவணந்தியார்
க்கு முந்தியவராவர் நமதடிகள். இவர் தொல்காப்
பியம் முழுமைக்கும் உரையற்றியவரெனினும்
எழுத்திற்கும் சொல்லுக்கும் பொருளில் முதலி
ரண்டியல்களுக்கும் எழுதிய உரைகளே வெளிவந்
துள்ளன. பழந்தமிழ் நூற்பதிப்பாளரும், சென்னை
க்கு மாட்சிமிக்க வேல்ஸ் இளவரசரவர்கள் இவ்வரு
டாரம்பத்தில் விஜயம் செய்தகாலத்துப் பரிசில்
அளிக்கப்பெற்ற தமிழ்ப்புலவர் நால்வரிலொருவ
ரும் ஆகிய மகாமகோபாத்தியாயர் ஸ்ரீ உ. வே. சாமி
நாதையரவர்கள் பதிப்பித்துள்ள இசைப்பாவாகிய
பரிபாடல் நூலிற்கிடைத்த 22 பாடல்களுக்குமேல்
“ஆயிரம் விரித்த” வாஞெற்றழிவி” என்னும் முதற்
குறிப்புடைய பாடல்களிரண்டும் பரிபாடற் செய்
யுட்களெனப் பொருளதிகாரச் செய்யுளியற்கு

இளம்பூரண அடிகள் இயற்றிய உரையிற் காட்டப் பட்ட மேற்கோளான் விளங்கினமையின் பரிபாட லிறுதியிற் சேர்க்கப்பட்டன என்று குறிக்கப்பட் டிருத்தலால் இளம்பூரணவடிகள் இச்செய்யுளியல் போல, மற்ற இயல்களுக்கும் உரைசெய்திருப்பவ ரீகவே கொள்ளப்படுகிறது.

இவ்வுரையாசிரியருடைய கொள்கைகளைப் போற்றுமிடம் போற்றி உரையாறுபடுமிடங்கட்குச் சமாதானங்கூறி உரையியற்றியவர் வடநூற்கட லிலைகண்டுணர்ந்த சேனாவரையர் என்பவர். இவர் சொல்லதிகாரமொன்றற்கே கற்றோர் பலராலும் போற்றப்படும் சிறந்த உரையியற்றியுள்ளார். இவர் உரையிற் சிலபகுதிகளை நச்சினார்க்கினியர் மறுத் துரைப்பதுகொண்டு இவரை நச்சினார்க்கினியர் காலத்துக்கு முற்பட்டவர் எனலாம். இனி பேரா சிரியர் சொல்லதிகாரத்துக்கும், தொல்காப்பியம் முதலிய இலக்கண இலக்கிய நூல்களை அச்சிற் பதி த்து யாவர்க்குமுதவிய புதுக்கோட்டை மாஜி ஜட்ஜ் ராவ்பகதூர் திருமான். சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் பி. ஏ. பி. எல். ஆல, நச்சினார்க்கினிய ருரையென்று அச்சிடப்பட்டிருக்கும் பொருளதி காரத்தில் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யு ளியல், மரபியல், என்பவற்றுக்கும் உரைசெய்தவர்

என்பது சேதுசமஸ்தான வித்துவான் ஸ்ரீமா. இரா
கவியங்காரவர்கள், மதுரைத்தமிழ்ச்சங்கச் செந்
தமிழ்ப்பத்திரிகையை நடத்தியகாலத்தெழுதிய
வியாசங்களாலும் அவர்களாராய்ச்சியுடன் வெளி
வந்திருக்கும் செய்யுளிபல முகவுரையாலும் விளங்
குவதாம். ஆத்திரேயன் பேராசிரியன் எனப்படு
தலால், இந்நூன்முகத்துப் பதிப்பிக்கப்பட்டிருக்
கும் பொதுப்பாயிரம் செய்தவரும் இவரே எனக.
இவரே, திருச்சிற்றம்பலக்கோவையாருக்கும், குறுந்
தொகையில் முதல 380 செய்யுள்களுக்கும் உரை
செய்த நல்லறிவுடைய தொல்பேராசிரியர் இவர்,
கி பி. நான்காவது நூற்றாண்டில் புத்தரைவென்ற
வராகச்சொல்லப்படும் சைவசமயாசாரியர் நால
வருள் முதல்வராய வாதவூரடிகளென்னும் ஸ்ரீ மா
ணிக்கவாசகசுவாமிகளருளிய திருச்சிற்றம்பலக்
கோவையார்க் குரைசெய்திருக்கின்றவராதலால்,
மாணிக்கவாசகர் காலத்துக்குப்பிந்தியவரும், இவர்
உரைவிரிக்காதுவிட்ட குறுந்தொகை இருபது செ
ய்யுள்களுக்கு உரையிட்டவராகிய நச்சினார்க்கினிய
யர் காலத்துக்கு முந்தியவருமாவர்.

கல்லாடர், கல்லாடக்குடியிற் பிறந்தவர் இப
பெயருடன் இருவர் காணப்படுகின்றார். இவருள்
முன்னவர், அம்பர்கிழானருவந்தை, பொறையாற

றுக்கிழான், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகிய மூவரையும் பாடிய கடைச்சங்கப்புலவர். பின்னவர், கி. பி. நான்காவது நூற்றாண்டிலிருந்த ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளருளிய திருச்சிற்றம்பலக்கோவையாரின் கிளவிகளின் அருமைகளை விளக்கும் நூறு அகவற்பாக்களாலாகிய கல்லாடம் என்னும் நூல்செய்தவர். இவர் சொல்லதிகாரத்துக்கு உரைசெய்தவரென்ப. இவர்செய்த உரை முழுமையும் அகப்படுதற்கில்லை. எனது கைவசமிருக்கும் கிளவியாக்கவிருத்தி மற்றையாசிரியர் விருத்தியுரைகளுடன் ஆராய்ந்து பின்னர் வெளியிடப்பெறும். நச்சினார்க்கினியர் என்பவர் மதுரையில் பாரத்துவாசர் கோத்திரத்துதித்தவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்துக்கும் சொல்லதிகாரத்துக்கும் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல், ஆகிய ஆறியல்களுக்கும் உரைசெய்துள்ளவரென்பது இப்பொழுது துணியப்பட்டுள்ளது எவரும் நுழைந்து காணமுடியாவண்ணம் இருண்டுகிடந்த தொல்காப்பியம் என்னும் சாக்கறைப்பொருளை இன்னதென்று முதலில் எடுத்துக்காட்டிய உரையாசிரியர் வழிப்புகுந்து அவர்வழீஇய வழியையும், அவரது

பற்றி அரியவுரை செய்த சேனாவரையருரைக் கோளையும் மறுக்குமாற்றலுடையவர் சிந்தாமணி கலித்தொகை பத்துப்பாட்டு, புறநானூறு திருக்குறள் முதலிய சங்கநூல்களுக்குரை யெழுதியவர். திருக்குறளுரையாசிரியர் பதின்மருள் நச்சர் எனப்படுபவர் இவரே. 'அந்நூலுரையாசிரியரிற் சிரேட்டமானவரென்று சொல்லப்படும் பரிமேலழகர் காலத்தவர் தொல்காப்பியத்தில் இருபத்தெண்ணியல்களுக்குரைசெய்திருப்பவரும் மேற்கூறிய உரையாசிரியர்களிற் காலத்தாற் பிற்பட்டவரும் இவரே.

இவ்வைந்துரையாசிரியர்க்குப்பின், இற்றைக்குச்சுமார் 200 வருடங்களுக்கு முன், இருமொழிப் புலவர் சிகாமணியாகச் சிறந்த கச்சியப்பமுனிவர் முதலிய பன்னிருமாணவர்களுக்கு ஆசிரியராகிக் காஞ்சிப்புராணமாதிய பலநூல்களியற்றிய சிவஞானபாடியகர்த்தா ஸ்ரீசிவஞான முனிவர் 'தொல்காப்பியப்பாயிரமுதற் சூத்திரவிருத்தியும், 1914 ஆம் காலஞ்சென்ற மதுரைத் தமிழ்ச்சங்கத்துப்புலவரும், திருக்குறள் சண்முகவிருத்தி முதலியவையியற்றியவருமான, சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார் தொல்காப்பியப்பாயிர விருத்தியும், (நூன்மரபு விருத்தி) வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வுரைகளில், எழுத்ததிகாரத்துக்கு நச்சி
னார்க்கினியமும் இளம்பூரணமும் சுமார் 80-வரு
டங்களுக்குமுன் சென்னைச்சகலகலாசாலைத்தமிழ்ப்
புலமை நடத்திய ஸ்ரீ மழவை. மகாலிங்கையரவர்
களால் முதன்முதல் அச்சிடப்பெற்றன. தொல்காப்
பியமுழுமையையும் உரையுடன் பதிப்பித்தலைச்
செய்யவிரும்பிய ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை
யவர்கள் சொல்லதிகாரத்துக்குச்சிறந்த உரையாகக்
கருதப்படும் சேனாவரையத்தை யாழ்ப்பாணத்து
நல்லூர் மகாவித்துவசிரோமணியும் சைவசித்தாந்
தப்பிரவாதகருமான ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்க
ளைக்கொண்டு பரிசோதித்து 1868-ல் பதிப்பித்தார்
கள். பின்னர் 1885ல் பொருளதிகாரத்துக்கு நச்
சினார்க்கினியத்தைப் பல பிரதியொப்புநோக்கிப்
பதிப்பித்து வெளியிட்டார்கள். இதற்குமுன் மழ
வை மகாலிங்கையர் அச்சிட்ட எழுத்ததிகார நச்
சினார்க்கினியம் கிடைத்தற்கருமையாக அவ்வதிகார
நச்சினார்க்கினியத்தையும் 1891-ல் வெளியிட்டுத்
தொல்காப்பியத்துக்கு நச்சினார்க்கினியமாவது முற்
றிலும் யாவர்க்குங்கிடைக்குமாறு செய்தார்கள். இவர்
கள் இங்ஙனம் செந்தமிழ்த்தொண்டை மேற்கொ
ள்ளாதிருப்பார்களாயின், "பலகாற்பழகினும் தெரி
யா உளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோ

வையார், மூன்றினும் முழுங்கும்" என்று சிறப்பித்துரைக்கப்பட்ட 'இலக்கணக்கொத்தாசிரியர் மொழிக்கிணங்க, சங்ககாலத்திலக்கியங்களாகிய எட்டுத்தொகை பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு முதலிய நூல்களுக்கு இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்தை முழுமையும் நம்மில் எவரும் கண்டுகளித்து, தொல்காப்பியனாரால் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டுள்ள சரித்திரக்கூறுகளையும், மக்கள் இயல்புகளையும், பண்டைவழக்க ஒழுக்கங்களையும் தெரிந்துகொள்ள இயலாதெனக.

சிலவருடங்களுக்குமுன் சென்னைப் போலீஸ் அசிஸ்டெண்டு கமிஷனர் ஸ்ரீ எஸ். பவானந்தம் பிள்ளையவர்களால் பொருளதிகார நச்சினார்க்கினியம் வெளியிடப்பட்டிருப்பதுடன்; வக்கீல் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்களால் அகத்திணை புறத்திணையியல்களின் இளம்பூரணம் அச்சிடப்பட்டுள்ளது. மதுரைத்தமிழ்ச்சங்கப்பிரசுரமாகச் செய்யுளியலுக்கு நச்சினார்க்கினியமும் இளம்பூரணமும் ஸ்ரீ ரா இராகவையங்காரவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளன.'

சிலவருடங்களாக, எனது இயற்றமிழ் நண்பர்கள்டலர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச

ச்சினார்க்கினியம், சொல்லதிகாரம் சேனாவரையர்,
ஆகிய இரண்டு புத்தகங்களும் சங்கத்தமிழ்ப்பரீட்
சைக்குக் குறிக்கப்பட்டிருப்பினும், அவை எங்கும்
கிடைத்தற்கில்லையென்றும், அவற்றைப்பழஞ்செய்
யுள் நூல்களின் அருமணிகளைத் தொகுத்துப்பதி
ப்பித்தவரும் தாங்கள் தொல்காப்பியத்திற் கிடை
யாத பகுதிகளை அச்சிட்டு வெளிப்படுத்தின பேரு
தவியாகவிருக்குமென்றும் கூறினார்கள். இவர்க்குச்
சொல்லுக்கியைந்த உரையுடன் பதிப்பிப்பதாயின
ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு பிடிப்பதாகவும்
அங்ஙனம் ஏதாவதொருபகுதியைப் பதிப்பிக்கலா
மென்று முற்படுதல் புத்தகத்தை யச்சிடும்புகழை
யே பொருளாகமதிக்கக்கூடியபொருளாளர்களாலே
யே கூடியகாரியமென்பதாகவும் உணர்ந்த யான்,
தொல்காப்பியமூலத்தையேனும் சூத்திரநூதல்பொ
ருட்குறிப்புடன் பதிப்பித்தால், தாய்மொழிப்பற்
றும் உணர்ச்சியும் மிகுந்துவருமிக்காலத்தில் தமி
ழறிஞர் அதனை விருப்புடனேற்றுப் போற்றுவார்
களென்று கருதலானேன். இக்கருத்தை எனது
நூல்களை வெளியிட்டுவருகின்ற ஸ்ரீ பி. நா சிதம்பர
முதலியார் அண் கோ ஏஜண்டு, திருவாளர் மு கிரு
ஷ்ணபிள்ளையவர்களிடம் தெரிவிக்க அவர்களும்
உயரிய இலக்கணநூலாகிய தொல்காப்பியத்தின்

மூலத்தையாவது இப்பொழுது வெளியிடுவோம் அதற்கானவற்றைத் தயாரியுங்கள் என்று பதில ளித்தார்கள். இவ்வித இணக்கமொழி எனதுள்ளத்தைக் களிகொள்ளச் செய்யவே, கிடைக்கக்கூடிய தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தை ஆதாரமாகக் கொண்டு மூலசூத்திரங்களை நுதல்பொருளுடன் பிரதிசெய்ய ஆரம்பித்தனன்.

பிரதி தயாரிக்குங்காலத்தில் தொல்காப்பியச் சூத்திரங்களின் தொகை இத்துணையென வரையறுக்கப்பட்டுள்ளதா என்று கவனித்தபொழுது எழுத்ததிகாரச் சூத்திரங்கள் இத்துணையென்பதைக் குறிக்கும் வெண்பாக்களும், சொல்லதிகாரச் சூத்திரங்கள் இன்னின்ன இயல்களுக்கு இத்துணையெனக் குறிக்கும் விருத்தங்களும் காணப்பட்டன வன்றி, பொருளதிகாரச் சூத்திரங்களித்துணையென்பதையாவது தொல்காப்பிய முழுமைக்குமுரிய சூத்திரங்கள் இத்துணையென்பதையாவது காட்டும் செய்யுள் காணப்படவில்லை எனினும், இதனைக்குறித்துச் செய்யுள்கள் சொல்லப்பெறுமவிரா, ஏட்டுப்பிரதிகளில் ஓரோ வழி காணப்படலாமென்று நினைத்து; பழ நூற்களையாராய்ச்சி செய்து வருந்தன்மையிலுள்ள செந்தமிழ்த்தொகுதிகளைப் பார்வையிடலானேன். செந்தமிழ்த்தொகுதி 2,

ப்குதி 4-ல் 'ஆராய்ச்சி' என்ற தலைப்பில் வேத பத்திராசிரியர், ரா இராகவையங்காரவாகள், சங்கத்திற்குக் கிடைத்த தொலகாபபிய ஏட்டின்றுதியில இந்நூல் 170-ம் பக்கத்தில பதிபபிக்கபபட்டிருக்கும், வெண்பாககள இரண்டும் காணபபட்டனவென்றும், அதன்படி பொருளதிகாரச் சூத்திரஙகள 665 எனறும், தொலகாபபிய முழுதுக்குமுளள சூத்திரங்கள 1610 எனறும விளஙகுகின்றனவென்றும், தாமோதரமபிள்ளையவாகள வெளிபபடுத்தியுளள பொருளதிகாரத்தில சூத்திரங்கள 666 ஆககாணபபடுகின்றதென்றும, தொலகாபபிய முழுதுக்குமுளள சூத்திரஙகள 1612 ஆககாணபபடுகின்றதென்றும குறிபபிட்டிருபபதையுணர்ந்ததும, முதலில பொருளதிகாரச் சூத்திரஙகளை யெண்ணிக கணக்கிடலானேன. அஙஙனம எண்ணிவருமபொழுது செய்யுளியலில ஓர் சூத்திர எண்ணுக்கு அடுத்துபபோடபபடும சூத்திர எண் அவவெண்ணுககொன்றதிகமாகப பதிபபிக்கபபட்டிருந்தமை தெரிந்து, அவவச்சுபபிழையைத்திருத்திச சூத்திரஙகள ஏடு வெண்பாபபடி 665 ஆக இருபபதுணர்ந்து மகிழ்ந்தேன். ஒன்றிறதிருத்தங்கண்ட யான், தொலகாபபிய முழுமைக்குமுரிய சூத்திரவெண் 1610 பிழைபடுவ

தறிந்து அதனுண்மையை ஆராய்ப்புகுந்தனன்.
எழுத்ததிகாரச் சூத்திரங்கள் மொத்தம் 483 என
இந்நூல் 6 ம் பக்கம் வெண்பாவாற் கிளையிய இருந்த
மையால், சூத்திர மாறுபாடுகள், சூத்திர மொத்
தத்தொகை வரையறைச்செய்யுளில்லாத சொல்
லதி-காரத்திலதான் இருக்க வேண்டுமென்றெண்
ணிய பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டிருக்கும்
சொல்-நச்சினார்க்கினியம், சேனாவரையம் இரண்
டையும் வைத்துத் தனித்தனி இயல்களின் சூத்தி
ரத்தொகையை ஒப்பு நோக்கியகாலத்து, கிளவி
யாக்கம், வேற்றுமை மயங்கியல், உரியியல் இவ்
வியல்களின் சூத்திரத்தொகை கூடியுங் குறைந்து
மிருக்கக்கண்டனன். இவ்வேற்றுமை; உரையா
சிரியர், கருத்து மாறுபட்டால் ஒரு சூத்திரத்
தின் முதலடியையோ ஈற்றடியையோ தனிச்சூத்
திரமாக்கி யுரையெழுதிப் போந்தமையாலாயது
என்பது விளங்குகிறது. கிளவியாக்கம் ருச (537)
சூத்திரத்தின் முதலடியாகிய 'ஒன்றுவினை மருங்
கின் ஒன்றித்தோன்றும்' என்பதை நச்சினார்க்
கினியர் தனிச்சூத்திரமாக்கியிருப்பதையும் வேற்
றுமை மயங்கியல் ருகு (599) சூத்திரத்தைச் சேனா
வரையர் 598ன் இறுதியடியாகச் சேர்த்திருப்ப
தையும் கண்டு இவற்றுள் 537ம் சூத்திரத்தைச்

சேனாவரையர் உரைக்கிணங்க ஒரு சூத்திரமாகவும் 598ன் ஈற்றடியாகிய 'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்பதை நச்சினார்க்கினியருரைக் கியைய 599ல் தனிச்சூத்திரமாகவும் பதிப்பிக்க முற்பட்டன. உரியியலில் 787ம் சூத்திரத்தில் "ஏற்பற்று நம்" என்பதையும், 795ம் சூத்திரத்தில் "மாலை இயல்பே" என்பதையும் சேனாவரையத்தைப் பிரதி செய்தவரின் கரவுபூவால் பிரித்தெழுதப்பட்டிருக்குமென்றுன்னி, நச்சினார்க்கினியருரைக்கிணங்கவே 787, 795ம் சூத்திரங்களை சோதனைப்பதிப்பிக்கலாயினன். இவ்விதம் பொருத்தாதவிடத்து சொல்லதிகாரசூத்திரங்கள் மொத்தத்தில் 463 ஆகக்காணப்படுமன்றி, இயல்களின் சூத்திரத்தொகையும் வரையறுக்கப்படாது; தொல்காப்பிய முழுமைக்குமுள்ள சூத்திரத்தொகையும் 1611 எனவே ஏட்டுப்பாட்டுக்குமாறுகக் கணிக்கப்படவேண்டுவதாம். இவ்விடர்ப்பாடில்லா திருக்குமாறு கிளவியாக்கச்சூத்திரங்கள் 61 என்றும், வேற்றுமை மயங்கியற் சூத்திரங்கள் 35 எனவும், உரியியற்சூத்திரங்கள் 98 எனவும் வரையறுத்துச் சொல்லதிகாரச் சூத்திரங்கள் மொத்தம் 462 ஆகுமாறு செய்தனன். இவ்வியைபுக்கிசைய எழுத்ததிகாரச் சூத்திரங்கள் 483, சொல்லதிகாரச் சூத

திரங்கள் 462, பொருளதிகாரச் சூத்திரங்கள் 665, என்று வரையறுக்கப்பட்டு, தொல்காப்பிய மொத்தச் சூத்திரங்கள் **1610** என முடிவு செய்யப் பட்டிருக்கின்றது.

இம்மூலப்பதிப்பில் உரையாசிரியர்களாலும் பதிப்பாளர்களாலும் சுட்டப்பட்ட பாடபேதங்கள் அன்னவர் பெயர்க்குறிப்புடன் குறித்தலைப்பில் அடியிற் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதில் செய்யுளியல் மூலத்திற்குக் காட்டப்பட்டிருக்கும் பிரதி பாடங்கள் ஸ்ரீ ரா இராகவையங்காரவர்கள் பதிப்பிலிருந்தும் குறிக்கப்பட்டவை. பாடபேதக்குறிப் புடனும், சூத்திரத்தலைப்பொருளுடனும் வெளி யிடப்படும் இம்மூலப்பதிப்பு பழந்தமிழ்ப்பதிப்பாளர்க் கும், மேற்கோள் எடுத்துக்காட்டுவோர்க்கும், மன னமடங்கிச் சிந்தனைசெய்வார்க்கும், பெரிதும் பயன்படக்கூடுமென்றெண்ணுகிறேன். இந்நூலி லுள்ள 'உரியியல்' 'மரபியல்' செய்யுளியல் களின் சூத்திரங்கள் தமிழறிஞர்களால் மனனஞ்செய்யப் பெறுதல் நன்மையுடைத்து. இப்பதிப்பு; 'தொல காப்பியமூலம்' ஒன்று சுத்தமாகவும் திருத்தமாக வும் பதிப்பிக்கப்பெறின், யாவரும் தமிழ்த்தொல் லிலக்கணச்சூத்திரங்களின் தன்மைகளையாவது கண்ணுறுதற்கெளிப்படுவார்கள் என்று தமிழவை

தோறும் தமிழ்மொழியெழுத்துச்சிறப்பனை விதந்
தெடுத்தோதிவரும் தமிழறிஞர்க்குறு துணையான
சூபிரண்டிங் எஞ்சினீர் திருத்தகு P. V. மாணிக்
கநாயகர் அவர்களுடைய கருத்தைத்தழுவிவெளி
வந்ததாகும் இப்புத்தகமெவ்வொரு புத்தகசாலைக்
கும், சங்கத்துக்கும், பள்ளிக்கூடத்துக்குப் மிகவும்
இன்றியமையாதது

இந்நூற்கு ஆங்கிலமுன்னுரை யளித்துஞ்
சிறப்பித்த, மதுரைத்தமிழ்ச்சங்கக் கௌரவக்காரி
யதரிசியும், உயர்தரநியாயவாதியும், சென்னைச்சட்
டசபையுறுப்பினருமாகிய, ஸ்ரீமாந் T. C. சீனி
வாசையங்காரவர்களுக்கும், சிறப்புரையுதவிய,
மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலைத்தலைமைத்தமி
ழாசிரியரும் செந்தமிழ்ப் பத்திராசிரியருமான
ஸ்ரீமத். திரு நாராயணையங்காரவர்களுக்கும், சிறப்
புப்பாயிரமளித்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவர்
மறைத்திருவாளர். ம சுந்தரபாண்டிய ஓதுவார்
அவர்களுக்கும் இப்பதிப்பை விரைவில் வெளிப்
படுத்தும்வண்ணம் தூண்டி பிரதிசெய்யுங்காலத்
தும் பதிப்பிக்குங்காலத்தும் தமது தேகசிரமத்
தைப்பொருட்படுத்தாது உடனிருந்தொப்பு நோக்
கியுதவிபுரிந்த மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலைத்
தமிழாசிரியரும் எனது அரியநண்பருமாகிய கவி

ராயர் சு. நல்லசிவன் பிள்ளையவர்களுக்கும் எனது உளமுவந்த நன்றியைச்செலுத்துகின்றேன்.

எனது இலக்குமிராம் கோவைமணிகளானதையும் அச்சிட்டு வாசித்துமகிழ்ந்து, அதன் ஏழுவது மணியாகவெளிப்படும் இதனை விரைவில் அச்சிட்டுலவசெய்யுமாறு ஊக்கிய பி. நா. சிதம்பர முதலியாரவர்கள் இவ்விலக்கணமணியைக் கண்டுகளிக்குமுன் விண்ணாட்டின் விருந்தினராகச் சென்றமையின், அவருடன்பிறப்பினராயிருந்து புத்தக பரிபாலனம்புரிந்து எனக்கு ஊக்கமுதவி வரும திருவாளர்-பி. நா. தங்கவேலு முதலியாரவர்களுக்கும், ஷை புத்தக வியாபார ஏஜண்டும் காலத்திற்கியைந்த நூல்கள்பல தொகுத்துதவுமாறு தூண்டி நனமணிகள நிலவுறச்செய்பவருமான சைவதிருவாளா. மு. கிருஷ்ண பிள்ளையுவாகளுக்கும், சுத்தமாகவும் திருத்தமாகவும் அச்சிட்டுதவிய மதுரை மீனாட்சி விலாஸம் பிரஸ் சொந்தக்காரா மு. அழகர்சாமிச்செட்டியாருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனன்.

எனது கலாசாலைக்காரியங்களுக்கும் பத்திரிகை வேலைக்குமமத்தியில பதிப்பிக்கப்பட்ட இப்பதிப்பில அயர்வாலும தளர்வாலும் ஏற்பட்ட சில

பிழைகளைப்பிழைதிருத்தமாகச்சேர்த்து வாசிப்போரை அதற்கியையத்திருத்திக்கொள்ளுமாறு கஷ்டப்படுத்தாமல் அச்சிலவற்றை யானே கையாற்றிருத்தியுள்ளேன்.

இப்புதுமுறைப்பதிப்பைத் தமிழ் நாட்டிலுள்ள மக்களியாவரும் வாங்கி வாசித்துப்பயனடைவதுடன், இத்தகைய வேறு நன்னூல்களையும் பதிப்பிக்குமவண்ணம் வேண்டுவனபுரியுமாறும், அன்னோர்களை வேண்டிக்கொள்கின்றனன். ஒன்றுக்கும் பற்றாத என்னையும் பேரறிஞர்செய்த பெருந்தொண்டுக்காளாக்கி இத்துணை அறிவும் ஆற்றலுமளித்த ஆலவாயமர்ச்சடைக்கடவுள் திருவடிமலரை இடையறாது நினைந்து வணங்குகின்றேன்.

| | |
|---|---|
| நாதமந்திரம் | பு. சிதம்பரபுன்னைவனநாதன், |
| துந்துபி ௵ | |
| வைகாசிமீ கஅ௳ | தண்டமிழ்த்தொண்டன். |

# ஆசிரியர் தொல்காப்பியனார் வரலாறு.

தொல்காப்பியனார் என்பவர் சமதக்கினி புத்திரர். இவரது இயற்பெயர் திரணதூமாக்கினி என்பது. சமதக்கினி பிருகுவம்சத்தர். இப்பிருகு கவியெனப்படும் சுக்கிரன் குலத்துதித்தவர். ஆக, கவி வம்சத்தவர் காவியர் என்றழைக்கப்பெறுவாராயினர். இக்காவியர் என்னும் பெயர் தமிழில் காப்பியர் என்று வழங்கப்பெறும். சமதக்கினியும் அவர் குமாரரும் பிருகு வம்சத்தனராதலால் பார்க்கவர் என்றும், கவி வம்சத்தினராதலால் காவியர் என்றும் அழைக்கப்படுவர். பழமை பற்றி இக்குடி வடமொழியில் விருத்த காவிய குலமென்றும், தமிழில் தொல்காப்பியக்குடியென்றும் சொல்லப்பெறும். தொல்காப்பியத்தின் ஆசிரியராகிய திரணதூமாக்கினி தம் பெயரைக் குலப்பெயராகவே விளங்கச்செய்தலால் தொல்காப்பியர் என்றழைக்கப்பெறலானார். இவருடன் பிறந்தவர் பரசுராமர் என்ப.

இவரது ஆசிரியரும் உடன்பயின்றாரும் :— இவரது ஆசிரியராக அகத்தியனார் விளங்கினாரென்பது

"வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்"

எனவும் பன்னிருபடலப்பாயிரத்தானும், இவருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கர் பன்னிருவரென்பது; இப்பன்னிருபடலத்தின் வழிநூலாக வெண்பாமாலைபாடிய ஐயனாரிதனார்

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த"

என்று பாயிரஞ்சொல்லியிருத்தலானும் விளங்கும். மேற்கூறிய பன்னிரு மாணவர்களாவார், தொல்காப்பியத்தை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்துக் கேட்டுக்குற்றமின்றெனக்கூறுந் தலைமைச் சிறப்புப்பெற்ற அதங்கோட்டாசிரியர், தொல்காப்பியப் பாயிரஞ்சொற்ற பனம்பாரனார்;

செப்பூட்சேய், வையாபிகர், அவிநயர், காக்கைப்பாடினியார், துராலிங்கர், வாய்ப்பியர், கழாரம்பர், நற்றத்தர், வாமனர், தொல்காப்பியர் என்பவர்.

ஆசிரியர் காலம். இவர், குறுமுனி, தமிழ்முனி அமரமுனி என்று சிறப்பித்தோதப்படும் அகத்தியனாரிடம் கல்விபயின்றாரெனப்படுதலால் அவ்வகத்தியர் காலத்தவராவர். அகத்தியனார் தலைச்சங்கத்துப்புலவராக விளங்கிப்பின் இடைச்சங்கத்தும் தொல்காப்பியராதியருடன் புலவராக விளங்கியவர். இவர் காலத்து இவராச்சிரமத்து விஷ்ணு அவதார புருடராகிய ஸ்ரீ இராமர் வந்து தரிசித்து அருள்பெற்றுச்சென்றாரென வான்மீகி கூறுதலானும், சீதையைத்தேடித் தென்றிசைபோய அநுமானுக்கு இடைச்சங்கமிருந்த கபாடபுரத்தின் சிறப்புகள் வான்மீகத்திற்சொல்லப்பெறுதலானும், அரசர் குலத்தை அழித்துவந்த பரசுராமன் இராமருக்குத்தோற்றபின் தவத்திற் புக்கானென்று கூறுதலானும், காவிரிப்பூம்பட்டினத்தரசன் காந்தன் என்பானோடு பரசுராமன் போர் தறித்துவரப் பயந்த காந்தன் அகத்தியன்பாற் சரணடைந்துய்ந்தானென்று கூறுதலானும், இராமருக்கு முற்காலத்தானென்று கருதப்படும் காந்தன் காலத்துக்கு முன்னரே அகத்தியர் தென்றிசைப்போந்து தமிழ்

முதனூலளித்துப் பன்னிரு புலவர்க்கும் கலைய முத ளித்தனரென்க. ஆகவே தொல்காப்பியர் தலைச் சங்க காலத்திறுதியிலும் இடைச்சங்க காலத்தி லும் இருந்திருக்கக்கூடியவர் என்பது புலனும். இடைச்சங்க காலம் கிறிஸ்து பிறக்குமுன் நாலா யிரம் வருடங்களுக்கு முன்னரென்று திருவாளர். தா. பொன்னம்பலம்பிள்ளையவர்கள் எம். ஆர். ஏ. எஸ். முடிவு செய்திருப்பதால் அவர் கணக்கின் படி, இற்றைக்குச் சுமார் 6000 வருடங்களுக்கு முன்னிருந்த இடைச்சங்கத்தின் இலக்கணமாகப் பயின்ற இது, அதற்கு வெகு காலமுற்பட்ட தலைச் சங்க காலத்தில் அரங்கேற்றப்பட்டதெனக் இவ் வாசிரியரைப்பற்றிய விரிவான ஆராய்ச்சி அறிஞ ரால் காலவளர்ச்சியிற் காணப்படும் ஆதாரங்களைக் கொண்டு செய்யப்படவேண்டுவதாம்.

உ

# தொல்காப்பியம்.

## உள்ளுறை.


| பொருள் | | பக்கம் | பாடலெண் |
|---|---|---|---|
| ஆங்கில முகவுரை முதலியன | | ... | .... |
| பதிப்புரை | | ... | ... |
| ஆசிரியர் வரலாறு | | ... | ... |
| ...ப்புச்செய்யுள்கள் | | 1 | 7 |
| சிறப்புப்பாயிரம் | | 3 | 1 |
| பொதுப்பாயிரம் | .. | 4 | 1 |
| எழுத்ததிகாரச் சூத்திரத் தொகைவகை | | 6 | 2 |
| எழுத்ததிகார ஒன்பதியல்கள் :— | | | |
| 1 நூன்மரபு | ... | 7 | 33 |
| 2. மொழிமரபு | ... | 12 | 49 |
| 3 பிறப்பியல் | ... | 19 | 20 |
| 4. புணரியல் | ... | 23 | 40 |
| 5. தொகைமரபு | ... | 31 | 30 |
| 6, உருபியல் | ... | 38 | 30 |
| 7. உயிர்மயங்கியல் | ... | 44 | 93 |
| 8. புள்ளிமயங்கியல் | ... | 59 | 110 |
| 9 குற்றியலுகரப்புணரியல் | | 74 | 78 |
| சொல்லதிகாரச்சூத்திரத் தொகைவகை | | 83 | 1 |

சொல்லதிகாரம்—ஒன்பதியல்கள்:—


| | | | |
|---|---|---|---|
| 1. | கிளவியாக்கம் .... | 89 | 61 |
| 2. | வேற்றுமையியல் ... | 100 | 22 |
| 3 | வேற்றுமை மயங்கியல் | 105 | 35 |
| 4. | விளிமரபு ... | 112 | 37 |
| 5 | பெயரியல ... | 118 | 43 |
| 6 | வினையியல ... | 127 | 51 |
| 7. | இடையியல ... | 137 | 48 |
| 8. | உரியியல ... | 145 | 98 |
| 9. | எச்சவியல் ... | 157 | 67 |
| | பொருளதிகாரசூத்திரத் தொகைவகை | 170 | 2 |


பொருளதிகாரம்—ஒன்பதியல்கள்:—


| | | | |
|---|---|---|---|
| 1 | அகத்திணையியல ... | 171 | 55 |
| 2 | புறத்திணையியல ... | 182 | 36 |
| 3. | களவியல ... | 194 | 50 |
| 4. | கற்பியல ... | 209 | 53 |
| 5 | பொருளியல் ... | 225 | 54 |
| 6. | மெய்ப்பாட்டியல் ... | 235 | 27 |
| 7. | உவமவியல ... | 241 | 37 |
| 8. | செய்யுளியல் ... | 247 | 243 |
| 9. | மரபியல ... | 288-306 | 110 |


தொல்காப்பியத்தின் 21 இயல்களிலுமடங்கிய சூத்திரங்கள் மொத்தம் 1610.

உ

திருச்சிற்றம்பலம்

# தொல்காப்பியம்.

## காப்புச்செய்யுள்கள்.

### கணபதி

தன்றோள் நான்கி னொன்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே (௧)

### சிவபெருமான்

ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே. (௨)

### சரஸ்வதி

தவளத் தாமரைத் தாதார் கோயில
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே (௩)

### அகத்தியமுனிவர்

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பதங்கள்
சிரமேற்கொள்ளுதும் திகழ்தற் பொருட்டே (௪)

## தமிழ்த் தெய்வம்

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை
அனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
உன்னினைந் தேத்தல் செய்வாம் (ரு)

## சங்கப்புலவர்.

தடவரை முனிவன் ஈன்ற
தமிழ்க்கொழுங் குழவி தன்னைப்
படாவெயில் உமிழுஞ் சங்கப்
பலகையாந் தொட்டில் ஏற்றி
நடைவர வளர்த்து ஞால
நனந்தலை மறுகில் விட்ட
மடனறு புலமை யோரை
மனத்திரா நினைத்தும் அன்றே. (சு)

## தொல்காப்பியர்

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுதும் எழுத்தொடு
சொல்காண் மருள்பொருட் டொகைதிகழ் பொருட்டே (எ)

உ

# தொல்காப்பியம்.

அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருளொருவரான
ஸ்ரீபனம்பாரனார் இயற்றிய
சிறப்புப்பாயிரம்

— o —

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பலபுகழ் நிறுத்த படிமை யோனே.

## ஆத்திரையன் பேராசிரியன் அருளிய
## பொதுப்பாயிரம்.

— o,—

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வானயா றன்ன தூய்மையும் வானயாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்
திங்க ளன்ன கல்வியும் திங்களொடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும் வெஃகா உள்ளமும்
துலைநா அன்ன சமநிலை உளப்பட
எண்வகை உறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாளாண் மையும்
உலகியல் அறிதலும் நிலையிய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்துஞ் சொல்வன் மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்

அறவினை பொருட்பயன் இன்பெனும் மூன்றின்
திறனறி பனுவல செப்புங் காலை
முன்னாக கூறிய எண்வகை உறுப்பினுள
ஏற்பன உடைய ராகிப பாறபடச
சொலலிய பொருண்மை சொலலியாங் குணர்தலும்
கனமேலூர் அனமேனோர்க்குத தானபபப படுதலும
செயநநன்றி அறிதலும நீசசார் பின்மையும
மடிதடு மாறறம் மானமபொசச சாபபுக்
கடுநோய சிறறம கானேவ காமம
என்றிவை இனமையும சென்றுவழி படுதலும
அறததுறை வழாமையும குறிபபறிந தொழுகலும
கேட்டவை நினைததலும் பாடம போறறலும
மீட்டவை வினவலும விடுததலும் உரைததலும்
உடைய ராகி நடையறிந திபலுநர்
நனமா ணாக்கா என்ப மண்மிசைத்
தொன்னூறா புலமைத துணிபுலா வோரே.

௧

# தொல்காப்பியம்.

## எழுத்ததிகாரச்சூத்திரத்தொகை வகை.

---

நேரிசை வெண்பா

நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு — பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கம்
தெரிவரிய குற்றுகரம் செப்பு.

எழுத்ததி காரத்துச் சூத்திரங்கள் எல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோ டுளநூறும் — வழுக்கின்றிக்
காணூற் றிருநூற்றைம்பான் மூன்றென்று பாவலர்கள்
மேனூற்று வைத்தார் விரித்து.

---

உ

கடவுள் துணை

# தொல்காப்பியம்.

## எழுத்ததிகாரம்.

—.o:—

முதலாவது

### நூன்மரபு.

1 எழுத்துக்களின் பெயர்முறை தொகை

எழுத்தெனப் படுப,
அகர முதல
னகர இறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

2 சார்பெழுத்துக்களின் பெயரும் முறையும்

அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தமென்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.

௩ ஒரு மாத்திரையுடைய குற்றுயிர் இவையெனல்.

அ இ உ,
எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப ௩

4 இரண்டு மாத்திரையுடைய நெட்டுயிர் இவையெனல்

ஆ ஈ ஊ,
ஏ ஐ,
ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப. ௪

5. ஓரெழுத்தே மூன்று மாத்திரையாக இசையாதெனல்.

மூவள பிசைத்த லோரெழுத் தின்றே ௫

6 மாத்திரை நீளுமாறு கூறுவது.

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர். ௬

7 மாத்திரைக்கு அளவு கூறுவது

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே. ௭

8 பன்னீருயிரிவையெனல்

ஔகார இறுவாய்ப்,
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப ௮

9 பதினெண்மெய்யிவையெனல்

னகார இறுவாய்ப்,
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப. ௯

10 உயிர்மெய்யளவு

மெய்யோ டியையினும் உயிரியல் திரியா. ௰

11 தனிமெய்யெழுத்தளவு.

மெய்யின் அளவே அரையென மொழிப. ௧௧

12 சார்பெழுத்தளவு

அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே. ௧௨

13 மகரக்குறுக்கம்.

அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை. ௧௩

14 மகரவடிவம்

உட்பெறு புள்ளி உருவா கும்மே. ௧௪

15 மெய்யெழுத்தியல்பு.

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல். ௧௫

16 எகர ஒகரத்தியல்பு.

எகர ஒகரத் தியற்கையும் அற்றே. ௧௬

17 உயிர்மெய்யெழுத்தாகுமாறு

புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமொ டுயிர்த்தலும்

ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்தல ஆறே. கஎ

18 உயிர்மெய் ஒலிக்குமாறு

மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே. கஅ

19 வல்லின மெய்.

வல்லெழுத் தென்ப கசட தபற. கக

20 மெல்லினமெய்.

மெல்லெழுத் தென்ப ஙஞண நமன. உ0

21 இடையினமெய்

இடையெழுத் தென்ப யரல வழள. உக

22 மெய் மயங்குமாறு

அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை. உஉ

23 தனிமெய் பிறமெய்யுடன் மயங்குமாறு

டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத் துரிய. உ௩

24 இதுவும் அது.

அவற்றுள்,
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும். உச

25 இதுவும் அது.

ஙஞணந மனவெனும் புள்ளி முன்னர்த்
தத்த மிசைகள் ஒத்தன நிலையே. உ௫

26. இதுவும் அது
அவற்றுள்,
ணனஃகான் முன்னர்க்,
கசஞப மயவவ் வேழும் உரிய ௨௬

27 இதுவும் அது
ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே. ௨௭

28 இதுவும் அது
மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். ௨௮

29 இதுவும் அது.
யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். ௨௯

30 தனிமெய் தனவொற்றோடு மயங்குமாறு,
மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே. ௩௦

31 சுட்டெழுத்துக்கள்
அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு. ௩௧

32 வினவெழுத்துக்கள்.
ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா ௩௨

33 இசைநூலிலக்கணம் இந்நூற்கிசையுமாறு
அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர். ௩௩

நூன்மரபு முற்றிற்று.

## இரண்டாவது

# மொழிமரபு.

---

34 குற்றியலிகரத்திற்கிடனும் பற்றுக்கோடும்.

குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்
காவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே. ௧

35 குற்றியலிகரம் புணர்மொழியகத்தும் வருமெனல்.

புணரிய னிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும். ௨

36 ஒருமொழிக்குற்றியலுகரத்திற் கிடனும் பற்றுக்கோடும்

நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி ஈற்றும்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே. ௩

37 புணர்மொழியிற் குற்றியலுகரந் தன்மாத்திரையிற் குறுகல்

இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான. ௪

38 ஆய்தம் ஒருமொழியுள் வருமாறு

குறியதன முனனர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணாநதவல லாறன் மிசைததே. ௫

39 ஆயதம புணாமொழியகததுவருமாறு

ஈறியல மருங்கினும இசைமைதோனறும. ௬

40 செயயுளியற்கிணணதாக ஆய்தவிலக்கணம்

உருவினும இசையினும அருகித தோனறும
மொழிக்குறிப பெலலாம எழுததின இயலா
ஆயதம அஃகாக காலை யான. ௭

41 அளபெடைககுறி

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும
நெட்டெழுத திமபர் ஒததகுற றெழுத்தே. ௮

42 ஐஔ அளபெடைககுறி

ஐஔ என்னும ஆயீ ரெழுததிற
கிகர உகரம இசைநிறை வாகும. ௯

43 ஓரெழுத்தொருமொழி

நெட்டெழுத தேழே ஓரெழுத் தொருமொழி ௰

44 குற்றுயிர் மொழிநிறைவு

குறறெழுத தைந்தும மொழிநிறை பிலவே. ௧௧

45 மொழியின் பெயர் முறைத்தொகை.

ஓரெழுத தொருமொழி ஈரெழுத் தொருமொழி

இரண்டி றந்திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே. ௧௨

46 தனிமெய் இயக்கம்

மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும். ௧௩

47 உயிர்மெய் பெயர் பெறுமாறு

தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மான மில்லை. ௧௪

48 ஈரொற்றுடனிலை

யரழ என்னும் மூன்றும் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற் றாகும். ௧௫

49 குற்றொற்றுகரமெய்கள்

அவற்றுள்,
ரகார ழகாரம் குற்றொற் றாகா. ௧௬

50 தொடர்மொழி நெட்டெழுத்
தளபிற்றெனல்.

குறுமையு நெடுமையும் அளவிற் கோடலின்
றொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல. ௧௭

51 செய்யுளில் ஈரொற்றிலக்கணம்

செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும். ௧௮

52 மகரங்குறுகுமிடம்

னகாரை முன்னர் மகாரம் குறுகும். ௧௯

53 செய்யுளியலுள மெய் குற்றுகரத்தியல்பு

மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்
எழுத்தியல் திரியா என்மனார் புலவர். ௨௦

54 எழுத்துப்போலி

அகர இகரம் ஐகார மாகும். ௨௧

55 இதுவுமது.

அகர உகரம் ஔகார மாகும். ௨௨

56 இதுவுமது.

அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும். ௨௩

57 செய்யுளியற்படி ஐஔவின் மாத்திரை.

ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான. ௨௪

58 எழுத்துப்போலி

இகர யகரம் இறுதி விரவும். ௨௫

59 மொழிமுதலெழுத்துக்கள்

பன்னீ ருயிரும் மொழிமுத லாகும். ௨௬

60 தனிமெய் மொழிமுதலாகாதெனல்

உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா. ௨௭

61 பன்னீருயிருடன் மொழி
முதலாகுமெய்கள்.

கதந பமவெனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே. ௨௮

62 சகரமெய் ஒன்பதுயிருடன்
மொழிமுதலாதல்

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐ ஔவெனும் மூன்றலங் கடையே. ௨௯

63 வகரமெய் எட்டுயிருடன்
மொழிமுதலாதல்

உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு வருத லில்லை. ௩0

64 ஞகரமெய் மூன்றுயிருடன்
மொழிமுதலாதல்

ஆ எ,
ஒ எனும் மூவுயிர் ஞகாரத் துரிய. ௩௧

65 யகரம் ஆகாரத்துடனே மொழி
முதலாமெனல்

ஆவோ டல்லது யகரம் முதலாது. ௩௨

66 எல்லாவெழுத்தும் முதலாமாறு

முதலா ஏன தம்பெயர் முதலும். ௩௩

67 குற்றியலுகரம் மொழிமுதலாமாறு

குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும். ௩௪

68 மேலதற்கோர் புறனடை

முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான. ௩௫

69 உயிர் மொழிக்கு ஈறாமாறு

உயிரௌ எஞ்சிய இறுதி ஆகும். ௩௬

70 ஔவெனுமுயிர் இன்னுழி ஈறாமென்னல்

கவவோ டியையின் ஔவும் ஆகும். ௩௭

71 எகரவுயிர் மெய்யீறாகாதெனல்

எ என வருமுயிர் மெய்யீ றாகாது. ௩௮

72 ஒகரம் நகரமெய்யொன்றுடன்
ஈறாமெனல்.

ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே. ௩௯

73 ஏ ஓ ஞகரமெய்யுடனீறாகாதென்னல்

ஏ ஓ எனுமுயிர் ஞகாரத் தில்லை. ௪௰

74 உஊநகரவகரமெய்யுடனீருகாதெனல்

உஊ கார நவவொடு நவிலா. சச

75 ச, இருமொழிக்கே யீருமெனல்

உச்ச காரம் இருமொழிக குரித்தே. சஎ

76 பு, ஒருமொழிக்கேயீருமெனல்.

உபப காரம் ஒனறென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே. சஅ

77 ஈருகாவுயிர்மெய இன்னுழி
யீருமெனல்.

எஞ்சிய எலலாம் எஞ்சுதல் இலவே. சசு

78 மொழியீரும் மெய்கள்

ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னொன்றே புள்ளி இறுதி. ருய

79 நகரமெய் இருமொழிக்கே
யீருமெனல்

உச்ச காரமொடு நகாரம் சிவணும். ருக

80 ஞகரமெய் ஒருமொழிக்கே
யீருமெனல்

உப்ப காரமொடு ஞகாரையும் அறறே
அப்பொருள் இரட்டா திவணை யான. ருஉ

81 வகரமெய் நான்மொழிக்கீறாதல்

வகரக் கிளவி நான்மொழி ஈற்றது. ௮

82 னகரவீற்றுத்தொடர்மொழி
ஒன்பதெனல்.

மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன. ௪௯

மொழிமரபு முற்றிற்று.

மூன்றாவது

## பிறப்பியல்.

———.o·———

எழுத்துக்கள்
83 பொதுவாகப்பிறக்குமாறு

உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி

எல்லா எழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல,
திறப்படத் தெரியுங் காட்சி யான. க

84 உயிரெழுத்துக்களின் பொதுப்பிறவி

அவ்வழி,
பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும். உ

85 அ ஆ பிறக்குமாறு

அவற்றுள்,
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும். ௩

86 இகரமுதலியன பிறக்குமாறு

இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்,
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய. ௪

87 உகரமுதலியன பிறக்குமாறு

உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும் ௫

88 உயிர்க்கும்மெய்க்கும்பொதுவிதி

தத்தம் திரிபே சிறிய என்ப.

89 மெய்களுட்சிலபிறத்தற்குச்
சிறப்புவிதி

ககார ஙகாரம் முதனா அண்ணம். ௭

90 இதுவுமது

சகார ஞகாரம் இடைநா அண்ணம். ௮

91 இதுவுமது

டகார ணகாரம் நுனிநா அண்ணம். ௯

92 மேலனவற்றிற்கோரையமகற்றியது

அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின. ௧௦

93 த, நமெய்கள் பிறக்குமாறு

அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம். ௧௧

94 ற, ன மெய் பிறக்குமாறு

அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும். ௧௨

95 மெய் பிறக்குமாறு

நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும். ௧௩

96 ல, ள பிறக்குமாறு

நாவிளிம்பு வீங்கி அண்பல் முதலுற

ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும். க௪

97 ப, ம பிறக்குமாறு

இதழியைந்து பிறக்கும் பகார மகாரம் க௫

98 வகரமெய் பிறக்குமாறு

பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும். க௬

99 யகரம் பிறக்குமாறு

அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும். க௭

100 மெல்லெழுத்துக்கள்
பிறக்குமிடம்

மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும். க௮

101 சார்பெழுத்துக்கள் பிறக்குமாறு

சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும். க௯

102. எழுத்துக்களின் பிறப்புக்குப் புறனடை

எலலா எழுததும வெளிப்படக் கிளநது
சொலலிய பள்ளி எழுதரு வளியிற
பிறபபொடு விடுவழி உறழ்சசி வாரத்
தகததெழு வளியிசை அரிறப நாடி
அளபிற கோடல அந்தணர் மறைததே
அஃதிவண் நுவலா தெழுநதுபுறத் திசைக்கும
மெய்தெரி வளியிசை அளவு நுவன் றிசினே.

பிறபபியல் முற்றிறறு.

நான்காவது

## புணரியல்

103 மொழிக்கு முதலிலும் இறுதியிலும்வரும்
முப்பத்துமூன் றெழுத்துக்கள்

மூன்று தலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டு தலை யிட்ட முதலா கிருபஃ
தறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்.

* இதனை இரண்டு சூத்திரமாகக்கியும உரைப்பா என்பது நச்சினார்க்கினியம்.

எலலா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென் றாயீ ரியல.

104 மொழியிறுதிமெய்கள புள்ளிபெறு
மெனறல

அவ்வுறுள்,
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.

105 குற்றியலுகரமும்மெய்போலுமெனல
குற்றிய லுகரமும் அற்றென மொழிப.

106 உயிர்மெய்யீறும் உயிரீற்றதெனல்
உயிர்மெய் ஈறும் உயிரீற் றியற்றே.

107 இருமொழிபபுணர்சசிவகை
உயிரிறு சொலமுன் உயிர்வரு வழியும
உயிரிறு சொலமுன மெய்வரு வழியும
மெய்யிறு சொலமுன் உயிர்வரு வழியும
மெய்யிறு சொலமுன் மெய்வரு வழியுமென
றிவ்வென அறியக கிளக்குங காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென
றாயீ ரியல புணர்நிலைச சுட்டே.

108 மொழிபுணரியல்பு நான்கெனல்
அவ்வுறுள்,
நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்

பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கநான் கேமொழி புணரியல் பே. ௬

109 மூவகைத்திரிபு

அவைதாம்,
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்
றிவ்வென மொழிப திரியு மாறே. ௭

110 புணர்நிலை இடைமொழி

நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய. ௮

111 மரூஉ மொழிப்புணர்ச்சி

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே. ௯

112 புணர்ச்சியினிருவகை

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்

எழுத்தே சாரியை ஆயிரு பண்பின
ஒழுக்கல் வலிய புணருங் காலை. ௧0

113 வேற்றுமையுருபுகள்

ஐ ஒடு கு இன் அது கண் எனும்
அவ்வா றென்ப வேற்றுமை உருபே. ௧௧

114 நான்காவது ஏழாவதன
உருபுபுணர்நிலை

வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்
கொல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும். ௧௨

115 ஆறன் அகரஉருபு புணர்நிலை.

ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறு ககரமுனைக் கெடுதல் வேண்டும். ௧௩

116 பெயர்க்கண் வேற்றுமை நிற்குமாறு

வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே. ௧௪

117 பெயர்களின் பெயர், முறை, தொகை

உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைக் கட்டே. ௧௫

118 சாரியை வருமிடம்

அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே. ௧௬

119. சாரியையின் பெயரும் முறையும்
தொகையும

அவைதாம்,
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்றென் கிளவி உளப்பட்ட பிறவும
அன்ன என்ப சாரியை மொழியே. ௧௭

120 இன்சாரியை முதல திரியுமாறு

அவற்றுள்,
இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும். ௧௮

121 இன்சாரியை ஈறுதிரியுமாறு

அளவாகு மொழி முதல நிலஇய உயிர்மிசை
னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே. ௧௯

122 வற்று முதல் திரியுமாறு

வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே. ௨௦

123 நான்கு னகர ஈறும் திரியுமாறு

னஃகான் றஃகான் நான்க னுருபிற்கு. ௨௧

124 பொருட்புணர்ச்சியில் ஆனீறு திரியுமாறு

ஆனின் னகரமும் அதனோ ரற்றே
நாள்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே. ௨௨

125 அத்து முதல் திரியுமாறு

அத்தின் அகரம் அகரமுனை இல்லை. ௨௩

126 இக்கு முதல் திரியுமாறு

இக்கின் இகரம் இகரமுனை அற்றே. ௨௪

127 ஐ முதல் திரியுமாறு

ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும். ௨௫

128 அக்கு முதலொழிய ஏனைய கெடுமாறு

அப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது. ௨௬

129 அம் ஈறு திரியுமாறு

அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும். ௨௭

130 இயல்புகணத்துமுன் அம் ஈறு கெடுமாறு

மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர். ௨௮

131 ஐந்தாமுருபில் இன் சாரியை முழுதும் கெடுதல்

இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்
கின்னென் சாரியை இன்மை வேண்டும். ௨௯

132. புணர்மொழியுள் சாரியை வருமெனல்

பெயரும் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா
திடைநின் றியலும் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும். ௩௦

133 அத்து, வற்று என்பவற்றின் ஒற்றுக்கேடும் பேறும்

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே. ௩௧

134 எழுத்தின் சாரியைகளின்பெயர் முதலியன

காரமும் கரமும் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை. ௩௨

135 நெட்டெழுத்துச்சாரியை

அவற்றுள்,
கரமும் கானும் நெட்டெழுத் திலவே. ௩௩

136 குற்றெழுத்துக்குற்ற சாரியை

வரன்முறை மூன்றும் குற்றெழுத் துடைய ௩௪

137 ஐ, ஔவின் சாரியை

ஐகார ஔகாரம் கானொடும் தோன்றும். ௩௫

138 மெய்யீற்றின்முன் உயிர்புணாதல்

புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே. ௩௬

139 உயிர்பிரிந்த உயிர்மெய்யின்
மெய் இயல்பு

மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும். ௩௭

140 உயிரீறும் உயிர் முதன்மொழியும்
புணருமிடத்து உடம்படுமெய் தோன்றல்

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார். ௩௮

141 எழுத்துக்கள் ஒன்று பலவாமாறு

எழுத்தோர் அன்ன பொருடெரி புணர்ச்சி
இசையிற் றிரிதல் நிலைஇய பண்பே. ௩௯

142 பொருட்புணா மொழிகள்

அவைதாம்,
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே. ௪௰

புணரியல் முற்றிற்று.

ஐந்தாவது

# தொகைமரபு.

—:o:—

143 உயிர் மயங்கியல் மெய்ம்மயங்கியலைப் பற்றிய வருமொழி

கசதப முதலிய மொழிமேற் றோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான. ௧

144 இருபத்துநான்கிற்றின் முன்னர வருமொழியியல்பாதல்

ஞநம யவவெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே. ௨

145 மெல்லெழுத்துறழ்ச்சி

அவற்றுள்,
மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான. ௩

146 ணனமுன் யாவும் ஞாவும் புணர்தல்

ணனவென புள்ளிமுன் யாவும் ஞாவும
வினையோ ரனைய என்மனார் புலவர். ௪

147 அல்வழியில் ணனஈறு இயல்பாதல்

மொழிமுதல ஆகும எல்லா எழுததும
வருவழி நினற ஆயிரு புள்ளியும
வேறறுமை யலவழித திரிபிடன் இலவே. ௫

148 வேற்றுமையில் இயல்பாகுமாறு

வேறறுமைக கண்ணும வலலெழுத தலவழி
மேறகூ றியறகை ஆவயி னான. ௬

149 லனமுன் தநக்கள் றனவாதல்

லன எனவரூஉம புள்ளி முனனரத
தந எனவரின றனவா குமமே. ௭

150 ணள டணவாதல்

ணளவென புள்ளிமுன டணவெனத தோன்றும. ௮

151 முன்னிலைவினைச்சொல
வன்கணத்தொடுகண் முடியுமாறு

உயிரீ றாகிய முன்னிலைக கிளவியும
புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும
இயலபா குநவும உறழா குநவுமென
றாயீ ரியல வல்லெழுத்து வரினே. ௯

152. ஷி சிறப்புவிதி

ஔவென வருஉம் உயிரிறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளி இறுதியும்
குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே. க0

153 உயர்திணைப்பெயர் ஈற்கணத்திற் புணருமாறு

உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப. கக

154 உயர்திணைப்பெயரின் சிறப்புவிதி

அவற்றுள்,
இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே. கஉ

155 விரவுப்பெயருள் இயல்பாவன

அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே. கங

156 உயிர்றுமெய்யீறுகட்கு மூன்றாம் வேற்றுமை முடிபு

புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால

தம்மி னாகிய தொழிற்சொல முன்வரின்
மெய்ம்மை யாகலும உறழ்ந்த தோனறலும்
அம்முறை இரணடும உரியவை உளவே
வேறறுமை மருஙகிற போறறல வேண்டும். ௧௪

157 இரணடாமவேறறுமைததிரிபுகளுடைக

மெலலெழுததுமிகுவழி வலிபபொடு தோனறலும்
வலலெழுதது மிகுவழி மெலிபபொடு தோனறலும
இயறகை மருஙகின மிகறகை தோன்றலும
உயிரமிக வருவழி உயிரகெட வருதலும
சாரியை உளவழிச சாரியை கெடுதலும
சாரியை உளவழித தனனுருபு நிலையலும
சாரியை இயறகை உறழத தோன்றலும்
உயர்திணை மருஙகின ஒழியாது வருதலும
அஃறிணை விரவுபபெயாக கவவியல நிலையலும
மெய்பபிறி தாகிடத தியறகை ஆதலும
அன்ன பிறவும தனனியல மருஙகின்
மெய்பெறக கிளநது பொருளவரைந திசைககும
ஐகார வேறறுமைத திரிபென மொழிப. ௧௫

158 ஈ ஐ ஈற்றுபபெயாககு அலவழிமுடிபு

வேறறுமை யலவழி இ ஐ என்னும
ஈறறுபபெயர்க கிளவி மூவகை நிலைய

அவைதாம்,
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர். ௧௬

159 இ, ஐ ஈற்று இடைச்சொல்முடிபு

சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென இறுதியும்
யாவென வினாவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்
சொல்லியல் மருங்கின் உளவென மொழிப. ௧௭

160 மெய்ம்மயங்கியலை நோக்கிய
நிலைமொழிக்கருவி

நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப. ௧௮

161 உருபியலை நோக்கிய நிலைமொழிக்கருவி

ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்,
நெடுமுதல் குறுகும் மொழிமுன் ஆன. ௧௯

162 ஞம்ஙென் மொழிச்சிறப்புவிதி

ஞமஙென் இறுதியும் அந்நிலை திரியாது. ௨௦

163 மெய்ம்மயங்கியலை நோக்கிய

நிலைமொழிச்செய்கை

உகரமொடு புணரும் புள்ளி இறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை. ௨௧

164 அளவும் நிறையும் எண்ணுமாகிய

பெயர்கள் தம்மிற்புணருமாறு.

உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉம் காலம் தோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை. ௨௨

165 சிறப்புவிதி

அரையென வரூஉம் பால்வரை கிளவிக்கும்
புரைவ தன்றால் சாரியை இயற்கை. ௨௩

166 இதுவுமது

குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை. ௨௪

167 குற்றியலுகரச்சாரியை

குற்றிய லுகரக் கின்னே சாரியை. உ௫

168 கலமுன் அத்துச்சாரியை

அத்திடை வரூஉம் கலமென் அளவே உ௬

169 பனையும் காவும் இன் சாரியை பெறுதல்

பனையென் அளவும் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும். உ௭

170 அளவிற்கும் நிறைக்கும் மொழிக்கு முதலாமெழுத்து இனைத்தென்றல்

அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதல் ஆகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாம்,
கசதப என்றா நமவ என்றா
அகர உகரமோ டவையென மொழிப. உ௮

171 புறனடை

ஈறியல் மருங்கின் இவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே. உ௯

172 மரூஉச்சொல் முடிபு

பலரறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை

ஒன்றறி சொல்முன் யாதென் வினாவிடை
ஒன்றிய வகரம வருதலும இரண்டும
மருவின பாததியின திரியுமன பயினறே. ௩௦

தொகைமரபு முற்றிற்று

— o —

ஆறாவது

## உருபியல்.

---

173 அகரமுதலிய ஈற்றுமொழிகள்
இனபெற்றுருபினோடு புணருமாறு

அஆ உஊ ஏஔ என்னும
அபபா லாறன நிலைமொழி முன்னர
வேறறுமை உருபிற கினனே சாரியை. ௧

174 வற்றுச்சாரியை பெற்றுருபோடு
புணருமாறு

பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றொடு சிவணல எச்சம இன்றே. ௨

175 யாவென்வினாவுடன்வற்றுச்சாரியை

யாவென் வினாவும் ஆயியல் திரியாது ௩

176 உகரவீற்றுச்சுட்டுமொழிச்சிறப்பு

சுட்டுமுதல உகரம அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரம் கெடுமே. ௪

177 ஐகாரவீற்றிற்கு முடிபுகூறுமாறு

சுட்டுமுதல ஆகிய ஐயென இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும உரித்தே. ௫

178 இதுவுமது

யாவென் வினாவின் ஐயென் இறுதியும
ஆயியல திரியா தென்மனார் புலவர்
ஆவயின வகரம ஐயொடும கெடுமே. ௬

179 ஈகாரவீறு புணருமாறு

நீயென் ஒருபெயர் நெடுமுதல குறுகும
ஆவயின் னகரம ஒற்றா கும்மே. ௭

180 ஓகாரவீறுபுணருமாறு

ஒகார இறுதிக் கொன்னே சாரியை. ௮

181 அகர ஆகார வீற்றுச்சிறப்புவிதி

அஆ என்னும மரப்பெயர்க் கிளவிக்
கத்தொடும சிவணும ஏழன உருபே. ௯

182 ஞகரமெய்யீறு இன்சாரியை
பெறுமெனல

ஞநவென் புள்ளிக் கின்னே சாரியை. ௧௦

183 சுட்டுமுதல் வகரவீற்றிற்கு முடிபு கூறுமாறு

சுட்டுமுதல வகரம் ஐயும மெய்யும
கெட்ட இறுதி இயற்றிரி பின்றே கக

184 மற்றவகரம இன் சாரியை பெறுதல

ஏனை வகரம இனமொடு சிவணும. கஉ

185 மகரவீறு புணருமாறு

மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை. கங

186 மகரவீறு இன்சாரியையும பெறுமாறு

இனனிடை வரூஉம மொழியுமா ருளவே கச

187 நும்மென் இறுதிச்சிறப்புவிதி

நுமமென இறுதி இயறகை ஆகும. கரு

188 வேறுவித மகரவீற்றுச்சொறகளுக்கு முடிபு

தாஙகம எனனும மகர இறுதியும
யாமென இறுதியும அதனோ ரனன
ஆஎ ஆகும யாமென் இறுதி
ஆவயின யகரமெய் கெடுதல வேண்டும
ஏனை இரண்டும நெடுமுதல குறுகும. கசு

189 எல்லாம என்னுஞ்சொலலிறுதி முடியுமாறு

எல்லாம் என்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான. எக

190. ஒரு சொல் நம்சாரியை பெறுதல்

உயர்திணை யாயின் நம்மிடை வருமே. கஅ

191 மகரவீற்றுயர்திணைப்பெயர்க்குமுடிபு

எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி,
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே. க௯

192 னகரவீற்றுட் சிலவற்றிற்குச
சிறப்புவிதி

தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்
மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே. உ0

193 இதுவுமது

அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே. உக

194 ஏழென் எண்ணுப்பெயர் அன்சாரியை பெறுதல்

அன்னென் சாரியை யேழன திறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப. ௨௨

195 குற்றுகர வீற்றிற்கு முடிபு

குற்றிய லுகரத் திறுதி முனனர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை. ௨௩

196 குற்றுகரங்களிற் சில இனவொற்று மிகப்பெறுதல்

நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பால் மொழிகள் அல்வழி யான. ௨௪

197 அவை இனவொற்று மிகப்பெறுவன இயல்பாகுமெனல்

அவைதாம்,
இயற்கைய வாகும் செயற்கைய என்ப. ௨௫

198 குற்றுகரவீற்று எண்ணுப்பெயர்முடிபு

எண்ணின் இறுதி அன்னொடு சிவணும். ௨௬

199 ஒன்றுமுதல் எட்டெண்கள் சாரியை பெற்றுத்திரியுமாறு

ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணும் சொல்லுங் காலை

ஆனிடை வரினும் மானம் இல்லை.
அஃறிணை கிளவி ஆவயின் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான மெய்யே. ௨௭

200 எண்ணுப்பெயரல்லாத
குற்றுகரவீற்றுட்சில முடியுமாறு

யாதென இறுதியும் சுட்டுமுதல் ஆகிய
ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்
ஆய்தம கெடுதல ஆவயி னான. ௨௮

201 குற்றுகரவீற்றுட்சில ஏழனுருபோடு
முடியுமாறு

ஏழன் உருபிறகுத திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக கிளவி இயறகையும ஆகும்
ஆவயின் இறுதி மெய்யொடும கெடுமே. ௨௯

202 புறனடை

புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும
சொலலிய அலல ஏனைய எலலாம
தேருங காலை உருபொடு சிவணிச
சாரியை நிலையும கடப்பா டிலவே. ௩௦

உருபியல் முற்றிற்று.

### ஏழாவது

## உயிர்மயங்கியல்.

203 அகரவீற்றுப்பெயர் அலவழியில
வன்கணததடன புணருமாறு

அகர இறுதிப பெயர்நிலை முனனா
வேற்றுமை யலவழிக கசதபத தோனறில
தத்தம் ஒதத ஒறறிடை மிகுமே. க

204 அகரவீற்று வினைசசொலலு
மிடைசசொல்லும புணருமாறு

வினையெஞ்சு கிளவியும உவமககிளவியும்
எனவென் எசசமும சுட்டின இறுதியும
ஆங்க என்னும உரையசைக கிளவியும
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுதது மிகுமே. உ

205 சுட்டின்முனனர ஞநம மெயமிகல்

சுட்டின் முன்னர் ஞநமத தோனறின
ஒட்டிய ஒறறிடை மிகுதல வேண்டும. ௩

206 இதுவுமது

யவமுன் வரினே வகரம் ஒறறும். ௪

207 இதுவுமது

உயிர்முன் வரினும் ஆயியல திரியாது. ௫

208, செய்யுளில சுட்டு நீளுமாறு

நீட வருதல செயயுளுள உரிததே ௫

209 சாவஎனெனெசசததிறுதி கெடுமாறு

சாவ என்னும் செயவென் எசசத

திறுதி வகாரம கெடுதலுமா உரிததே. ௬

210 அகாவீறறப்பெயாவினை

முதலியவறறிறகுச சிறப்புவிதி

அனன எனனும உவமக கிளவியும

அண்மை சுட்டிய விளிநிலைக கிளவியும

செயமமன எனனும தொழிலிறு சொலலும

ஏவல கணணிய வியஙகோட கிளவியும

செயத எனனும பெயரெஞசு கிளவியும

செயயிய எனனும வினையெஞசு கிளவியும

அமம எனனும உரைபபொருட கிளவியும்

பலவற றிறுதிப பெயர்க்கொடை உளபபட

அனறி அனைததும இயலபென மொழிப. ௮

211 வாழிய என்பது புணருமாறு

வாழிய என்னும செயவென கிளவி

இறுதி அகாம கெடுதலும உரிததே. ௯

212 அமம எனபதறகு எயதாதது

எய்தவிததல்

உரைப்பொருட கிளவி நீட்டமும வரையார். ௧௦

213 பலவற்றிறுதிக்குச் செய்யுண் முடிபு

பலவற் றிறுதி நீடுமொழி யுளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான. கக

214 பலசில வென்பவற்றின் றிரிபுவிதி

தொடர்அல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் றாகலும் உரித்தே. கஉ

215 பலசில வென்பவற்றின் உறழ்ச்சிவிதி

வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும். கங

216 அகரவீற்றிறுதி வேற்றுமைமுடிபு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே கச

217 அகரவீற்று மரப்பெயர்க்குப்
பிறிதுவிதி

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே. கரு

218 மகவென்னும் பெயர்க்குச்சாரியை
இன்னெனல

மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை. கசு

219 மேலதற்குச்சிறப்புவிதி

அத்தவண் வரினும் வரைநிலை இன்றே. கஎ

220 ஈற்று வல்லெழுத்துக்கும் வற்றுக்கும்
சிறப்புவிதி

பலவற் றிறுதி உருபிய னிலையும். கஅ

221, ஆகாரவீற்றுப்பெயர் அல்வழியில்
முடியுமாறு

ஆகார இறுதி அகர இயற்றே. ௧௯

222 ஆகாரவீற்று வினைச்சொல்முடிபு

செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர். ௨௰

223 , ஆகாரவீற்று அல்வழிக்கண்
உம்மைத்தொகை முடிபு

உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே. ௨௧

224 எய்தியதன்மேற் சிறப்புவிதி

ஆவும் மாவும் விளிப்பெயர் கிளவியும்
யாவென் வினாவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவும்
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோ
டன்றி யனைத்தும் இயல்பென மொழிப ௨௨

225 ஆகாரவீறு வேற்றுமைக்கண்
முடியுமாறு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. ௨௩

226 ஷை சிறப்புவிதி

குறியதன் முன்னரும் ஓரெழுத் துமொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி. ௨௪

227 ஆகாரவீற்றுப்பெயர்க்கு ஒருவழி
மெய்பிறத்தல் விலக்குவது

இராவென் கிளவிக் ககரம் இல்லை ௨௫

228 நிலாஎனுஞ்சொல் அத்துச்சாரியை
பெறுமெனல்

நிலாவென் கிளவி அத்தொடு சிவணும். ௨௬

229 யாமரம் முதலியன மெல்லெழுத்து
மிகப்பெறுமெனல்

யாமரக் கிளவியும் பிடாவும் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே. ௨௭

230 மேலவை வல்லெழுத்து மிகப்பெறுவது
மாமெனல்

வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை. ௨௮

231 மாமரக்கிளவி முதலியமூன்று
வல்லெழுத்துப்பெறுமெனல்

மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும். ௨௯

232 ஆனொற்று அகரத்தோடு நிற்குமெனல்

ஆனொற் றகரமொடு நிலையிடன் உடைத்தே. ௩௰

233 ஆன்முன் பவ்வீ புணருமாறு

ஆன்முன் வரூஉம் ஈகார பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே. ௩௧

234 , ஆகாரவீற்றுட்சிலவற்றிற்குச்
செயயுள்முடிபு

குறியதன் இறுதிச சினைகெட உகரம
அறிய வருதல செய்யுளுள் உரித்தே. ௩௨

235 இகரவீற்றுப்பெயர்கக
வேற்றுமைமுடிபு

இகர இறுதிப பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வலலெழுதது மிகுமே. ௩௩

236 இகாரற்று இடைசசொல் முதலிய
முடியுமாறு

இனியணி என்னும் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியும சுட்டும அன்ன. ௩௪

237 இன்றியென்னெசசம செய்யுளில்
இன்றுமெனல

இன்றி என்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல
தொன்றியல் மருங்கிற செய்யுளுள் உரிததே. ௩௫

238 இகாரறறுச்சுட்டுப்பெயர்
இயல்புகணத்தோடுமுடியுமாறு

சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே. ௩௬

239 தூணிமுன் பதக்குவரின் வல்லெழுத்து
மிகுமெனல்

பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை இயற்றே ௩௭

240 நாழிமுன் உரிமொழி புணருமாறு

உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகரம் ஒற்றும் ஆவயி னான. ௩௮

241 பனியென்னுங்காலமுணர்த்துஞ்சொல்
அத்தும் இன்னும் பெறுமெனல்

பனியென வரூஉம் கால வேற்றுமைக்
கத்தும் இன்னும் சாரியை ஆகும். ௩௯

242 வளியென பூதக்கிளவி அத்தும்
இன்னும் பெறுமெனல்

வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப. ௪௦

243 உதியெனும் மரப்பெயர் மெல்லெழுத்து
மிகப்பெறுமெனல்

உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே. ௪௧

244 புளியென் றமரப்பெயர்க்கு அம் என்
சாரியை வருமெனல்

புளிமரக் கிளவிக் கம்மே சாரியை. ௪௨

245. சுவைப்புளிப்பெயர்முன்
மெல்லெழுத்து மிகப்பெறுமாறு

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே. சரு

246 ஏனைப் பெயர் வல்லெழுத்து
மிகப்பெறலுமாமெனல்

வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை
ஒல்வழி அறிதல் வழக்கத் தான. சசு

247 நாட்பெயர்களின்முன் ஆன்சாரியை
வருமென்றல்

நாள்முன் தோன்றும் தொழிநிலைக் கிளவிக்
கானிடை வருதல் ஐயம் இன்றே. எரு

248 திங்களையுணர்த்தும் பெயர்முன்
இக்குச்சாரியை

திங்கள் முன்வரின் இக்கே சாரியை. சசு

249 ஈகாரவீற்றுப்பெயர் அல்வழியில்
வல்லெழுத்து மிகப்பெறுமெனல்

ஈகார இறுதி ஆகார இயற்றே. சஎ

250 நீ, மீமுன் வலிஇயல்பாதல்

நீயென் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீயென மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும். சஅ

251 இடப்பொருளுணர்த்தும்
மீ முன் வலிமிகல்

இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப. ௪௯

252 வேற்றுமையில் ஏகாரவீற்றுப்
பெயர்முன் வலிமிகல

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. ௫௦

253 நீயென்பதன் பொருட்புணர்ச்சியில
வலிஇயல்பாதல

நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆயின் வல்லெழுத்து இயற்கை ஆகும். ௫௧

254 அல்வழியில் உகரவீற்றுமுன் வலிமிகல

உகர இறுதி அகர இயற்றே. ௫௨

255 உகரவீற்றுச்சுட்டுமுன் வலிமிகல

சுட்டின் முன்னரும் அத்தொழிற் றாகும். ௫௩

256 உகரவீற்றுச்சுட்டுமுன் மென்கணம்
முதலியபுணருமாறு

ஏனவை வரினே மேனிலை இயல. ௫௪

257 சுட்டிறுதிமுன்வலி இயல்பாதல

சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே. ௫௫

258 உகரவீற்றுச்சுட்டுமுதற்பெயர்களுக்குச்
செய்யுள்முடிபு

அன்றுவருங் காலை ஆவா குதலும்
ஐவருங் காலை மெய்வரைந் துகெடுதலும்
செய்யுண் மருங்கின் உரித்தென மொழிப. ௫௬

259 மேலதற்கு வேற்றுமையில் முடியுமாறு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே ௫௭

260 எரு, செரு மொழிப்புணர்ச்சி

எருவும் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
அம்மின் மகரம் செருவயிற் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை ௫௮

261 ழகரவுகரம் நீண்டுமுடியுமாறு

ழகர உகரம் நீடிட னுடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான. ௫௯

262 ஒடுமரப்பெயர்ப்புணர்ச்சி

ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே. ௬௦

263 சுட்டுப்பெயர்க்கு வல்லெழுத்து
விலக்கிச்சாரியை வகுத்தல

சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை. ௬௧

264 ஊகார ஈறு அல்வழிப் புணருமாறு

ஊகார இறுதி ஆகார இயற்றே. கூஉ

265 ஊகார ஈற்று வினையெச்சம் முன்னிலைமொழி முன் வலிமிகல்

வினையெஞ்சு கிளவியும் முன்னிலை மொழியும்
நினையுங் காலை அவ்வகை வரையார். கூங

266 ஊகார ஈறு வேற்றுமையில் முடியுமாறு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. கூச

267 குற்றெழுத்தின் பின் உகரம் பெறுமாறு.

குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி. கூரு

268 பூவெனபெயர்முன் வலி மிகுதலுமாமெனல்

பூவென் ஒருபெயர் ஆயியல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே கூகூ

269 ஊஎன்மொழி னகரச்சாரியைபெறுதல்

ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும். கூஎ

270 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான. கூஅ

271 ஆடூஉ, மகடூஉ, இன்சாரியை பெறுதலுமாமெனல்

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மானம் இல்லை. ௬௯

272 எகர ஒகரம் ஈறாமிடமுணர்த்துமாறு

எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான. ௭௦

273 எய்தியதிகந்தப்படாமற்காத்து எய்தாதது எய்துவித்தது

தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா ௭௧

274 ஏகாரவீறு அல்வழிப் புணருமாறு

ஏகார இறுதி ஊகார இயற்றே ௭௨

275 இடைச்சொற்களுக்கெய்தாத தெய்துவித்தது

மாறுகோள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத் தியற்கை ஆகும். ௭௩

276 ஏகாரவீற்று வேற்றுமை முடிபு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே. ௭௪

277 எய்தியதன் மேற்சிறப்புவிதி

ஏயென் இறுதிக் கெகரம் வருமே ௭௫

278 சேவென் மரப்பெயர் மெல்லின மிகப்பெறல்

சேவென் மரப்பெயர் ஒடுமர இயற்றே. ௭௬

279 இயைபுவல்லெழுத்து விலக்கி இன்வகுத்தது

பெற்றம் ஆயின் முற்ற இன்வேண்டும். ௭௭

280 ஐயீற்றுவேற்றுமையில் முடியுமாறு

ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே. ௭௮

281 எய்தியதனை மேற்சிறப்புவிதி

சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும். ௭௯

282 எய்தியதுவிலக்கிப்பிறிது

விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆமுப் பெயரும் சேமர இயல. ௮௦

283 இயைபுவல்லெழுத்து விலக்கி அம்முவகுத்தல்

பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்யவண் ஒழிய என்மனார் புலவர். ௮௧

284 மேலதற்கோர்சிறப்புவிதி

பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் றாகும ஐயென் உயிரே
ஆகாரம வருதல ஆவயி ஞன. ௮௨

285 இதுவுமது

கொடிமுன வரினே ஐயவண் நிறபக்
கடிநிலை யினறே வலலெழுத்து மிகுதி. ௮௩

286 இதுவுமது

திஙகளும நாளும முநதுகிளந தன்ன. ௮௪

287 இதுவுமது

மழையென் கிளவி வளியியல நிலையும. ௮௫

288 வேறறுமைககட்செயயுணமுடிபு

செய்யுள மருஙகின வேட்கை என்னும
ஐயென் இறுதி அவாமுன வரினே
மெய்யொடும கெடுதல என்மனார புலவர்
டகாரம ணகாரம ஆதல வேணடும. ௮௬

289 ஒகாரவீற றல்வழிமுடிவு

ஒகார இறுதி ஏகார இயறறே. ௮௭

290 இடைச்சொன் முடிவும்
எய்தாததெய்துவித்தலும்

மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்
கூறிய வல்லெழுத் தியற்கை ஆகும். ௮௮

291 இதுவுமது

ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற் றியற்றே. ௮௯

292 ஒகாரவீற்றுவேற்றுமைமுடிபு

வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஒகரம் வருதல் ஆவயி னான. ௯௰

293 எய்தியதுவிலக்கல

இல்லொடு கிளப்பின் இயற்கை ஆகும. ௯௧

294 பிறிதுவிதிவகுத்தல

உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை ஆகும. ௯௨

295 ஔகாரவீறு இருவழியுமுடியுமாறு

ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு வீற்றும் உகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே. ௯௩

உயிர்மயங்கியல் முற்றிற்று

எட்டாவது

# புள்ளிமயங்கியல்

296 இருவழியும ஞகாரம்புணருமாறு

ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம வருதல ஆவயி னான. க

297 ஞ, உகரம பெறுமாறு

ஞநமவ இயையினும உகரம நிலையும. உ

298 ந, உகரமபெறுமாறு

நகர இறுதியும அதனோ ரற்றே. ங

299 ந, வேற்றுமையில் அகரமபெறுதல

வேற்றுமைக் குககெட அகரம் நிலையும. ச

300 வெரிநெனசொலபுணருமாறு

வெரிநென இறுதி முழுதும கெடுவழி
வருமிடன உடைத்தே மெல்லெழுத் தியற்கை. ரு

301 மேலதற்கோர்சிறப்புவிதி

ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே. சா

302 ணகாரவீறு வேற்றுமையிற் புணருமாறு

ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே. ௭

303 மேலதற்கோர் சிறப்புவிதி

ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை. ௮

304 ஆணென்மரச்சொல் அம் பெறல்

ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே. ௯

305 செய்யுளுட் டிரிபுவிலக்கிச் சாரியைகூறல்

விண்ணென வரூஉம் காயப் பெயர்வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கிற் றொழில்வரு காலை. ௧௦

306 உகரமும் வல்லெழுத்தும் விதித்தல்

தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல. ௧௧

307 எய்தியது விலக்கிப் பிறிது விதிகூறல்

கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே. ௧௨

308 அல்வழியுள் வேற்றுமைமுடிபுபோல
முடியுமாறு

வேற்றுமை அல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே. ௧௩

309 முரணென்சொல் இருவழியும் முடியுமாறு

முரணென் றொழிற்பெயர் முதலியல் நிலையும். ௧௪

310 மகரவீறுவேற்றுமையிற்புணருமாறு

மகர இறுதி வேற்றுமை ஆயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே. ௧௫

311 மகரவொற்றின்மேலகரநீளுமாறு

அகர ஆகாரம் வரூஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே. ௧௬

312 எய்தியதன் மேற்சிறப்புவிதி

மெல்லெழுத்து உறழும் மொழியுமா ருளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான. ௧௭

313 இல்லென்மரச்சொல் முடியுமாறு

இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே. ௧௮

314 மகரத்திற்கெய்தாததெய்துவித்தல்

அல்வழி எல்லாம் மெல்லெழுத் தாகும். ௧௯

315 அகமெனுஞ்சொல்முடியுமாறு

அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை இன்றே ஆசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான. ௨௦

316 இலமென்னுஞ்சொல் புணருமாறு

இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான. ௨௧

317 ஆயிரமென் எண்ணுப்பெயர்
அத்துப்பெறல்

அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒத்த எண்ணு முனவரு காலை உ௨

318 அடையடுத்த ஆயிரமும் அவ்வாறேயெனல்

அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே. உ௩

319 எய்தாததெய்துவித்தல்

அளவும் நிறையும் வேற்றுமை இயல. உ௪

320 உயர்திணைப்பெயராகிய பொருட்
புணர்ச்சிக்கண் முடியுமாறு

படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கம் குறுகும் பெயர்நிலை கிளவியும்
வேற்றுமை யாயின உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான. உ௫

321 மேலவற்றிற்கு அல்வழிமுடிபு

அல்லது கிளப்பின் இயற்கை ஆகும். உ௬

322 விரவுப்பெயர்க்கிருவழியும்எய்தாத
தெய்துவித்தல்

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லாம் எனும்பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது. உ௭

323 எய்தியதன்மேற்சிறப்புவிதி

மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை. ௨௮

324 எல்லாமென்பதற்குயர்திணை முடிபு

உயர்திணை யாயின் உருபியல் நிலையும். ௨௯

325 நும்மென்பெயர்புணருமாறு

நும்மென ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே. ௩௦

326 நும்மெனபெயர்க்கு அல்வழிமுடிபு

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இய்யிடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பால் மொழிவயின் இயற்கை ஆகும். ௩௧

327 பிறிதுவிதி வகுத்தல்

தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெய ரியல. ௩௨

328 ஈமுங்கம்மும்புணருமாறு

ஈமும் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன. ௩௩

329 ஈமுங்கம்மும் அக்கென்சாரியை பெறல்

வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை. ௩௪

330 மகரக்குறுக்கமிடம்

வகார மிசையும் மகாரம் குறுகும். ௰௫

331 மகரவீற்று நாட்பெயர்கள்
வேற்றுமை முடிபு

நாட்பெயர் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்று மெய்கெடுதல் என்மனார் புலவர். ௰௬

332 னகரமெய் வேற்றுமைப் புணருமாறு

னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகாரம் ஆகும் வேற்றுமைப் பொருட்கே. ௰௭

333 மன் சின் முதலிய புணருமாறு

மன்னும் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர் ௰௮

334 வயினென இடைச்சொல் புணருமாறு

சுட்டுமுதல் வயினும் எகர முதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப. ௰௯

335 குயினென சொல் புணருமாறு

குயினென் கிளவி இயற்கை ஆகும் ௨௰

336 எகின்மரச்சொல் அம்முப்பெறல்

எகின்மரம் ஆயின் ஆண்மர இயற்றே. ௨௧

337 எகினென்னுஞ்சொல்புணருமாறு

ஏனை எகினே அகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும். ௬௨

338 கிளைப்பெயர்க்குச்சிறப்புவிதி

கிளைப்பெயர் எல்லாம் கிளைப்பெயர் இயல. ௬௩

339 மீனென் சொற்புணர்ச்சி

மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே. ௬௪

340 தேனென சொல்புணருமாறு

தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி இல்லை. ௬௫

341 மேலதற்கோர்சிறப்புவிதி

மெல்லெழுத்து மிகினும் மானம் இல்லை. ௬௬

342 இதுவுமது

மெல்லெழுத் தியையின் இறுதியொ டுறழும். ௬௭

343 இறால் என சொற்புணர்ச்சி

இறாஅல் தோற்றம் இயற்கை ஆகும். ௬௮

344 எய்தியதன்மேற்சிறப்புவிதி

ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே. ௬௯

345 மின்முதலியவற்றிற்குச்சிறப்புவிதி

மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல. ௫0

346 கன்எனுஞ்சொல்அகரம்பெறல்

வேற்றுமை யாயின் ஏனை யிகினொடு
தோற்றம் ஒக்கும் கன்னென் கிளவி. ௫௧

347 அஃறிணைவிரவுப்பெயராக
செய்தாததெயதாவித்தல

இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தனகெடும் அவ்வியற் பெயரே ௫௨

• 348 மேலதற்கோர் சிறப்புவிதி

ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரம் துவரக் கெடுமே. ௫௩

349 எய்தியதுவிலக்கிப்பிறிது
விதிவருத்தல்

சிறப்பொடு வருவழி இயற்கை ஆகும். ௫௪

350 மேலதற்குமற்றோர்விதி

அப்பெயர் மெய்யொழித் தனகெடு வழியும்
நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான. ௫௫

351 தான் முதற்பெயர்களியல்பாமாறு

தானும் பேனும் கோனும் என்னும்
ஆமுறை இயற்பெயர் திரிபிடன் இலவே. ௫௬

352 தான் யான் திரியுமாறு

தான் யான் எனும் பெயர் உருபியல் நிலையும். ௫௭

353 மேலவை அல்வழியில் முடியுமாறு

வேற்றுமை யல்வழிக் குறுகலும் திரிதலும்
தோற்றம் இல்லை என்மனார் புலவர். ௫௮

354 அழனென்சொற்கெய்தாததெய்துவித்தல்

அழனே யிறுதிகெட வல்லெழுத்து மிகுமே. ௫௯

355 முன்றில் என்சொற்புணர்ச்சி

முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகரம் ஒற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே. ௬௰

356 செய்யுளிற்பொன்னென்சொற்புணர்ச்சி

பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கில் தொடரிய லான. ௬௧

357 யகரவீற்றிற்கு வேற்றுமைமுடிபு

யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே. ௬௨

358 விரவுப்பெயாகசெயதியந்து விலககிப்
பிறிதுவிதிவருததல்

தாயென் கிளவி இயறகை ஆகும. ௬௩

359 மேலதிலெயதாதலெய்துவிததது

மகனவினை கிளபபின முதனிலை இயறறே. ௬௪

360 யகாவீற்றுள்மெல்லெழுத்துறழசசி

மெலலெழுத துறழும மொழியுமாருளவே. ௬௫

361 யகாவீறு அலவழிபியலபாமெனல்

அலவழி எலலாம இயலபென மொழிப ௬௬

362 ரகாரவீற்றுவேறறுமைமுடிபு

ரகார இறுதி யகார இயறறே. ௬௭

363 மேலீறறிற்கெயதாதலெயதுவித்தது

ஆரும வெதிரும சாரும பீரும
மெலலெழுதது மிகுதல மெயபெறத தோன்றும். ௬௮

364 எயதியதனமேறசிறபபுவிதி

சாரென் கிளவி காழவயின வலிககும. ௬௯

365 எயதியதன மேறசிறபபுவிதி

பீரென் கிளவி அமமொடு சிவணும். ௭௦

366 வேற்றுமைபபுணாசசியில லகாரவீறு

லகார இறுதி னகார இயறறே. ௭௧

367 மேலதற்கெய்தாதசெய்தவிததது

மெலலெழுத்து இயையின் னகாரம ஆகும். எ௨

368 லகரவீறறு அலவழிமுடிபு

அல்வழி எலலாம உறலெனமொழிப. எ௩

369 லகரமெயஆயதமாகுமாறு

தகரம் வருவழி ஆய்தம நிலையலும
புகரின றெனமனார புலமை யோரே. எ௪

370 எயதியதனமேறசிறப்புவிதி

நெடியதன இறுதி இயலபுமா ருளவே. எ௫

371 நெல்முதலியவறறினீறு அலவழியிலும் றகரமாகெனல

நெலலும செலலும கொலலும சொலலும
அலலது கிளபபினும வேறறுமை இயல. எ௬

372 இன்மைப்பொருளதரும் இலலென் சொலபுணருமாறு

இலலென கிளவி இனமை செபபின்
வலலெழுதது மிகுதலும ஐயிடை வருதலும்
இயறகை யாதலும ஆகாரம வருதலும
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைததே. எஎ

373 வலலென சொற்புணாச்சி

வலலென் கிளவி தொழிறபெயர் இயற்றே. எஅ

374 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதி

வருதத்து

நாயும பலகையும் வரூஉங் காலை
ஆவயின உகரம கெடுதலும உரிததே
உகரம கெடுவழி அகரம நிலையும. ௭௬

375 வேற்றுமையிற் பூலவேலஅம்முப

பெறல

பூலவேல என்று ஆலென கிளவியொ
டாமுப பெயாககும அமமிடை வருமே. ௮௰

376 எயதியதுவிலககிப்பிறிதுவிதி

வருதத்து

தொழிறபெயா எலலாம தொழிறபெய ரியல. ௮௧

377 வெயிலெனசொலஅததுமினனும்பெறல்

வெயிலென கிளவி மழையியல நிலையும ௮௨

378 வகரவீறுவேற்றுமையிற்புணருமாறு

சுட்டுமுத லாகிய வகர இறுதி
முற்படக் கிளநத உருபியல நிலையும். ௮௩

379 மேலனவறறிற்கல்வழிமுடிபு

வேற்றுமை பல்வழி ஆய்தம் ஆகும். ௮௪

380 எய்தாததெய்துவித்தது

மெலலெழுத் தியையின் அவெ வழுத தாகும். ௮௫

381. வகரவீறுஏனைக்கணங்களொடு புணருமாறு

ஏனவை புணரின் இயல்பென மொழிப. அசு

382 எய்தாததெய்துவித்தது

ஏனை வகரம் தொழிற்பெயர் இயற்றே. அஎ

383 ழகாரவீற்று வேற்றுமைமுடிபு

ழகார இறுதி ரகார இயற்றே. அஅ

384 தாழென்சொல் அக்குப்பெறுதல்

தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்தும் ஆகும். அகூ

385 இதுவுமது

தமிழென் கிளவியும் அதனோ ரற்றே. கூ0

386 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிகூறல்

குமிழென் கிளவி மரப்பெயர் ஆயின்
பீரென் கிளவியொ டோரியற் றாகும். கூக

387 எய்தியதன்மேற்சிறப்புவிதி

பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே. கூஉ

388 ஏழென்சொல் அன்பெறல்

ஏழென் கிளவி உருபியல் நிலையும். கூங

389 மேலதற்கெய்தாததெய்துவித்தல்

அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை இன்றே ஆசிரி யற்க. ௯௪

390 மேலதற்கெய்தியதனைமேற்சிறப்புவிதி

பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி. ௯௫

391 எய்தியதொருமருங்குமறுத்தது

ஆயிரம் வருவழி உகரம் கெடுமே ௯௬

392 எய்தியதுமுழுவதூஉமிலக்கியது

நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே ௯௭

393 இதுவுமது

ஐயம் பலவென வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும். ௯௮

394 இதுவுமது

உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது. ௯௯

395 கிளைஎனசொல்வேற்றுமையிலுறழுமாறு

கிளைஎன கிளவி உறழத் தோன்றும். ௧௦௦

396 ளகாரவீறுவேற்றுமைப்புணருமாறு

ளகார இறுதி ணகார இயற்றே. ௧௦௧

397· மேலதற்குமென்கணத்துமுடிபு

மெலமெலழுத் தியையின ணகார மாகும். ௪0௨

398 மேலதறகு அலவழி முடிபு

அலவழி எலலாம உறமென மொழிப. ௪0௩

399 மேலதற்கெயதியது விலக்கிப
பிறிதுவிதி வ்குத்தது

ஆய்தம நிலையலும வரைநிலை யின்றே
தகரம வருஉங காலை யான. ௪0௪

400 நெடியதனிறுதிளகாரததுக்கெயதியது
விலக்கிபபிறிதுவிதி வருததது

நெடியதன் இறுதி இயலபா குநவும
வேறறுமை அலவழி வேறறுமை நிலையலும்
போறறல வேண்டும மொழியுமா ருளவே. ௪0௫

401 ளகாவீற்றுததொழிற்பெயர்க்கிருவழியும்
எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வருததல்

தொழிறபெயர் எலலாம தொழிறபெயா இயல. ௪0௬

402 எயதியது விலக்கிப்பிறிதுவிதிவருததல

இருளென் கிளவி வெயிலியல நிலையும. ௪0௭

403 எய்தியது விலக்கிப்பிறிதுவிதிவருததது

புளளும வள்ளும தொழிறபெயர் இயல. ௪0௮

404 மக்களென்னுஞ்சொற்கெய்தியது
விலக்கிப்பிறிதுவிதி வகுத்தது

மக்கள் என்னும் பெயர்ச்சொல் இறுதி
தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே ௧௦௬

405 சாரியைபெறுவனவற்றிற்குச்சாரியையும்
எழுத்துப்பெறுவனவற்றிற்கெழுத்துங்கொடுத்து
முடிக்குமாறு

உணரக் கூறிய புணரியல் மருங்கில்
கண்டுசெயற் குரியவை கண்ணினர்கொளலே. ௧௧௦

புள்ளிமயங்கியல் முற்றிற்று

ஒன்பதாவது

## குற்றியலுகரப்புணரியல்.

406 குற்றியலுகரத்தின்றுவகைத்தொடர்

ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்

407 ஈரொற்றுத்தொடரிடைத்தொடராகாதெனல்

அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொடராகா. ௨

408 இருவழியினும் உகரம் அரைமாத்திரையுற்று நிற்குமெனல்

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் * நிலையும். ௩

409 வன்றொடரில் அரைமாத்திரையினுங் குறுகுமெனல்

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே. ௪

410 குற்றியலிகரம்புணர்மொழியகத்து வருமாறு

யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது. ௫

411 நெடிற்றொடர்க்குற்றுயிர்த்தொடராகும் வேற்றுமைப்பொருட்புணர்ச்சி முடிபு

ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி. ௬

* நிறையும் என்றும் பாடம்

412 எய்தியதொருமருங்குமறுப்பது

ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே
அததிறத தில்லை வலலெழுதது மிகலே. ௭

413 இடைததொடராயததொடாககுமுடிபு

இடையொற்றுத தொடரும ஆய்ததத தொடரும
நடையா யியல என்மனா புலவா. ௮

414 வனறொடர்மென்றொடாககுமுடிபு

வனறொடர் மொழியும மென்றொடர் மொழியும
வநத வலலெழுத தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத தொடாமொழி மெலலொற் றெலலாம
வலலொற றிறுதி கிளையொற றாகும ௯

415 எயதியதுவலககிப்பிறிதுவிதிகூறல்

மரபபெயர்க கிளவிக் கமமே சாரியை. ௧0

416 எயதியதொருமருங்குமறுபபது

மெலலொற்று வலியா மரபபெயரும உளவே. ௧௧

417 ஈரெழுததுமொழிவன்றொடாமொழிகட்

செயதாததெயதுவிததது

ஈரெழுதது மொழியும வலலொற்றுத தொடரும
அமமிடை வாறகும உரியவை உளவே
அமமா பொருநதும மொழிவயி னான. ௧௨

418 மென்றொடர்மொழியுட்சிலவற்றிற்
கெய்தாததெய்துவிதத்து

ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியும் உளவென மொழிப. ௧௩

419 எண்ணுப்பெயரொடு பொருட்பெயர்
முடியுமாறு

எண்ணுப்பெயர்க் கிளவி உருபியல் நிலையும். ௧௪

420 மென்றொடர்மொழிக்குப்பிறமுடிபு

வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும். ௧௫

421 எய்தியதன்மேற்சிறப்புவிதி

பெண்டென் கிளவிக் கன்னும் வரையார். ௧௬

422 யாதெனிறுதியும்ஆய்தஇறுதியு
முடியுமாறு

யாதென இறுதியும் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும். ௧௭

423 சுட்டுமுதலுகரத்துக்கல்வழிமுடிபு

முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான. ௧௮

424 பிறகணத்தோடல்வழிமுடிபு

ஏனைமுன் வரினே தானிலை இன்றே. ௧௯

425 ஆறீற்றுககுற்றுகரத்திற்கலவழிமுடிபு

அலலது கிளபபின் எலலா மொழியும்
சொலலிய பணபின இயறகை ஆகும. உ0

426 வலலொற்றுககெயதியதுவிலககிய
பிறிதுவிதி

வலலொற்றுத தொடர்மொழி வலலெழுத்து
[மிகுமே. உக

427 எழனுருபிடைசசொற்குமுடிபு

சுட்டுசசினை நீடிய மெனறொடர் மொழியும
யாவினா முதலிய மெனறொடர் மொழியும
ஆயியல திரியா வலலெழுத தியற்கை. உஉ

428 யாவினாமொழியியலபாதல

யாவினா மொழியே இயலபும ஆகும. உங

429 மேலனவறறிற்குநிலைமொழிச்செயகை

அநநான் மொழியும தநநிலை திரியா. உச

430 உண்டென்மொழிககுவேறுமுடிபு

உண்டென் கிளவி உணமை செபபின்
முநதை இறுதி மெயயொடும கெடுதலும்
மேனிலை ஒறறே ளகாரம ஆதலும
ஆமுறை இரணடும உரிமையும உடைததே
வலலெழுத்து வருஉங் காலை யான. உரு

431 திசைபபெயர்க்கல்வழிமுடிபு

இருதிசை புணரின் ஏயிடை வருமே. உசா

432 திசைப்பெயர்கடெய்தாதசெயற்றாவித்தல்

திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகாரம் ஆகும்
தெற்கொடு புணருங் காலை யான. ௨௭

433 பத்தொடெண்ணுப்பெயர்புணருமாறு

ஒன்று முதலாக எட்டன் இறுதி
எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்
குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்ற இன்வரூஉம் இரண்டலங் கடையே. ௨௮

434 பத்துமுன் இரண்டுபுணருமாறு

பத்தன் ஒற்றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்ததென்ப இரண்டுவரு காலை. ௨௯

435 பத்தின்முன் ஆயிரம்புணருமாறு

ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது. ௩௦

436 நிறைப்பெயரளவுப்பெயர்புணருமாறு

நிறையும் அளவும் வரூஉங் காலையும்
குறையா தாகும் இன்னென் சாரியை. ௩௧

437 எண்ணுப்பெயரொடுபத்தென்பெயர்புணர்தல்

ஒன்றுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்
நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்

வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
ஆறன் இறுதி அல்வழி யான. ௯௨

438 எண்ணுப்பெயரின் நிலைமொழிச்செய்கை

முதலீ ரெண்ணினொற்று ரகரம் ஆகும்
உகரம் வருதல் ஆவயி னான. ௯௩

439 இதுவுமது

இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான. ௯௪

440 இதுவுமது

மூன்றும் ஆறும் நெடிமுதல் குறுகும். ௯௫

441 இதுவுமது

மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும். ௯௬

442 இதுவுமது

நான்கன் ஒற்றே றகாரம் ஆகும். ௯௭

443 இதுவுமது

ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும். ௯௮

444 இதுவுமது

எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும். ௯௯

445 எய்தாததெய்துவித்தது

ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்

பஃறொடர் கிளவி ஆய்தபகரங்கெட
நிறுறல வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகரம் ஆகும் ௪௰

446 முதலெண்பானெண்களுடன் அளவுப்பெயர் நிறைப்பெயர் முடியுமாறு

அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியும்
கிளந்த இயல தோன்றுங் காலை. ௪௧

447 மேல்மாட்டேற்றோடொவ்வாததற்கு வேறுமுடிபு

மூன்றன் ஒற்றே வந்த தொக்கும் ௪௨

448 இதுவுமது

ஐந்தன் ஒற்றே மெல்லெழுத் தாகும். ௪௩

449 மூன்றற்கும்ஐந்தற்குமவருமொழி வரையறுத்தல்

கசதப முதன்மொழி வரூஉங் காலை. ௪௪

450 வேண்டாதுகூறிவேண்டியதுமுடித்தல்

நமவ என்னும் மூன்றொடு சிவணி
அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே. ௪௫

451 மேல்மாட்டேற்றோடொவ்வாமுடிபு

ஐந்தும் மூன்றும் நமவரு காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே. ௪௬

452 இதுவுமது

மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத் துருவா குமமே. ௪௭

453 இதுவுமது

நான்கன் ஒற்றே லகாரமா குதும. ௪அ

454 இதுவுமது

ஐந்தன் ஒற்றே முந்தையது கெடுமே. ௪௯

455 மாட்டேறறுணெயதிய உகாததிறகுக
கேடுகூறியெயதியதுவிலககிப்பிறிதுவிதிகூறல்

முதலீ ரெண்ணின்முன உயிர்வரு காலைத
தவலென மொழிப உகரக கிளவி
முதனிலை நீடல ஆவயி னான. ௫௦

456 இதுவுமது

மூன்றும் நான்கும ஐந்தென் கிளவியும்
தோனறிய வகரத தியறகை ஆகும. ௫௧

457 எண்ணுப்பெயர் முதல்நீண்டு
முடியுமாறு

மூனறன் முதனிலை நீடலும் உரித்தே
உழககென கிளவி வழககத தான. ௫௨

458 இதுவுமது

ஆறென் கிளவி முதனீ டுமமே. ௫௩

459 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது

ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும் சாரியை மொழியே. ௫௪

460 முதலொன்பானுடன் நூறுபுணர்தல்

நூறுமுன் வரினும் கூறிய இயல்பே. ௫௫

461 மாட்டேற்றொடுவாராததற்கு வேறுமுடிபு

முன்றன் ஒற்றே நகாரம் ஆகும். ௫௬

462 இதுவுமது

நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா. ௫௭

463 இதுவுமது

ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ ஆகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும். ௫௮

464 முதலொன்பானுடன் ஆயிரம்புணருமாறு

ஆயிரக் கிளவி வரூஉங் காலை
முதலீ ரெண்ணின் உகரம் கெடுமே. ௫௯

465 எய்தியதன்மேற்சிறப்புவிதி

முதனிலை நீடினும மான மில்லை. ௯0

466 மூன்றெனெண் ஆயிரத்தொடுபுணர்தல

மூன்றன ஒற்றே வகாரம ஆகும். ௯௧

467 நான்கெனெண் ஆயிரத்தொடுபுணர்தல

நான்கன ஒற்றே லகாரம ஆகும். ௯௨

468 ஐந்தெனெண் ஆயிரத்தொடுபுணர்தல

ஐந்தன் ஒற்றே யகாரம ஆகும். ௯௩

469 ஆறெனெண் ஆயிரத்தொடுபுணர்தல

ஆறன் மருங்கிற குற்றிய லுகரம
ஈறுமெய் ஒழியக கெடுதல வேண்டும். ௯௪

470 ஒன்பானெண் ஆயிரத்தொடுபுணர்தல்

ஒன்பான இறுதி உருவுநிலை திரியாது
இன்பெறல் வேண்டும சாரியை மரபே. ௯௫

471 முதலொன்பானகளோடு நூறாயிரம முடியுமாறு

நூறா யிரமுன் வரூஉங காலை
நூறன இயற்கை முதனிலைக கிளவி. ௯௬

472 நூறுடன முதலொன்பானெண்புணர்தல

நூறென கிளவி ஒன்றுமுதல ஒன்பாற
கீறுசினை ஒழிய இனவொற்று மிகுமே. ௯௭

473 மேலெண்ணுடன் அடையடுத்த ஒன்றுமுதல் ஒன்பான்கள்புணருமாறு

அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும். ௬௮

474 தூறென்பதொடு அளவுப்பெயர் நிறைப்பெயர் முடியுமாறு

அளவும் நிறையும் ஆயியல் திரியா
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர் ௬௯

475 ஒருபஃதுமுதலியஎண்கள் ஒன்றுமுதல் ஒன்பான்களுடன் புணருமாறு

ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுதல் ஒன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தம் கெடுதல் வேண்டும். ௭௰

476 ஒருபஃதுமுதலியவற்றோடாயிரம் புணர்தல்

ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை. ௭௧

477 ஒருபஃதுமுதலியவற்றோடளவுப் பெயர்நிறைப்பெயர்புணருமாறு

அளவும் நிறையும் ஆயியல் திரியா ௭௨

478 முதலொன்பான்களுடன் பொருட்பெயர்
புணர்தல்

முதனிலை எண்ணின் முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்
முதனிலை இயற்கை என்மனார் புலவர் எரு

479 மேலவற்றுடன் உயிர்முதல் மொழியும்
யகாரமும் முடியுமாறு

அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா கும்மே
ரகரத் துகரம் துவரக் கெடுமே. எசா

480 இரண்டுமுதலொன்பான்களின் முன்
மா புணர்தல்

இரண்டு முதல் ஒன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரலும் உரித்தே. எஎ

481 புள்ளிமயங்கியலுள் ஒழிந்து நின்ற
செய்யுள்முடிபு

லனவென வரூஉம் புள்ளி இறுதிமுன்
உம்மும் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான. எஅ

482 எழுத்ததிகாரத்திற்புணர்க்கப்படாத
சொற்கள் இவையெனவுணர்த்தல

உயிரும புளளியும இறுதி யாகிக
குறிபபினும பணபினும இசையினும தோன்றி
நெறிபபட வாராக குறைசசொற கிளவியும
உயர் திணை அஃறிணை ஆயிரு மருங்கின
ஐம்பால அறியும பண்புதொகு மொழியும
செய்யும செயத என்னும கிளவியின
மெய்யொருங கியலும தொழிறொகு மொழியும
தமமியல கிளபபின தமமுன தாமவரூஉம
எணணின தொகுதி உளபபடப பிறவும
அன்னவை எலலாம மருவின பாததிய
புணரியல நிலையிடை உணரத தோன்றா என

483 எழுத்ததிகாரப்புறனடை

கிளநத அலல செய்யுளுட டிரிநவும
வழங்கியல மருங்கின மருவொடு திரிநவும்
விளமபிய இயறகையின் வேறுபட்த தோன்றின்
வழங்கியல மருங்கின உணாநதனா ஒழுக்கல
நனமதி நாட்டத தெனமனா புலவர். எ-அ

குற்றியலுகரபபுணரியல முற்றிறறு

எழுத்ததிகாரம் முற்றும்.

உ

# சொல்லதிகாரம்

## சூத்திரத்தொகைவகை

கிளவியோர் அறுபா னொன்றுவேற றுமைபிற
கிளரிரு பஃதிரணா டேழுந

துளமயங் கியலாம விளியினமுப் பானேழ
உயர்பெயர் நாறபதின் மூன்று

தெளிவினை இயலைம பானுடன் ஒன்று
செறியிடை யியலிறை பானெட்

டொளிருரி யியலொன் பதிறறுபபத துடனெட்
டொழிபறு பானின்மே லேழே.

உ

கடவுள் துணை

# சொல்லதிகாரம்

முதலாவது

## கிளவியாக்கம்.

484 சொல்லும்பொருளும் வரையறுத்தது
உயர்திணை எனமனார் மககட சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின இசைககு * மன் சொல்லே. க

485 உயர்திணைமுப்பாற பகுபபு
ஆடூஉ அறிசொல மகடூஉ அறிசொல
பலலோர் அறியும சொலலொடு சிவணி
அம்முப் பாறசொல உயர்திணை யவவே. உ

486 அஃறிணையிருபாறபகுப்பு
ஒன்றறி சொலலே பலவறி சொலலென்
றாயிருபாற் சொல அஃறிணை யவவே. ங

---

* 'மண' என்று சேனாவரையரும் கல்லாடனாரும் பாடங்கொள்வர்.

487 இஃது ஐயமறுக்கின்றது

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவவென அறியும் அந்தந் தமக்கிலவே
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும். ச

488 ஆடூஉ அறிசொல் லுணர்த்துகின்றது

னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் ரு

489 மகடூஉ அறிசொல் உணர்த்துகின்றது

ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல். சு

490 பலரறிசொல் உணர்த்துகின்றது

ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே. எ

491 அஃறிணை ஒன்றறிசொல் உணர்த்துகின்றது

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும். அ

492 அஃறிணைப் பலவறிசொல் உணர்த்துகின்றது.

அஆ வவ்வென வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே. கூ

493 பாலுணர்த்திய பதினோரெழுத்தும்
வினைக்கண்ணன்றி உணர்த்தாதுமெனல்

இருதிணை மருங்கின் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே. க௦

494 வழுவற்கென்றுகாக்கின்றது

வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே. கக

495 இதுவுமது

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற் காகிடன் இன்றே. க௨

496 இதுவுமது

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் க௩

497 இதுவழுவமைக்கின்றது

வினாவும் செப்பே வினாஎதிர் வரினே க௪

498 இதுவுமது

செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான க௫

499 செப்பிற்கும்வினாவிற்குமாபு

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்
கப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே. க௬

500 மரபுவழுவமையுமாறு

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே. ௧௭

501 செய்யுட்குமரபுவழுவமைதி

'இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்கா றல்ல செய்யுள் ஆறே. ௧௮

502 இயற்கைப்பொருட்கணமரபுவழுவாமை

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல். ௧௯

503 செயற்கைப்பொருண்மேல்மரபுவழுவாமை

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல். ௨௦

504 மேலதற்கோர்புறனடை

ஆக்கம் தானே காரண முதற்றே. ௨௧

505 எய்தியதுவிலக்கிற்று

ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே. ௨௨

506 பாலையாதோன்றியபொருள்மேற்
சொல்நிகழ்த்துமாறு

பான்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல். ௨௩

507 ஐயப்பொருண்மேற்சொல் நிகழ்த்துமாறு

உரு*வென மொழியினும் அஃறிணைப் பிரிபினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை. உச

508 மேலையாந்துணிந்தவழி அன்மைத்தன்மை கூறும் மரபு

தன்மை சுட்டலும் உரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான. உரு

509 வண்ணச்சினைச்சொற்கணமரபு

அடைசினை முதலென முறைமூன்று மயங்காமை
நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல. உசா

510 பாலதிணைவழுவமைக்கின்றது

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல. உஎ

511 இடப்பற்றிநிகழுஞ்சொற்களுக்குப் பொதுவிதி

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப. உஅ

* 'உருபென'ப்பாடங்கொள்வர், சேனாவரையர்.

512 சிலவற்றிற்குச்சிறப்பிலக்கணம்

அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயி ரிடத்த ௨௯

513 இதுவுமது

ஏனை இரண்டும் ஏனை இடத்த ௩௰

514 அறியாப்பொருண்மேற்சொல் நிகழுந்துமாறு

யாதெவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும் ௩௧

515 ஒன்றறிந்தவழியும் வருமென்றறிந்து காக்கின்றது

அவற்றுள்,
யாதென வரூஉம் வினாவின் கிளவி
அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்தற்குத்
தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே ௩௨

516 வரையறையுடையது தொகைபெறும் வழிப்படுவதோமாறு

இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும். ௩௩

517 நிலையாப்பொருட்கண்மரபுநிகழ்த்துமாறு

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே. ௩௪

518 சொற்றொகுத்திறத்தலுஞ்செப்பமாறு

எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல். ௩௫

519 புறனடையாயமைந்தாறிறுத்தல்வகைமை

அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் ௩௬

520 திணைவழுவமையுமாறுமரபுவழுவமைதியும்

பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் ஆயினும்
பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே. ௩௭

521 மரபுவழாநிலை

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலம் தோன்றின்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர். ௩௮

522 செய்யுளிடத்து மரபுவழுவமைத்தவாறு

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே. ௩௯

523 வழக்கின்கண் மரபுவழாநிலையும்
செய்கையுட்கண் மரபுவழுவமைதியும் உணர்த்தல்

சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும். ௪௦

524 ஒருபொருளையுணர்த்தும் இருபெயர் வழுக்காக்கின்றது

சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார். ௪௧

525 ஒருபொருளுணர்த்தும் பலபெயர் வழுக்காக்கின்றது

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே. ௪௨

526 திணைவழுக்காத்தவாறு

தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவியென
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார். ௪௩

527 பால்வழுக்காத்தவாறு

ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக் கல்ல தெண்ணுமுறை நில்லாது. ௪௪

528 எண்ணின்கட்டிணைவழுவமைக்கின்றது

வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார். ௪௫

529 மரபுவழுக்காக்கின்றது

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார். ௪௬

530 இதுவுமது

எண்ணுங் காலும் அதுவதன் மரபே. ௪௭

531 உரிச்சொற்கண் மரபுவழுக்காக்கின்றது

இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந் திசையா. ௪௮

532 ஒருபெயர்ப்பொதுச்சொல்லின்
மரபுவழுக்காக்கின்றது

ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும். ௪௯

533 இருதிணையிருபாற்கும் பொதுவாகிய
பெயர்க்கண்மரபுவழுக்காக்கின்றது.

பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன. ௫௦

534 திணைவழுவமையுமாறு

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யுள் உள்ளே. ௫௧

535 பலபொருளுணர்த்துமொருசொல்

வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்லென்
றாயிரு வகைய பலபொருள் ஒருசொல். ௫௨

536 வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல்
பொருட்டெரிநிலைக்கட்பொதுமைநீங்கித்
தெளியத்தோன்றுமாறு

அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
*வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே ௫௩

537 மரபுவழுக்காத்தவாறு

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங் கியலும் ௫௪

538 மரபுவழுக்காக்கின்றது

குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி ௫௫

539 திணைவழுக்காக்கின்றது

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செற்றச்சொல் விறற்சொல்லென
றாவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி

* இவ்வடியைத் தனிச்சூத்திரமாக்குவர் நச்சினார்க்கினியர்.

முன்னத்தின் உணருங் கிளவி எல்லாம
உயர்திணை மருஙகின நிலையின வாயினும்
அஃறிணை மருஙகிற கிளநதாங கியலும. ௫௬

540 இதுவுந்திணைவழுககாக்கினறது

காலம உலகம உயிரே உடமபே
பாலவரை தெய்வம வினையே பூதம
ஞாயிறு திஙகள சொலலென வரூஉம
ஆயீ ரைநதொடு பிறவும அனன
ஆவயின வரூஉங கிளவி எலலாம
பாலபிரிந திசையா உயர்திணை மேன. ௫௭

541 குடிமையாணமைதொடககத்துக்குப் புறனடை

நின்றாங் கிசைத்தல இவணியல் பின்றே. ௫௮

542 காலமுலகத்திற்கோர்புறனடை

இசைத்தலும உரிய வேறிடத தான. ௫௯

543 அருத்தாபத்திகூறுகின்றது

எடுத்த மொழியினம செப்பலும உரித்தே. ௬௰

544 பாலவழுவுந்திணைவழுவுமமைத்தவாறு

கண்ணும தோளும முலையும பிறவும
பன்மை சுட்டிய சினைநிலைக கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தமவினைக் கியலும் எழுத்தலங கடையே. ௬௧

கிளவியாக்கம் முற்றிற்று

## இரண்டாவது

# வேற்றுமையியல்

545 வேற்றுமை இனைத்தென்கின்றது

வேற்றுமை தாமே ஏழென மொழிப. க

546 ஒழிந்தவேற்றுமையுந்தொகையும்

விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே. உ

547 வேற்றுமையின பெயர்முறைமுதலியன

அவைதாம்,
பெயர் ஐ ஒடு கு
இன் அது கண் விளி என்னும் ஈற்ற. ங

548 எழுவாயவேற்றுமை

அவற்றுள்,
எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே. ச

549 எழுவாயஆறுபயனிலையுமேற்பது

பொருண்மை சுட்டல் * வியங்கொள வருதல்
வினைநிலை உரைத்தல் வினாவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்
றன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே. ரு

* 'வியங்கோள்' என்பது சேனா-பாடம்

550 தொகைப்பெயரும்பயனிலைகொள்ளுமாறு

பெயரி னாகிய தொகையுமா ருளவே
அவவும உரிய அபபா லான. கூ

551 எழுவாயபுலபபட்டுமபுலப்படாதுமநிற்குமாறு

எவவயிற பெயரும வெளிபபடத தோன்றி
அவவியல நிலையல செலவின தெனப. எ

552 உருபுநிற்குமிடம

கூறிய முறையின உருபுநிலை திரியா
தீறுபெயாக காகும இயறகைய எனப. அ

553 பெயாக்கோரிலக்கணம

பெயா நிலைக் கிளவி காலம தோனறா
தொழிலநிலை ஒட்டும ஒனறலங கடையே. கூ

554 இரணடாவதுஇப்பொருட்கணவருமெனல

இரணடா குவதே,
ஐயெனப பெயரிய வேறறுமைக கிளவி
எவவழி வரினும வினையே வினைக்குறிப
பவவிரு முதலிற றோனறும அதுவே. க0

555 அதனைமுடிக்குமபொருளவேறுபாடு
காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஓப்பிற் புகழிற பழியின் என்று

பெறலின் இழவிற் காதலின் வெகுளியிற்
செறலின் உவத்தலிற் கற்பின் என்று
அறுத்தலிற் குறைத்தலிற் றொகுத்தலிற் [பிரித்தலின்
இறுத்தலின் அளவின் எண்ணின் என்று
ஆக்கலிற் சார்தலிற் செலவிற் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்று
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார். கக

556 மூன்றாவதிப்பொருட்கண்வருமெனல்

மூன்றா குவதே,
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே கஉ

557 அதனைமுடிக்கவரும்பொருள்வேறுபாடு

அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனொ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனொ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனொ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார். கங

558 நான்காவதுஇப்பொருட்கண்வருமெனல்

நான்கா குவதே,
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினுங் கொள்ளு மதுவே. கச

559 அதனைமுடிக்கவரும்பொருள்வேறுபாடு.

அதற்குவினை யுடைமையின் அதற்குடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அதுவாகு கிளவியின்
அதற்கியாப் புடைமையின் அதற்பொருட் டாதலின்
நட்பிற் பகையிற் காதலிற் சிறப்பினென்
றப்பொருட் கிளவியு மதன்பால என்மனார். கரு

560 ஐந்தாவதுஇப்பொருட்கண்வருமெனல்

ஐந்தா குவதே,
இன்னெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனி னிற்றிது என்னு மதுவே. கசு

561 அதனைமுடிக்கவரும்பொருள்வேறுபாடு

வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்றா

இன்மை யுடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதலென
றன்ன பிறவும் அதன்பால என்மனார். கஎ

562 ஆறாவது இப்பொருட்கணவருமெனல்

ஆறா குவதே,
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனதிதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே. கஅ

563 அதனைமுடிக்கவருமபொருளவேறுபாடு

இயற்கையின உடைமையின முறைமையிற [கிழமையிற்
செயற்கையின முதுமையின வினையின என்று
கருவியிற றுணையிற கலத்தின முதலின
ஒருவழி யுறுப்பிற குழுவின என்று
தெரிந்துமொழிச்செயதியின் நிலையின வாழ்ச்சியிற
றிரிந்து வேறுபடூஉம பிறவும அன்ன
கூறிய மருங்கிற றோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர். கக

564 ஏழாவது இப்பொருட்கணவருமெனல்

ஏழா குவதே,
கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைசெய் இடத்தின் நிலத்திற காலத்தின்
அனைவகைக் குறிப்பிற றோன்றும் அதுவே. உ0

565 ஏழனுருபின் பாகுபாடு

கன்கால புறமகம உளளுழை கீழ்மேல
பினசார் அயலபுடை தேவகை எனாஅ
முனனிடை கடைதலை வலமிடம எனாஅ
அனன பிறவும அதனபால எனமனார் ௨௧

566 வேற்றுமைத்தொகைக்குழி விரிக்குமாறும
அதற்கினமாகிய அன்மொழித்தொகைக்குழி
விரிக்குமாறும

வேற்றுமைப பொருளை விரிக்குங காலை
ஈற்றுநின றியலுந தொகைவயிற பிரிந்து
பலவாறாகப பொருளபுணர்ந திசைக்கும
எல்லாச சொலலும உரிய என்ப. ௨௨

வேற்றுமையியல முற்றிற்று

---

மூன்றாவது
## வேற்றுமைமயங்கியல்.

---

இரண்டின பொருளுரு

567 மேழன்பொருளுமயங்குமாறு
கருமம அல்லாச சார்பென கிளவிக்
குரிமையும் உடைத்தே கணணெனன வேற்றுமை க

568 இதுவும் அவ்விரண்டனமயக்கங்கூறுவது

சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்
வினைநிலை யொக்கும் என்மனார் புலவர் ௨

569 இதுவுமது

கன்றலுஞ் செலவும் ஒன்றுமார் வினையே ௩

570 உருபுமயக்கமாகவருவன

முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே. ௪

571 பொருள் மயக்கம்

முதன்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளிதென்ப ௫

572 முதல்சினைகளையாராய்கின்றது

முதலுஞ் சினையும் பொருள்வேறு படாஅ
நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே. ௬

573 பிறனுடம்பட்டது தானுடம்படுதல்

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா
பண்டியல் மருங்கின் மரீஇய மரபே ௭

574 மூன்றுவதன்கட் சொல்லுதல்வகைமை

ஒருவினை யொடுச்சொல் உயர்பின் வழித்தே. ௮

575 மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏது
ஒத்தகிழமையவெனல

மூன்றனும் ஐந்தனுந் தோன்றக் கூறிய
ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி
நோக்கோ ரனைய என்மனார் புலவர் ௯

576 நோக்கனோக்கத்திறத்து ஏதுவுஞ்செயப்படு
பொருளும் ஒத்தவுரிமையவெனல

இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம்
இரண்டன் மருங்கின் ஏதுவு மாகும். ௧௦

577 ஆறாம்வேற்றுமையுயர்திணைத்தொகை
விரியுமாறு

அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே. ௧௧

578 இரண்டாவதும் மூன்றாவதும்
மயங்குமாறு

தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டும் மூன்றும்
கடிநிலை இலவே பொருள்வயி னான. ௧௨

579 மேலதற்கோர் புறனடை

ஈறுபெயர் முன்னா மெய்யறி பனுவலின்
வேற்றுமை தெரிப உணரு மோரே. ௧௩

580 இரண்டாவதும மூன்றாவதும் மயஙகுமாறு

ஒம்படைக கிளவிக கையும ஆனும
தாமபிரி விலவே * தொகவரு காலை கச

581 ஆறாவதுமேழாவதுமமயஙகுமாறு

ஆறன மருஙகின வாழசசிக கிழமைக
கேழும ஆகும உறைநிலத தான. கரு

582 நான்காவதனபொருள் ஆறாவதற்குச
செலலுமாறு

குததொக வரூஉம கொடையெதிர் கிளவி
அப்பொருள ஆறற குரிததும ஆகும. க௬

583 மூனறாவதுமிரண்டாவதுமயஙகுமாறு

அசசக கிளவிக கைநதும இரண்டும
எச்சம இலவே பொருள்வயி னான. கஎ

584 வேற்றுமைமயக்கததிறகுபபுறனடை

அன்ன பிறவும தொனனெறி பிழையா
துருபினும் பொருளினும மெய்தடு மாறி
இருவயின் நிலையும வேறறுமை எலலாம
திரிபிடன இலவே தெரியு மோர்ககே. கஅ

* "தொகைவரு" என்பது சேனா-பாடம

585 பலவுருபு தொடர்ந்தடுக்கியவழிப்படு
மிலக்கணம்

உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
ஒருசொல் நடைய பொருள்செல் மருங்கே. கசு

586 உருபு திரிதுமிடங்கூறுவது

இறுதியும் இடையும் எல்லா உருபும்
நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார் உ௦

587 ஆறனுருபிலக்கணமும் எல்லாவுருபிற்குப்
பொதுஇலக்கணமும்

பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப. உக

588 எய்தியது விலக்கிற்று

ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்
மெய்யுருபு தொகாஅ இறுதி யான. உஉ

589 உருபுகள்தம்பொருள்வனறி மயங்குமாறு

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். உங

590 வேற்றுமைகள்தம்பொருள்மாறுபட்டுழியும்
அப்பொருள் எனல்

எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்
பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே. உச

591 உருபுகளுட்சிலசெய்யுளுட்டிரியுமெனல்

குஐ ஆனென வரூஉம் இறுதி
* அஒடும் சிவணும் செய்யுள் உள்ளே. உரு

592 எய்தியது விலக்கிற்று

அ என் பிறத்தல் அஃறிணை மருங்கிற்
குவ்வும் ஐயும் இல்லென மொழிப. உசா

593 நான்காவது ஏனையுருபுகளின்
பொருள்களோடு மயங்குமாறு

இதன் இதுவிற் றென்னுங் கிளவியும்
அதனைக் கொள்ளும் பொருள்வயி னானும்
அதனாற் செயற்படற் கொத்த கிளவியும்
முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்
பால்வரை கிளவியும் பண்பின் ஆக்கமும்
காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
பற்றுவிடு கிளவியும் தீர்ந்துமொழிக் கிளவியும்
அன்ன பிறவும் நான்கன் உருபிற்
றொன்னெறி மரபின தோன்ற லாறே. உஎ

594 மற்றையுருபுகளுந்தம்முள்மயங்குமாறு

ஏனை உருபும் அன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான. உஅ

* 'அவ்வொடு' என்பது சேனா-பாடம்.

595 வேற்றுமைப்பொருள்கள் தோன்றுமிடம்

வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபயன் ஆக என்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே. ௨௯

596 மேலதற்கோர் புறனடை

அவைதாம்,
வழங்கியல் மருங்கின் குன்றுவ குன்றும். ௩௦

597 குறிப்பாற்பொருளுணர்த்தும் பெயர் இத்துணையெனல்

முதலிற் கூறும் சினையறி கிளவியும்
சினையிற் கூறும் முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ
அனையமர பினவே ஆகுபெயர்க் கிளவி. ௩௧

598 ஆகுபெயரிலக்கண மிருவகையவெனல்

அவைதாம்,
தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை. ௩௩

599 ஆகுபெயரும் வேற்றுமையேற்குமெனல்

* வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். ௩௩

600 ஆகுபெயர் வேறுபாடு

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே. ௩௪

601 ஆகுபெயர்க்குப்புறனடை

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. ௩௫

வேற்றுமைமயங்கியல்

முற்றிற்று.

நான்காவது

## விளிமரபு.

---

602 விளியதுபொதுவிலக்கணம்

விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப ௧

---

* இச்சூத்திரத்தை 598ம் சூத்திரத்தின் ஈற்றடியாக்கி ஒரு சூத்திரமாகக்கொள்வர், சேனாவரையர்.

603 இஃது அப்பெயர்களைக் கூறுவல் என்றல்

அவ்வே,
இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப. ௨

604 உயர்திணைப்பெயருள் விளியேற்பவை

அவைதாம்,
இஉ ஐஓ என்னும் இறுதி
அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே. ௩

605 இகரவீறும் ஐகாரவீறும் விளியேற்குமாறு

அவற்றுள்,
இஈ ஆகும் ஐஆய் ஆகும். ௪

606 ஒழிந்தன விளியேற்குமாறு

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும். ௫

607 இஃது ஐயமறுக்கின்றது

உகரம் தானே குற்றிய லுகரம். ௬

608 வேண்டாகூறி வேண்டியது முடித்தல்

ஏனை உயிரே உயர்திணை மருங்கிற்
றாம்விளி கொள்ளா என்மனார் புலவர். ௭

609 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தல்

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்
இயற்கைய வாகும் செயற்கைய என்ப. ௮

610 எய்தியதன்மேற்சிறப்புவிதி

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவொடு வருதற் குரியவும் உளவே. ௯

611 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தது

அண்மைச் சொல்லே இயற்கை ஆகும். ௰

612 புள்ளியீற்று விளியேற்பவை

னரலள என்னும் அந்நான் கென்ப
புள்ளி இறுதி விளிகொள் பெயரே ௧௧

613 வேண்டாகூறி வேண்டியது முடித்தல்

ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா. ௧௨

614 னகாரவீறுவிளியேற்குமாறு

அவற்றுள்,
அன்னென் இறுதி ஆவா குமே. ௧௩

615 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தல்

அண்மைச் சொல்லிற் ககரம் ஆகும். ௧௪

616 ஆனென்பது விளியேற்குமாறு

ஆனென் இறுதி இயற்கை ஆகும். ௧௫

617 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தல்

தொழிலிற் கூறும் ஆஎன் இறுதி
ஆயா குமமே விளிவயி னான. ௧௬

618 இதுவுமது

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. ௧௭

619 எய்தாததெய்துவித்தது

அளபெடைப் பெயரே அளபெடை இயல ௧௮

620 இதுவுமது

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே. ௧௯

621 ணகாரவீற்றுள் விளியேலாதவை

தாமென் பெயரும் சுட்டு முதற் பெயரும்
யாமென் பெயரும் வினாவின் பெயரும்
அன்றி அனைத்தும் விளிகோள் இலவே. ௨௦

622 ரகாரவீற்று விளியேற்குமாறு

ஆரும் அருவும் ஈரொடு சிவணும். ௨௧

623 எய்தியதன்மேற்சிறப்புவிதி

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்
வழுக்கின் றென்மனார் வயங்கி யோரே ௨௨

624 இதுவுமது

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே. ௨௩

625 எய்தாததெய்துவித்தது
அளபெடைப பெயரே அளபெடை இயல. உ௪

626 விளியேலாதவை
சுட்டுமுதற பெயரே முறகிளந் தன்ன. உ௫

627 இதுவுமது
நுமமின் திரிபெயர் வினுவின பெயரொன்
றமமுறை இரணடும அவறறியல பிபலும. உ௬

628 லகாரளகாரவீறு விளியேறகுமாறு
எஞ்சிய இரணடின் இறுதிப பெயரே
நின்ற ஈறறயல நீட்டம வேண்டும. உ௭

629 எயதியதுவிலககிப்பிறிதுவிதிவகுததது
அயனெடி தாயின் இயறகை யாகும. உ௮

630 ளகாரவீறறிறகு எயதியதுவிலககிப
பிறிதுவிதிவகுததல
வினையினும பண்பினும
நினையத் தோனறும ஆளென் இறுதி
ஆயா குமமே விளிவயி னான. உ௯

631 எயதியதுவிலக்கிபபிறிதுவிதிவகுத்தல
முறைபபெயர்க கிளவி முறைபபெயர் இயல. ௩0

632 ளகாரவீறறுஅவிளியேலாதவை
சுட்டுமுதற பெயரும வினுவின் பெயரும்
முறகிளந் தன்னவென்மனார புலவர. ௩௧

633 எய்தாததெய்துவித்தது

அளபெடைப் பெயரே அளபெடை இயல. ௩௨

634 விரவுப்பெயர் விளியேற்குமாறு

கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர்
விளம்பிய நெறிய விளிக்குங் காலை. ௩௩

635 அஃறிணைப்பெயர் விளியேற்குமாறு

புள்ளியும் உயிரும் இறுதி யாகிய
அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்
விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்
தெளிநிலை யுடைய ஏகாரம் வரலே. ௩௪

636 மூவகைப்பெயர்க்குமெய்தியதுவிலக்கிப்
பிறிதுவிதி வகுத்தது

உளவெனப் பட்ட எல்லாப் பெயரும்
அளபிறந் தனவே விளிக்குங் காலைச்
சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான. ௩௫

637 அம்மவென இடைச்சொல் விளியேற்குமாறு

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே. ௩௬

638 உயர்திணைப்பெயருள்விளியேலாதவை

தாநு என்ன அவைமுத லாகிய
தன்மை குறித்த னாளவென இறுதியும்
அன்ன பிறவும் பெயர்நிலை வரினே
இன்மை வேண்டும் விளியொடு கொள்ளே. ௩௭

விளிமரபு முற்றிற்று

ஐந்தாவது

# பெயரியல்.

639 நால்வகைச்சொல்லின் பொதுவிலக்கணம்

எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே ௧

640 அச்சொற்கள்பொருளுணர்த்துமாறு

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் எனமனார் புலவர். ௨

641 இதுவுமது

தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற் றோன்றலும்
இருபாற் றெனப் பொருண்மை நிலையே. ௩

642 நால்வகையுட்சிறந்தவற்றின் பெயர்
முறை தொகை

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே. ௪

643 இஃது இறந்தது காத்தது

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்ப. ரு

644 பெயர்ச்சொற்குப் பெயர்முறை தொகை

அவற்றுள்,
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே. சு

645 இதுவும் பெயர்க்கண்ணதோர் இலக்கணம்

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்
உரியவை உரிய பெயர்வயி னான. எ

646 உயர்திணைப்பெயர்கள்

அவ்வழி,
அவனிவன் உவனென வரூஉம் பெயரும்
அவளிவள் உவளென வரூஉம் பெயரும்
அவரிவர் உவரென வரூஉம் பெயரும்
யான்யாம் நாமென வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொ டப்பதி னைந்தும்
பாலறி வந்த உயர்திணைப் பெயரே. அ

647 இதுவுமது

ஆண்மை அடுத்த மகனென் கிளவியும்
பெண்மை அடுத்த மகளென் கிளவியும்
பெண்மை அடுத்த இகர இறுதியும்
நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்
முறைமை சுட்டா மகனும் மகளும்
மாந்தர் மக்கள் என்னும் பெயரும்
ஆடூஉ மகடூஉ ஆயிரு கிளவியும்
சுட்டுமுத லாகிய அன்னும் ஆனும்
அவைமுத லாகிய பெண்டென் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன ௯

648 உயர்திணையொருபாற்பெயர்

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர். ௧௦

649 இதுவுமது

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோ
டன்றி அனைத்தும் அவற்றியல் பினவே. கக

650 உயர்திணைப்பெயர்க்குப்புறனடை
அன்ன பிறவும் உயர்திணை மருங்கிற்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே. கஉ

651 அஃறிணைப்பெயர்
அதுவிது உதுவென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய ஆய்தப் பெயரும்
அவையிவை உவையென வரூஉம் பெயரும்
அவைமுத லாகிய அகரப் பெயரும்
யாதுயா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்
பாலறி வந்த அஃறிணைப் பெயரே. கங

652 அஃறிணையொருசீர்ப்பெயர்கள்
பல்ல பலசில என்னும் பெயரும்
உள்ள இல்ல என்னும் பெயரும்
வினைப்பெயர்க் கிளவியும் பண்புகொள் பெயரும்
இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட
அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன. கச

653 அஃறிணையியற்பெயர்

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே. க௫

654 அஃறிணைப்பெயர்க்குப்புறனடை

அன்ன பிறவும் அஃறிணை மருங்கிற்
பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
என்ன பெயரும் அத்திணை யவ்வே க௬

655 அஃறிணையியற்பெயர்பாலுணர்த்துமாறு

தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரினே. க௭

656 விரவுப்பெயர்

இருதிணைச் சொற்குமோ ரன்ன உரிமையிற்
றிரிபுவேறு படூஉம் எல்லாப் பெயரும்
நினையுங் காலைத் தத்தம் மரபின்
வினையோ டல்லது பாற்றெரி பிலவே. க௮

657 விரவுப்பெயர்திணையறியப்படுமாறு

நிகழூஉ நின்ற * பாலவரை கிளவியின்
உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே
அன்ன மரபின் வினைவயி னான க௯

* 'பலர்வரை' என்பது

658 விரவுப்பெயர்க்குப்பெயரும் முறையும் தொகையும்

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி தாமே தானே
எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து
சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்
கன்னவை தோன்றின் அவற்றொடுங் கொளலே. ௨௰

659 தொகுத்தனவற்றை விரிக்கின்றது

அவற்றுள்,
நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே
முறைப்பெயர்க் கிளவி இரண்டா கும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின. ௨௧

660 இயற்பெயரின் பெயரும் முறையும்

அவைதாம்,
பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்
பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயரென
றந்நான் கென்ப இயற்பெயர் நிலையே. ௨௨

661 சினைப்பெயரின் பெயரும் முறையும்

பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்
பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயரென
றந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே. ௨௩

662 சினைமுதற்பெயரின் பெயருமுறையும்

பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே
பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே
ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரென
றந்நான் கென்ப சினைமுதற் பெயரே. உச

663 முறைப்பெயரின் பெயருமுறையும்

பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயரென
றாயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே. உரு

664 பெண்மைப்பெயரும் திணைக்குரிமையும்

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே. உசா

665 ஆண்மைப்பெயருந்திணைக்குரிமையும்

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே உஎ

666 பன்மைப்பெயருந்திணைக்குரிமையும்

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவர் என்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே. உஅ

667 ஒருமைப்பெயருந்திணைக்குரியவும்

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே. உகூ

668 தாமென்பெயர் இருதிணைக்குரித்தாமாறு

தாமென் கிளவி பன்மைக் குரித்தே ௬௦

669 தானென்பது இருதிணைக்குரித்தாமாறு

தானென் கிளவி ஒருமைக் குரித்தே. ௬௧

670 எல்லாமென்பது திணைக்குரித்தாமாறு

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே ௬௨

671 எய்தியதொருமருங்குமறுக்கின்றது

தன்னுள் உறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கின் ஆக்கம் இல்லை. ௬௩

672 நீயிர்நீஎன்பவற்றைத்திணைக்
குரிமைப்படுத்தல்

நீயிர் நீயென வரூஉம் கிளவி
பாறெரி பிலவே உடன்மொழிப் பொருள ௬௪

673 நீயென்பதுபாற்குரித்தாமாறு

அவற்றுள்,
நீயென் கிளவி ஒருமைக் குரித்தே. ௬௫

674 நீயிரென்பதுபாற்குரித்தாமாறு

ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே. ௬௬

675 உயர்திணையதிகாரத்தின் ஒழிபுகூறல்

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலே. ௧௭

676 ஒருவரென்பதன் முடிபு

தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும் ௧௮

677 நீயிர் நீ ஒருவர் என்பவற்றிற்கோர்
இலக்கணம்

இன்ன பெயரே இவையெனல் வேண்டின்
முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல். ௧௯

678 உயர்திணையொழிபு கூறல்

மகடூஉ மருங்கிற் பாலிரி கிளவி
மகடூஉ இயற்கை தொழிலவயி னான. ௨௦

679 பெயரீறு செய்யுளுள் திரியுமெனல்

ஆஓ ஆகும் பெயருமா ருளவே
ஆயிடன் அறிதல் செய்யுள் உள்ளே ௨௧

680 விரவுப்பெயர் செய்யுளுள் வருமுறைமை

இறைச்சிப் பொருள்வயிற் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கிற் றோன்ற லான. ௨௨

681 எய்தியது விலக்கிற்று

திணையொடு பழகிய பெயரலங் கடையே. ௨௩

பெயரியல் முற்றிற்று

ஆறாவது

## வினையியல்.

682 வினைச்சொற்குப் பொதுவிலக்கணம்

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும். க

683 மூவகைக்காலம்

காலந் தாமே மூன்றென மொழிப. உ

684 காலத்தின்பெயர்முறைத்தொகை

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே. ௩

685 வினைச்சொற்களின்பாகுபாடு

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன உரிமையும்
அம்மூ வுருபின தோன்ற லாறே. ச

686 உயர்திணை முற்றுவினை

அவைதாம்,
அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்
உம்மொடு வரூஉங் கடதற என்னும்

அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே. ரு

687 தனித்தன்மை முற்று

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ
டென்னேன் அல்லென வரூஉம் ஏழும்
தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே. சு

688 ககரஉகரவீற்றிறந்தவேற்றுமைமுடிபு

அவற்றுள்,
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர். எ

689 படர்க்கையொருமைமுற்று

அன் ஆன் அள் ஆள் எனும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே. அ

690 படர்க்கைப்பன்மைமுற்று

அர் ஆர் பவென வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே கூ

691 பன்மைக்குரியவீறும் அதன்முடிபு
வேற்றுமையும்

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப. க0

692 தெரிநிலைவினைகள் உயர்திணைக்குரியவெனல்

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்றுதலை யிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே. கக

693 உளப்பாட்டுத்தன்மைக்குத்திரிபு

அவற்றுள்,
பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி
எண்ணியல் மருங்கிற் றிரிபவை யுளவே கஉ

694 உயர்திணை வினைக்குறிப்பினுள் ஒன்று

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே. கங

695 இருபத்துமூன்றுள் மூன்றீறு செய்யுளுட்டிரியுமாறு

பாலறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஓ ஆகும் செய்யுளு ளுள்ளே கச

696 விரவுவினையும் அம்முடிபுபெறுமெனல்

ஆயென கிளவியும் அவற்றொடு கொள்ளும். கரு

697 உயர்திணைவினைக்குறிப்பு உணர்த்தல்

அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்
கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்

ஒப்பி னானும் பண்பி னானுமென்
றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும். கசா

698 இதுவுமது

அன்மையின் இன்மையின் உண்மையின்
வன்மையின்
அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்
மென்ன கிளவியுங் குறிப்பே காலம் கஎ

699 வினைக்குறிப்பிற்காமாறு

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே கஅ

700 அஃறிணைத்தெரிநிலைவினை

அ ஆ வ வென வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற் றுப் படர்க்கை. ககூ

701 ஒருமைவினை

ஒன்றன் படர்க்கை தறட வூர்ந்த
குன்றிய லுகரத் திறுதி யாகும். உ0

702 விரிந்ததுதொகுத்துத்திணைக்குரிமை கூறல்

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அம்மூ விரண்டும் அஃறிணை யவ்வே. உக

703 அஃறிணையிருபாற்குமுரியதோர்
வினைக்குறிப்பு

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்
ஒக்கும் என்ப எவனென் வினாவே ௨௨

704 அஃறிணை வினைக்குறிப்பு

இன்றில வுடைய என்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉங் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும் ௨௩

705 அவ்வினைக்குறிப்பிற்கொருமரபு

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉங்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே ௨௪

7(6 விரவுவினையுணர்த்துகின்றவற்றின்
பெயர் முதலியன

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்

பிரிவுவேறு படூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமைய ௨௫

707 முன்னிலையொருமைவினை

அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இ ஐ ஆயென வரூஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும். ௨௬

708 முன்னிலைப்பன்மைவினை

இர் ஈர் மினவென்ன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோர் அனைய என்மனார் புலவர். ௨௭

709 முன்னிலையொழிந்தவற்றின் இலக்கணம்

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே. ௨௮

710 எய்தியது விலக்கிற்று

அவற்றுள்,
முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடும்
மன்னா தாகும் வியங்கோட் கிளவி. ௨௯

711 இதுவுமது

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா. ௩௰

712 வினையெச்சவாய்பாடுகள்

செய்து செய்யூ செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி ௧௧

713 ஒருசார்வினையெச்சமுணர்த்தல்

பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்
அன்ன மரபிற் காலங் கண்ணிய
என்ன கிளவியு மவற்றியல் பினவே ௧௨

714 முதல்வினைமூன்றற்கும்முடிபு

அவற்றுள்,
முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின. ௧௩

715 அம்மூன்றற்குமமுடிபுவேற்றுமை

அம்முக் கிளவியும் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியினும்
வினையோ ரனைய என்மனார் புலவர். ௧௪

716 ஒழிந்தவெச்சங்கட்குமுடிபு

ஏனை யெச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் வினைநிலை யானும்
தாமியல் மருங்கின் முடியும் என்ப, ௧௫

717 அவ்வெச்சங்கள் அடுக்கியவழிப்படுவதோர்
முறைமை

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே ௬௬

718 செய்யுஞ்செய்தவென்னும்பெயரெச்சத்துக்குப்
பொருள்முடிபு

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கு மோரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே. ௬௭

719 செய்யுமென்பதற்கோர்முடிபு
வேற்றுமை

அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற் றும்முரித் தே ௬௮

720 இருவகையெச்சத்திற்கும் எதிர்மறைவினையும்
முடிவாமெனல்

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை
திரியா. ௬௯

721 அவ்வெச்சங்களின் இடைநிகழ்ம்முடிபு வேற்றுமை

தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின
எச்சொல் லாயினும் இடைநிலை வரையார். சO

722 செயயுமெனபகற்குாறு கெடுமாறு அவற்றுள்,
செயயும் என்னும் பெயர்செஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவவிடன் அறிதல் என்மனார் புலவர். சக

723 இறந்தகாலச்சொல் வினைக்காலச் சொல்லோடியையுமாறு
செய்தென் எச்சத் திறந்த காலம்
எய்திடன் உடைத்தே வாராக் காலம். சஉ

724 நிகழ்காலச்சொல் வினைக்காலமும் உணர்த்தல்
முந்நிலைக் காலமுந் தோன்றும் இயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும். சஙு

725 வினையின்கண் எதிரவும் நிகழவும் இறப்பொடு மயங்குமெனல்
வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி

இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர். சச

726 மிக்கதொன் றன்கண் இறப்பும் எதிர்வும்
நிகழ்வொடு மயங்குமெனல்

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செயவ திலவழி நிகழுங் காலத்து
மெய்ப்பெறத் தோன்றும் பொருட்டா குமமே. சரு

727 முற்றுச்சொற்பொருள் தருமவேறுபாடு
இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி
இருவயின் நிலையும் பொருட்டா குமமே
தன்பா லானும் பிறன்பா லானும். சசா

728 வினைச்சொற் பொருள்படுமவேறுபாடு
வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதிர்மறுத் துணர்த்தற் குரிமையும்
உடைத்தே. சஎ

729 எதிர்வு இறப்புநிகழ்வுடன் மயங்குமெனல்
வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை. சஅ

730 வினைச்சொற்கண்மரபுவழுவமைதி

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே. ௪௯

731 ஓர்பொருண்மைகுறியாதுஇறப்புமெதிர்வும் மயங்குமெனல்

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி. ௫௰

732 நிகழ்வு ஏனையவற்றோடுமயங்குமெனல்

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார். ௫௧

வினையியல் முற்றிற்று.

---

ஏழாவது

## இடையியல்.

---

733 இடைச்சொற்பொது இலக்கணம்

இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலுந் தமக்கியல் பிலவே ௧

734 இடைச்சொற்களின்பாகுபாடு

அவைதாம்,
புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்

வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை. உ

735 இன்னும் அவற்றுக்கோர் பொதுவிதி

அவைதாம்,
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப. ௩

736 தத்தங்குறிப்பிற்பொருள்செய்வனவற்றுள்
ஒன்றன்பொருட்பாகுபாடு

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப மன்னைச் சொல்லே. ௪

737 இதுவுமது

விழைவே காலம் ஒழியிசைக் கிளவியென்
றம்மூன் றென்ப தில்லைச் சொல்லே. ௫

738 இதுவுமது

அச்சம் பயமிலி காலம் பெருமையென்
றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே ௬

739 இதுவுமது

எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்
றப்பால் எட்டே உம்மைச் சொல்லே எ

740 இதுவுமது

பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகா ரம்மே அ

741 பொருள்படுமாறும் அசைநிலையாமாறும்

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே கூ

742 பொருள்படுமாறு

வினையே குறிப்பே இசையே பண்பே
எண்ணே பெயரொ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி. க0

743 இதுவுமது

என்றென் கிளவியும் அதனோ ரற்றே கக

744 நிலவென்பதற்குப் புறனடை

விரவுவினை நிலைக்கும் தன்னிடத்து நிலையும். கஉ

745 ஏகார ஓகாரங்கட்குப் புறனடை

தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்
அளபின் எடுத்த இசைய என்ப. கங.

746 பொருள்படுமாறும் அசைநிலையாமாறும்

மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை
அப்பால் இரண்டென மொழிமனார் புலவர் கச

747 பொருள்படுமாறு

எற்றென் கிளவி இறந்த பொருட்டே கரு

748 இதுவுமது

மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை ஒழிய இனங்குறித் தன்றே. கசு

749 இதுவுமது

மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும். கஎ

750 இதுவுமது

தஞ்சக் கிளவி எண்ணப் பொருட்டே கஅ

751 பொருள்படுமாறும் அசைநிலையும்

அந்தில் ஆங்க அசைநிலைக் கிளவியென்
றாயிரண் டாகும் இயற்கைத் தென்ப. ககூ

752 பொருள்படுமாறு

கொல்லே ஐயம். உ0

753 இதுவுமது

எல்லே இலக்கம். உக

754 ஆரென்னுமிடைச்சொன்முடிபு

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி
பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே. உஉ

755 மேலதற்கோர் புறனடை

அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல் உங

756 இசைநிறையும் அசைநிலையும்

ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை
ஆயிரண் டாகும் * இயற்கைத் தென்ப உச

757 அசைநிலைகூறல்

மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல் உரு

758 இதுவுமது

மியாயிக மோமதி இகுஞ்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல் உசு

759 மேலதற்கோர் புறனடை

அவற்றுள்,
இகுமுஞ் சின்னும் ஏனை இடத்தொடுந்
தகுநிலை யுடைய என்மனார் புலவர் உஎ

"இயற்கைய வென்ப" என்பது சேனா-பாடம்

760 பொருள்படுமாறு

அம்ம கேட்பிக்கும் ௨௮

761 இதுவுமது

ஆங்க உரையசை. ௨௯

762 இதுவுமது

ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும். ௩௰

763 அசைநிலைக்கூறல்

யாகா,
பிறபிறக் கரோபோ மாதென வரூஉம்
ஆறேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி ௩௧

764 சார்ந்தசொற்பொருளை யுணர்த்தலும்
இடைச்சொல்

ஆக ஆகல் என்ப தென்னும்
ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை. ௩௨

765 பொருள்வேறுபாடு

ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே
ஆயியல் நிலையுங் காலத் தானும்
அளபெடை நிலையுங் காலத் தானும்
அளபெடை யின்றித் தான்வரு * காலையும்
உளவென மொழிப பொருள்வேறு படுதல்
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும். ௩௩

* 'தான்வரூஉ' என்பது சேனா-பாடம்

766 இதுவுமது

நன்றீற் றேயும் அன்றீற் றேயும்
அந்தீற் றோவும் அன்னீற் றோவும்
அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும் ௩௪

767 முற்கூறிய உம்மைகள் மயங்குமெனல்

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்
தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே. ௩௫

768 எச்சவும்மைக்கட்சொல்லுதல்வகைமை

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் ௩௬

769 முற்றும்மை எச்சப்பொருட்டுமென வழுவமைத்தல்

முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்
எச்சக் கிளவி உரித்து மாகும். ௩௭

770 ஈற்றசையேகாரத்திற்கு வேறோர் இலக்கணம்

ஈற்றுநின் றிசைக்கும் ஏயென் இறுதி
கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே. ௩௮

771 எண்களுக்கு முடிபுவேற்றுமை

உம்மை எண்ணும் எனவென் எண்ணும்
தம்வயிற் றொகுதி கடப்பா டிலவே. ௩௯

772 எண்ணிடத்து வழுவமைக்கின்றது

எண்ணே காரம் இடையிட்டுக் கொளினும்
எண்ணுக் குறித்தியலும் என்மனார் புலவர் ௪௰

773 எண்ணும்மை பிறவெண்ணொடு மயங்கல்

உம்மை தொக்க எனாவென் கிளவியும்
ஆவீ றாகிய என்றென் கிளவியும்
ஆயிரு கிளவியும் எண்ணு வழிப் பட்டன. ௪௧

774 எண்ணிடைச்சொற்றம்முட்புவேற்றுமை

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்
பெயர்க்குறி மரபிற் செவ்வெண் இறுதியும்
ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்
யாவயின் வரினும் தொகையின் றியலா. ௪௨

775 உருபுதொகையெனப்படுமென வழுவமைத்தது

உம்மை எண்ணின் உருபுதொகல் வரையார் ௪௩

776 உம்மென்னிடைச்சொல்திரியுமெனல்

உம்முந் தாகும் இடனுமா ருண்டே ௪௪

777 எண்ணிடைச்சொற்கள் வினைச்சொற்கண்ணும் வருமெனல்

வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா
நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே. ௪௫

778 எண்ணிடைச்சொற்கள் பிரிந்து
சென்றொன்றுமெனல்

என்றும் எனவும் ஒடுவும் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரிந்தே. ௪௬

779 எழுவகையிடைச்சொற்கும்
பொருட்புறனடை

அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென
மெய்பெறக் கிளந்த இயல வாயினும்
வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்
திரிந்துவேறு படினும் தெரிந்தனர் கொளலே. ௪௭

780 அவற்றிற்குச்சொற்புறனடை

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே. ௪௮

இடையியல் முற்றிற்று.

---

எட்டாவது

## உரியியல்.

— o· —

781 உரிச்சொற்கெல்லாம்பொது இலக்கணம்

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி

ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல். க

782 உரிச்சொற்களுள் யான் கூறப்படுவன
இவையெனல்

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன. உ

783 குறிப்புப்பற்றி வருமுரிச்சொற்
பொருட்பாகுபாடு

அவைதாம்,
உறுதவ நனியென வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப. ௩

784 இதுவுமது

உருவுட் காகும் புரையுயர் * வாகும். ௪

785 இது பண்பு

குருவும் கெழுவும் நிறனா கும்மே ௫

786 இது குறிப்பு

செல்லல் இன்னல் இன்னா மையே. ௬

* 'பரீகும்' என்பது சேனா-பாடம்

787 இதுவுமது
மல்லல் வளனே * ஏபெற் றாகும். ௭

788 இதுவுமது
உகப்பே உயர்தல் உவப்பே உவகை ௮

789 இதுவுமது
பயப்பே பயனும். ௯

790 இதுபண்பு
பசப்பு நிறனாகும. ௧0

791 இதுகுறிப்பு
இயைபே புணர்ச்சி ௧௧

792 இசைகூறுகின்றது
இசைப்பிசை யாகும ௧௨

793 இதுகுறிப்பு
அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி. ௧௩

794 இதுவுமது
மழவும் குழவும் இளமைப் பொருள ௧௪

795 இதுவுமது
சீர்த்தி மிகுபுகழ் * மாலை இயல்பே. ௧௫

* 'ஏபெற் றாகும' என்பதைத் தனிச்சூத்திரமாகக்கியுரை யிடுவர், சேனாவரையர்.

* 'மாலை இயல்பே' என்பதைத்தனிச்சூத்திரமாகவி யுரையிடுவர் சேனாவரையர்.

796 இதுவுமது

கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும். கசு

797 இதுவுமது

கதழ்வுந் ‡ துனைவும் விரைவின் பொருள. கஎ

798 இதுவுமது

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும் கஅ

799 இது பண்பு

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
§ நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள. கக

800 இதுகுறிப்பு

தீர்தலுந் தீர்த்தலும் விடற்பொருட் டாகும். உ0

801 இதுவுமது

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு. உக

802 இதுபண்பு

தடவுங் கயவும் நளியும் பெருமை. உஉ

803 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அவற்றுள்,
தடவென் கிளவி கோட்டமுஞ் செய்யும் உ௩

‡ 'துனைவும்' என்பது சேனா-பாடம்.

§ 'நேர்வும்' என்பது சேனா-பாடம்

804 இதுவுமது

கயவென கிளவி மென்மையும் * செய்யும, ௨௪

805 இதுவுமது

நளியென கிளவி செறிவும ஆகும. ௨௫

806 இதுகுறிப்பு

பழுது பயமின்றே ௨௬

807 இதுபண்பு

சாயல் மென்மை. ௨௭

808 இதுகுறிப்பு

முழுதென கிளவி எஞ்சாப பொருட்டே. ௨௮

809 இதுவுமது

வம்பு நிலையின்மை ௨௯

810 இதுவுமது

மாதர் காதல. ௩௰

811 இதுவுமது

நம்பும் மேவும நசையாகுமே ௩௧

812 இதுவுமது

ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம். ௩௨

813 இதுவுமது

புலம்பே தனிமை. ௩௩

---

* 'ஆகும்' என்பது சேனா-பாடம்.

814 இதுவுமது

துவன்று நிறைவாகும். ௩௪

815 இதுவுமது

முரஞ்சல முதிர்வே. ௩௫

816 இது பண்பு

வெமமை வேண்டல். ௩௬

817 இதுகுறிப்பு

பொறபே பொலிவு ௩௭

818 இதுவுமது

வறிது சிறிதாகும. ௩௮

819 இதுவுமது

ஏறறம நினைவும் துணிவும ஆகும. ௩௯

820 குறிப்பும பண்புமுணாத்துகின்றது

பிணையும பேணும பெட்பின் பொருள. ௪௦

821 இதுகுறிப்பு

பணையே பிழைததல பெருபபும ஆகும. ௪௧

822 இதுவுமது

படரே உள்ளல செலவும ஆகும. ௪௨

823 இதுவுமது

பையுளும சிறுமையும நோயின் பொருள். ௪௩

824 இதுவுமது

எய்யா மையே அறியா மையே. ௪௪

825 இதுவுமது

நன்றுபெரி தாகும். சரு

826 இதுவுமது

தாவே வலியும் வருத்தமும் ஆகும். சசு

827 இதுவுமது

தெவுக்கொளற் பொருட்டே. சஎ

828 இதுவுமது

தெவ்வுப்பகை யாகும். சஅ

829 இதுவுமது

விறப்பும் உறப்பும் வெறிப்பும் செறிவே. சகூ

830 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அவற்றுள்,

விறப்பே வெரூஉம் பொருட்டும் ஆகும். ருo

831 இஃது இசை

கம்பலை சும்மை கலியே அழுங்கல்

என்றிவை நான்கும் அரவப் பொருள. ருக

832 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அவற்றுள்,

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும். ருஉ

833 இதுகுறிப்பு

கழுமென் கிளவி மயக்கஞ் செய்யும். ருங

834 இதுவுமது

செழுமை வளனும் கொழுப்பும் ஆகும். ௫௪

835 இதுவுமது

விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் ௫௫

836 இதுவுமது

கருவி தொகுதி.

837 இதுவுமது

கமநிறைந் தியலும். ௫௭

838 இதுவுமது

அரியே ஐம்மை ௫௮

839 இதுவுமது

கவவகத் திடுமே ௫௯

840 இஃதுமிசை

துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர். ௬0

841 எய்தியதன் மேற்சிறப்புவிதி

அவற்றுள்,
இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும். ௬௧

842 இதுவுமது

இலம்பா டொற்கம் ஆயிரண்டும் வறுமை ௬௨

843 இதுவுமது

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள. ௬௩

844 இதுவுமது

கவர்வு விருப்பாகும். சூச

845 இதுவுமது

சேரே திரட்சி சூரு

846 இதுவுமது

வியலென கிளவி அகலப் பொருட்டே. சூசு

847 இதுவுமது

பேநாம் உருமஎன வருஉம் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள. சூஎ

848 இதுவுமது

வயவலி யாகும். சூஅ

849 இது பண்பு

வாளொளி யாகும். சூசு

850 இது குறிப்பு

* துய்யென் கிளவி அறிவின் றிரிபே. எ0

851 இதுவுமது

உயாவே உயங்கல். எக

852 இதுவுமது

உசாவே சூழ்ச்சி. எஉ

* 'துயவென்' என்பது சேனாபரடம்.

853 இதுவுமது

வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம் ௭௩

854 இதுவுமது

கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள ௭௪

855 எய்தியதன்மேற்சிறப்புவிதி

நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப ௭௫

856 இதுவுமது

நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை. ௭௬

857 இதுகுறிப்பு

புனிறென் கிளவி யீன்றணிமைப் பொருட்டே. ௭௭

858 இதுவுமது

நனவே களனு மகலமுஞ் செய்யும். ௭௮

859 இதுவுமது

மதவே மடனும் வலியு மாகும். ௭௯

860 எய்தியதன்மேற்சிறப்புவிதி

மிகுதியும் வனப்பு மாகலு முரித்தே. ௮௰

861 இதுவுமது

புதிதுபடற் பொருட்டே யாணர்க் கிளவி. ௮௧

862 இதுவுமது

அமர்தல் மேவல். ௮௨

863 இதுவுமது

யாணுக் * கவினாம். அஉ

864 இதுவுமது

பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள அங

865 பெருமைக்குறிப்பும் சிறுபான்மை பண்பும

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற் றாயீ ரைந்தும
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா குமமே அச

866 எய்தியதன்மேற்சிறப்புவிதி

ஐயமுங் கரிப்பும் ஆகலும் உரித்தே அரு

867 இதுவுமது

ஐவியப் பாகும். அசு

868 இதுவுமது

‡ முனைவு முனிவாகும். அஎ

869 இதுவுமது

வையே கூர்மை. அஅ

* 'கவினும்' என்பது சேனா-பாடம்

‡ 'முனைவு' என்றபாடமுங்காட்டுவர், நச்சினார்க்கினியர்

870 இதுவுமது

எறுழ் வலியாகும். ௯0

871 உரிச்சொற்கெல்லாம் புறனடை

மெய்ப்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே. ௯௧

872 இதுவுமது

* கூறிய கிளவி பொருணிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடுகொளலே. ௯௨

873 நால்வகைச்சொல்லையுமுணருமாறும்
உணர்த்துமாறும் அவற்றின் தன்மையும்
உணர்த்தல்

பொருட்குப்பொருள் தெரியின் அதுவரம்
பின்றே. ௯௩

874 இதுகுறிப்பு

பொருட்குத்திரி பில்லை உணர்த்த வல்லின். ௯௪

875 இதுவுமது

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே. ௯௫

---

* இச்சூத்திரத்தில 'கிளவிப்பொருணிலை' 'அவற்றொடுகொ'
என்று பாடங் கொள்வர் சேனாவரையர்.

876 சொற்பொருளுணர்த்துங்காரணம்
ஆசிரியர்க்கேபுலப்படுமெனல்

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா. ௯௮

877 உரிச்சொற்கெழுத்துப்பிரிந்திசைத்தலின்
றெனல்

எழுத்துப்பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே. ௯௯

878 உரிச்சொற்கெல்லாம்புறனடை

அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்
தோம்படை ஆணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர். ௱

உரியியல் முற்றிற்று

— 0 —

ஒன்பதாவது

## எச்சவியல்.

879 செய்யுட்செய்தற்குரியசொற்கள்
வரையறை

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே.

880 இயற்சொற்கிலக்கணம்

அவற்றுள்,
இயற்சொற் றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்குஞ் சொல்லே ௨.

881 திரிசொற்கிலக்கணம்

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி. ௩

882 திசைச்சொற்கிலக்கணம்

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி ௪

883 வடசொற்கிலக்கணம்

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே. ௫

884 இதுவுமது

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் ௬

885 செய்யுள்விகாரமாமாறு

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை
வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும்வழி
மெலித்தலும்

விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர். ௭

886 செய்யுள்செய்வழி அதனைப் பொருட்கிடை
நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்
றவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே. ௮

887 நிரனிறைகூறுகின்றது
அவற்றுள்,
நிரனிறை தானே,
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல். ௯

888 சுண்ணமாமாறு
சுண்ணந் தானே,
பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்
ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல். ௧௰

889 அடிமறியாமாறு
அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே. ௧௧

890 மேலதற்கோர் புறனடை
பொருள்தெரி மருங்கின்
ஈற்றடி இறுசீர் எருத்துவயின் திரிபும்
தோற்றமும் வரையார் அடிமறி யான. ௧௨

891 மொழிமாற்றுமாறு

மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல். கங

892 இருபொருள் படுவன இவையெனல்

தநநு எஎனும் அவைமுத லாகிய
கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா கச

893 தொகைச்சொற்போலக்கிளவருவன

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்
றவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே கரு

894 தொகைச்சொற்குப்பெயருமுறையுந்
தொகையும்

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்
றவ்வா றென்ப தொகைமொழி நிலையே. கசு

895 வேற்றுமைத்தொகை

அவற்றுள்,
வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல. கஎ

836 உவமத்தொகை

உவமத் தொகையே உவம இயல. கஅ

897 வினைத்தொகை

வினையின் தொகுதி காலத் தியலும். ௧௯

898 பண்புத்தொகை

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குண நுதலி
இன்ன திதுவென வரூஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே. ௨௦

899 உம்மைத்தொகை

இருபெயர் பலபெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ டவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே. ௨௧

900 அன்மொழித்தொகை

பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே ௨௨

901 தொகைச்சொற்பொருணிலை

அவைதாம்,
முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலும்
இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்

அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்
அந்நான் கென்ப பொருள்நிலை மரபே. ௨௩

902 தொகைச்சொல் ஒருசொல்லாய்
நிற்றல்

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய. ௨௪

903 உயர்திணைத்தொகைக்கு வழுவமைக்கின்றது

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
பலர்சொல் நடைத்தென மொழிமனார் புலவர். ௨௫

904 தொகைப்பதிகாரம்விட்டு மரபுவழுக்
காக்கின்றது

வாரா மரபின வரக்கூ றுதலும்
என்னா மரபின எனக்கூ றுதலும்
அன்னவை எல்லாம் அவற்றவற் றியல்பான்
இன்ன என்னும் குறிப்புரை ஆகும். ௨௬

905 இசைநிறையடுக்கிற்கு வரையறை

* இசைப்படு பொருளே நான்குவரம் பாகும். ௨௭

906 பொருளொடுபுணர்தலடுக்கிற்கு
வரையறை

விரைசொல் அடுக்கே மூன்றுவரம் பாகும். ௨௮

* 'இசைப்படு' என்பது, சேனா-பாடம்

907 வினைச்சொற்களுள் ஒருசாரன அசையுமாறு

கண்டீர் என்றா கேட்டீர் என்றா
சென்ற தென்றா போயிற் றென்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்குங் கிளவி என்ப

908 இதுவுமது

கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா குமமே

909 வினைச்சொற்களுள் ஒருசாரனவற்றிற்கு ஓர் குறியிடுதல் கூறுகின்றது

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் * என்ற
சிறப்புடை மரபின் அம்முக் காலமும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தான் வினையினுங் குறிப்பினும்
மெய்ம்மை யானும் ஈரிரண் டாகும்
அவ்வா றென்ப முற்றியல் மொழியே.

* 'என்றச்' என்பது சேனா. பாடம்

910 மேலதற்கோர்புறனடை.

எவ்வயின் வினையும் * அவ்வயின் நிலையும். ௩௨

911 முற்றுச்சொற்குமுடிபு

அவைதாம்,
தத்தங் கிளவி அடுக்குந வரினும்
எத்திறத் தானும் பெயர்முடி பினவே. ௩௩

912 எச்சச்சொற்களின் பெயர்முறை
தொகை

பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட் கிளவி ௩௪

913 பிரிநிலையெச்சத்திற்குமுடிபு

அவற்றுள்,
பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின. ௩௫

914 வினையெச்சத்திற்குமுடிபு

வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே. ௩௬

* 'அவ்வியல்' என்பது சேனா—பாட

915 பெயரெச்சத்திற்குமுடிபு

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே. ௩௭

916 ஒழியிசையெச்சத்திற்குமுடிபு

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின. ௩௮

917 எதிர்மறையெச்சத்திற்குமுடிபு

எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின. ௩௯

918 உம்மையெச்சத்திற்குமுடிபு

உம்மை எச்சம் இருவீற் றானும்
தன்வினை ஒன்றிய முடிபா கும்மே ௪0

919 அவ்வெச்சவும்மையதுகாலமயக்கம்

தன்மேற் செஞ்சொல் வருஉங் காலை
நிகழுங் காலமொடு வாராக் காலமும்
இறந்த காலமொடு வாராக் காலமும்
மயங்குதல் வரையார் முறைநிலை யான. ௪௧

920 எனவெனெச்சமாமாறு

எனவென் எச்சம் வினையொடு முடிமே. ௪௨

921 ஏனையெச்சங்கட்குமுடிபுவேற்றுமை

எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி இலவென மொழிப. ௪௩

922 குறிப்பெச்சமும் இசையெச்சமும் முடியுமாறு

தத்தங் குறிப்பின எச்சஞ் செப்பும். ௪௪

923 சொல்லெச்சத்திற்கு முடிபு

சொல்லென எச்சம் முன்னும் பின்னும்
சொல்லள வல்லது எஞ்சுதல் இன்றே. ௪௫

924 மரபுவழுக்காக்கின்றது

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல். ௪௬

925 மேலதற்கோர் புறனடை

மறைக்குங் காலை மரீஇய தொரால். ௪௭

926 ஈ தா, கொடுவென்னும் மூன்று சொற்கு மரபு வேறுபாடு

ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய. ௪௮

927 ஈயென்பதன் மரபு

அவற்றுள்,
ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே. ௪௯

928 தாவென்பதன் மரபு

தாவென் கிளவி ஒப்போன் கூற்றே. ௫௦

---

* இச்சூத்திரத்தின் முதலில் 'அவைதாம்' என்ற சொற்சீரடியைக் கொண்டுரைப்பர் சேனாவரையர்.

929 கொடுவென்பதன் மரபு

கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே ௫௧

930 கொடுவென்பதற்கு - வழு

அமைக்கின்றது

கொடுவென் கிளவி படர்க்கை யாயினுந்
தன்னைப் பிறன்போற் கூறுங் குறிப்பிற்
றன்னிடத் தியலு மென்மனார் புலவர். ௫௨

931 இதுவுமொருசார் வழுவமைக்கின்றது

பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்
அன்றி அனைத்துங் கடப்பா டிலவே. ௫௩

932 ஓசைவேறுபாட்டான் ஒருசொல்

ஒருசொல்லாமென்கிறது.

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி ஆகிட னுடைத்தே. ௫௪

933 பொருளிடைச்சொற்களுட்சில

நிலைவேறுபாடு

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே. ௫௫

934 புதியசொற்களுங்கொள்கவெனல்

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே. ௫௬

935 செய்யுள் விகாரம்

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல் ௫௭

936 மேலதற்கோர் புறனடை

குறைத்தன வாயினும் நிறைப்பெயர் இயல ௫௮

937 விசேடிக்குஞ்சொல் இவ்வாறு நிற்குமெனல்

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே ௫௯

938 உரிச்சொற்கும் விசேடித்தலுண்டெனல்

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய ௬0

939 வினையெச்சமுதலியன வேறுபொருள் பெறுமெனல்

வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய ௬௧

940 தொடர்மொழிப்பொருள் வேறுபாடு

உரையிடத் தியலும் உடனிலை அறிதல். ௬௨

941 வினைக்குறிப்புச்சொல்பொருள்தரும் வேறுபாடு

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே
இன்ன என்னும் சொல்முறை யான. ௬௩

942 ஒருசொல் இருபொருளுணர்த்துவதோர் மரபுவழுவமைக்கின்றது

ஒருபொருள் இருசொற பிரிவில வரையார். ௬௪

943 பாலவழுஅமைககினறது

ஒருமை சுட்டிய பெயாநிலைக கிளவி
பனமைக காகும இடனுமா ருண்டே. ௬௫

944 ஆற்றுபபடையில முன்னிலையொருமை பனமையொடு முடிகவெனல

முன்னிலை சுடடிய ஒருமைக் கிளவி
பனமையொடு முடியினும வரைநிலை யின்றே
ஆறறுபபடை மருஙகிற போறறல் வேண்டும். ௬௬

945 அதிகாரப்புறனடை

செயயுள மருஙகினும வழககியல மருங்கினும்
மெய்பெறக களநத கிளவி யெலலாம்
பலவேறு செய்தியின் நூனெறி பிழையாது
சொலவரைந தறியப பிரிததனர் காட்டல. ௬௭

எசசவியல முறறிறறு.

சொல்லதிகாரச சூத்திரங்கள் 462

முறறிற்று.

௨

# பொருளதிகாரம்

## சூத்திரத்தொகைவகை.

ஈட்டும் அகத்திணையும் ஏய்ந்த புறத்திணையும்
காட்டு களவியலும் கற்பியலும் — ஈட்டும்
பொருளியல்மெய்ப் பாட்டுவமம் போற்றிய செய்யுள்
மரபியலும் ஆம்பொருளின் வைப்பு

பூமலர்மென் கூந்தால்! பொருளியற் சூத்திரங்கள்
ஆவவறு நூற்றுப்பத் தைந்தாகும் — மூவகையால்
ஆயிரத்தின் மேலும் அறுநூற் றொருபதென்ப
பாயிரத்தொல் காப்பியர்க்குப் பார்.

— o —

உ

மூன்றாவது

# பொருளதிகாரம்.

முதலாவது

## அகத்திணையியல்.

---

946 எழுவகைத்திணை

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப. ௧

947 எழுவகையுள் தமக்கென நிலம் பெறுவனவும் பெறாதனவும் கூறுதல்

அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே. ௨

948 பாடலுட்பயின்ற மூவகைப்பொருள்

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை. ௩

949 முதற்பொருளின்னதெனல்

முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே. ௪

950 நால்வகை நிலம்

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே ௫

951 முல்லைக்குங் குறிஞ்சிக்கும் பொழுது கூறல்

காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர் ௬

952 எய்தியதன்மேற் சிறப்புவிதி

பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப ௭

953 சிறுபொழுதே பெறுவன கூறல்

* வைகுறு விடியல் மருதம் எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும். ௮

954 நானிலத்துக்கும் பாலைக்குங் காலங் கூறல்

நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே. ௯

955 எய்தியதன்மேற் சிறப்புவிதி

பின்பனி தானும் உரித்தென மொழிப. ௧௦

* 'வைகறை' எனவும் பாடம்

956 பாலைப்பகுதியுமுரிய பின்பனியும்

இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
உரிய தாகும் என்மனார் புலவர். கக

957 மேலனவற்றிற்குப்புறனடை

திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே. கஉ

958 எய்தாததெய்துவித்தது

உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே கங

959 உரிப்பொருள் கூறல்

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிய பொருளே. கச

960 பாலைக்கட் குறிஞ்சியுநெய்தலுமயங்கல

கொண்டுதலைக் கழியினும் பிரிந்தவண் இரங்கினும்
உண்டென மொழிப ஓரிடத் தான. கரு

961 பாலைக்கட்குறிஞ்சிமயங்குதல்

கலந்த பொழுதும் காட்சியும் அன்ன. கசு

962 முதற்பொருளிருவகைத்தெனல்

முதலெனப் படுவ தாயிரு வகைத்தே. கஎ

963 கருப்பொருளிவையெனல்

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப கஅ

964 கருப்பொருட்குப்புறனடை

எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும். க௯

965 திணைநிலைப்பெயரினிருவகை

பெயரும் வினையுமென் றாயிரு வகைய
திணைதொறு மரீஇய திணைநிலைப் பெயரே. உ0

966 முல்லைகுறிஞ்சிக்கும் தலைமக்கள்

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே. உக

967 பாலைநெய்தற்றலைமக்கள்

ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே. உஉ

968 கைக்கிளை, பெருந்திணைக்கண்
தலைமக்களாவார்

அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர். உ௩

969 திணைநிலைப்பெயராதற்குரிய அறுவர்

ஏவல மரபின ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை யவரும் அன்னர். ௨௪

970 பாலைத்திணைகூறியது

ஓதல் பகையே தூதிவை பிரிவே. ௨௫

971 முதலமூவர்க்குரிய இருபிரிவு

அவற்றுள்,
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன ௨௬

972 அரசர்க்குரியபகைவயிற்பிரிவு

தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே ௨௭

973 அரசர்நெறிமுறையடிப்படுத்தப்பிரியுமாறும்
வணிகர்பொருள்வயிற்பிரியுமாறுங்கூறல்

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே ௨௮

974 எய்தாததெய்துவித்தது

மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே. ௨௯

975 வேளாளர்க்குரியமற்றோர்பிரிவுவிகற்பம்

மன்னர் பாங்கிற் பின்னோர் ஆகுப. ௩௦

976 நால்வருணத்தார்க்குமெய்தாத
தெய்துவித்தது

உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான. ௩௧

977 பதினெண்வேளிர்க்கும் வேந்தன்
வினையுரித்து

வேந்துவினை இயற்கை வேந்தனின் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே. ௩௨

978 குறுநிலமன்னர்க்குரியவிருபிரிவு

பொருள்வயிற் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான. ௩௩

979 பொருள்முதற்பிரிவிற்றலைவியுடன்
செல்லாமை

முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை. ௩௪

980 மகடூஉ மடலேறாமை

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான. ௨௫

981 உடன்போக்கிடத்துக்கூற்றுரியர்கள்

தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னு நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தலென்
றன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ

முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய. ௩௬

982 எய்தியதன் மேற்சிறப்புவிதி

ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செலலும் தாயரும் உளரே. ௩௭

983 பாலைக்கோர்வேறுபாடுகூறல்

அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே. ௩௮

984 தாயர்க்குரியனகூறித்தோழிக்குக்
கூற்றுநிகழுமாறுணர்த்தல்

தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித் தன்னெஞ்சு கலுழ்ந்தோளை
அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோ
டென்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன. ௩௯

985 இடைச்சுரத்துக்கண்டோர்கூறுவன

பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்வுஞ் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய கிளவியும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொ
டழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக் ககன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப ௪0

986 உடன்போக்கினுள் நற்றாயுந்தோழியுங்
கண்டோருங் கூறுவன கூறித்தலைவன் ஆண்டும்
பிறாண்டுங் கூறுவன கூறல்

ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்

அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமோ
டூதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழு மானமு மெடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் பரிந்தோட் குறுகி
இரத்தலும் தெளித்தலும் எனவிரு வகையோ
டுரைத்திற நாட்டமும் கிழவோன் மேன. ௪௧

987 எய்தாததெய்துவித்தது

எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே. ௪௨

988 பாலையாவதோரிலக்கணம்

நிகழ்ந்தது நினைத்தற் கேதுவும் ஆகும். ௪௩

989 ௪௧-ம் சூத்திரத்துக்குப்புறனடை

நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே. ௪௪

990 அகத்திணைக்குரியமரபுகள்
மரபுநிலை திரியா மாட்சிய வாகி
விரவும் பொருளும் விரவும என்ப. ௪௫

991 அகத்திணைக்கைகோட்குரியது
உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே. ௪௬

992 உள்ளுறையுவமக்கூறுவது
உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே ௪௭

993 உள்ளுறையுவமம்உவமக்கொள்ளுமாறு
உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம். ௪௮

994 ஒழிந்தஉவமக்கூறுவது
ஏனை உவமம் தானுணர் வகைத்தே. ௪௯

995 கைக்கிளைக்குச்சிறந்தபொருளிதுவெனல்
காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புலனித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே. ௫௰

996 பெருந்திணையிலக்கணம்

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே. ௫௧

997 எய்தாததெய்துவித்தது

முன்னைய நான்கும் முன்னதற் கென்ப. ௫௨

998 புலனெறிவழக்கம்இவற்றிற்குரிமை உடைத்தெனல்

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபா டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர். ௫௩

999 ஐந்திணைக்காவதோர்வரையறை

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர். ௫௪

1000 புறத்திணைக்கெய்தாததெய்துவித்த தெய்தியதுவிலக்கல்

புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே. ௫௫

அகத்திணையியல் முற்றிற்று

## இரண்டாவது
# புறத்திணையியல்.

1001 வெட்சிபதினொருதுறையதெனல்

அகத்திணை மருங்கின் அரிலதப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே. ௧

1002 வெட்சியின்பொதுவிலக்கணம்

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும். ௨

1003 ஈரேழ்துறையுமிருபத்தெட்டாமாறு

படையியங் கரவம் பாககத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவலுழித் தோற்றம்
தந்துநிறை பாதீ டுண்டாட்டு கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும். ௩

1004 வெட்சிக்குப்புறனடை

மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே. ௪

1005 புறத்திணைப்பொதுவழுவேழுமுரைத்தல

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழனிலை உளப்பட ஓடா
உடல்வேந் தடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
அனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்
றிருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந் தெழுந்தோனை மகிழ்ந்து பறைதூங்க
நாடவற் கருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கால்கோள் நீர்ப்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே. ரு

1006 வஞ்சி, இன்னதன் புறமெனல்

வஞ்சி தானே முல்லையது புறனே. ௬

1007 வஞ்சித்திணை, இன்னபொருட்டெனல்

எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே. ௭

1008 வஞ்சிபதின்மூன்றுதுறையதெனல்

இயங்குபடை அரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பிற் றுறைபதின் மூன்றே. ௮

1009 உழிஞை, இன்னதன்புறத்ததெனல்

உழிஞை தானே மருதத்துப் புறனே. ௯

1010 உழிஞையின் பொதுவிலக்கணம்

முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற் றாகும் என்ப. கo

1011 உழிஞை எட்டுத்துறையதெனல்

அதுவே தானும் இருநால் வகைத்தே. கக

1012 உழிஞைத்துறையின் பெயர்முதலியன

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் கிவர்தலும் தோலின் பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறப்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே. கஉ

1013 எய்தாததெய்துவித்தது

குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்

புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்
றூர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
அகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும் இகன்மதிற்
குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோ டொன்றத்
தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப. ௧௩

1014 தும்பை, இன்னதன் புறத்ததெனல்

தும்பை தானே நெய்தலது புறனே. ௧௪

1015 தும்பையின் பொதுவிலக்கணம்

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப. ௧௫

1016 எய்தியதன் மேற்சிறப்புவிதி

கணையும் வேலுந் துணையுற மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலந் தீண்டா அருநிலை வகையோ
டிருபாற் பட்ட ஒருசிறப் பின்றே. ௧௬

1017 தும்பை பன்னிரு துறையதெனல்

தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்

வென்றி மிகுத்த வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண் டெறிந்த தார்நிலை அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய எருமையும் படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடும் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்
திருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத் திறைவன் வீழ்ந்தெனச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற் குடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே. கஎ

1018 வாகை இன்னதென்பது உணர்த்தெனல்

வாகை தானே பாலையது புறனே. கஅ

1019 வாகையின் பொதுவிலக்கணம்

தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப. கக

1020 வாகையின் சிறப்பிலக்கணம்

அறுவகைப பட்ட பார்ப்பனப பக்கமும
ஐவகை மரபின அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும
மறுவில செய்தி மூவகைக காலமும
நெறியின் ஆற்றிய அறிவன தேயமும
நாலிரு வழக்கிற றாபதப பக்கமும
பாலறி மரபிற பொருநர் கண்ணும
அனைநிலை வகையோ டாங்கெழு வகையிற
றொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்

1021 மறத்துறைஅறத்துறைபதினெட்டெனல்

கூதிர் வேனில் என்றிரு பாசறைக
காதலின் ஒன்றிக கண்ணிய மரபினும
ஏரோர் களவழி அன்றிக களவழித
தேரோர் தோற்றிய வென்றியும தேரோர்
வென்ற கோமான முன்தேர்க குரவையும
ஒன்றிய மரபிற பின்தேர்க் குரவையும்
பெருமபகை தாங்கும ஆற்ற லானும
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும
ஒல்லார் நாணப பெரியவர்க் கண்ணிச
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும

ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானும்
துகட்டபு சிறப்பிற் சான்றோர் பக்கமும்
கட்டினம் நீத்த பாலி னானும்
எட்டுவகை நுதலிய அவையத் தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னானுமென்
றிருபாற் பட்ட ஒன்பதிற் றுத் துறைத்தே ௨௧

1022 காஞ்சி, இன்னதன் புறத்ததென்பது

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே. ௨௨

1023 காஞ்சியின் பொது விலக்கணம்

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே. ௨௩

1024 நிலையின்மைப்பொருளை வகுத்தோதியது

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்

புண்கிழித்து முடியும் மறத்தி னானும்
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோற்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னன் என்று இரங்கிய மன்னை யானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேஎத்த மனைவி காஞ்சி யானும்
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனும் சேர்த்துக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும்
தாமே எய்திய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்

கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்
மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண் டுடைத்தே. ௨௪

1025 பாடாண்டிணையின் எண்வகைப்
பொருளும்

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே. ௨௫

1026 தேவர்பகுதியுரைத்தல்

அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப. ௨௬

1027 மக்கட்பகுதி கூறுவது

வழங்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்

முன்னோர் கூறிய குறிப்பினுஞ் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே. ௨௭

1028 மேற்பதிகட்கெய்தியதன்மேற்
சிறப்புவிதி

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர். ௨௮

1029 புரைதீர்காமத்திற்குப்புறனடை

குழவி மருங்கினுங் கிழவ தாகும் ௨௯

1030 பகருநின்றகாமத்திற்குப்புறனடை

ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப. ௩௦

1031 மேலைந்துசூத்திரங்கட்குப்புறனடை

வழக்கொடு சிவணிய வகைமை யான. ௩௧

1032 அகத்திணைநிகழுமிடம்

மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே. ௩௨

1033 பாடாண்டிணைக்குரியசிறப்பில்லாத
தெய்வங்கள்

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே. ௩௩

1034 எய்தாததெய்துவித்தது

கொற்ற வள்ளை ஓரிடத் தான. ௩௪

1035 மகட்பாடாண்டிணைக்குரிய துறை

கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலின் ஓக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையொ டுளப்படத் தொகைஇத்
தொகைக்க நான்கும் உளவென மொழிப. ௨௫

1036 இதுவுமது

தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்

சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத் தேத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமும்
மன்னெயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயிற் றோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சமின் றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பிற்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே ௩௬

புறத்திணையியல் முற்றிற்று.

---

மூன்றாவது

## களவியல்.

1037 களவொழுக்கம் இன்னதென்பது

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர்
இயல்பே.

1038 காமக்கூட்டத்திற் குரிய தலைவரெதிர்ப்படு
நிலைக்காரணமும் எதிர்ப்படுதற்குரியோர்
பெற்றியுங் கூறல்

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே ௨

1039 எய்தாததெய்துவித்தெய்தியது விலக்கல்

சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்டலான ௩

1040 ஐயந்தெளிதற்காரணக்கருவி

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்
றன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப. ௪

1041 புணர்ச்சிநிமித்தவழி நிலைக்காட்சி

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும். ௫

1042 புணர்ச்சியமைதிகூறல்

குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர். ௬

1043 இருவகைப்புணர்ச்சிப்பின்னாசகளவின்றி வரைந்துகோடனிகழ்ச்சிகூறல்

பெருமையும் உரனும் ஆடூஉ மேன. எ

1044 பெண்ணிற்குரிய குணங்கள்

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப. அ

1045 களவிலக்கணப்பொது ஒன்பது

வேட்கை யொருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப. கூ

1046 இயற்கைப்புணர்ச்சிப்பின் தலைவர்க்கு நிகழ்வன

முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி யுறாஅது
தந்நிலை அறிதல் மெலிவுவிளக் குறுத்தல்
தந்நிலை உரைத்தல் தெளிவகப் படுத்தலென்
றின்னவை நிகழும் என்மனார் புலவர். க0

1047 பாங்கற்கூட்டமுந்தோழியிற்கூட்டமும் ஆகுமாறு

மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்

நீடுநினைந திரஙகல கூடுதல உறுதல
சொலலிய நுகர்சசி வலலே பெறறுழித்
தீராத தேறறம உளபபடத தொகைஇப
பேராசசிறபபின் இருநானகு கிளவியும
பெறறவழி மகிழசசியும பிரிநதவழிக கலஙகலும்
நினறவை நினைஇ நிகழபவை உரைபபினும
குறறம காட்டிய வாயில பெட்பினும
பெட்ட வாயிலபெறறு இரவுவலி யுறுபபினும
ஊரும பேரும கெடுதியும பிறவும
நீரிற குறிபபின நிரமபக கூறித
தோழியைக குறையுறும பகுதியும தோழி
குறையவட் சாரததி மெயயுறக கூறலும
தண்டா திரபபினும மறறைய வழியும
சொலலவட சாரததலின புலலிய வகையினும்
அறிநதோள் யாபபின அவவழி மருஙகில
கேடும பீடும கூறலும தோழி
நீககலி னாகிய நிலைமையும நோககி
மடன்மா கூறும இடனுமா ருண்டே. கக

1048 தலைவன கூறறுநிகழுமாறு கூறல்

பண்பிற பெயர்பபினும பரிவுறறு மெலியினும்
அன்புறறு நகினும அவட்பெறறு மலியினும்
ஆறறிடை யுறுதலும் அவ்வினைக்கியலபே. கஉ

1049 எய்தியது விலக்கிப் பிறிது விதி
வகுத்தது

பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப கரு

1050 கைக்கிளை, பெருந்திணைக் குறிப்புகள்

முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே க௬

1051 பன்னிரண்டனுள் இடையதாய் ஒழிந்த
ஐந்தைக் கூறல்

முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே. கஎ

1052 தலைவிக்குரிய கிளவி கூறல்

இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்
காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும்
தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையிற்
காட்சி ஆசையிற் களம்புக்குக் கலங்கி
வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருந்தின் கண்ணும்
வாளாண் எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்

வரைவுடன் படுதலும் ஆங்கதன் புறத்துப்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோள் மேன என்மனார் புலவர் கக

1053 "அச்சமும் நாணும்" எனபதறகுப்
புறனடை

காமர்த் திணையிற கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலிற
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயி ஞன கஎ

1054 நாணு மடனுந் தன்கை மதிரிந்தவால்

காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின
ஏமுற இரண்டும் உளவென மொழிப. கஅ

1055 நாணுமட னுநிகழாதகூற்றைத் தோழிக்குத்
தலைவிகூறல

சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்லகூற்றுமொழி அவள்வயி ஞன. கக

1056 தலைவிகூற்றுநிகழ்த்துமாறு கூறுகின்றான்
சில கூற்றுக்களுள் தனவயினுரிமையும்
அவனவயிற்பரத்தையும்பட நிகழ்த்தவும்
பெறுமெனல

மறைந்தவற காண்டல் தற்காட்டுறுதல்
நிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினு நாணுமிக வரினும்
இட்டுப்பிரி விரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்
வந்தவழி எள்ளினு விட்டுயிர்த் தழுங்கினும்
நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற் கருமை வாயிற் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத் துயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணு
நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் களவறி வுறினும்

தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின் றாநிலை இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமஞ் சிறப்பினும் அவனளி சிறப்பினும்
ஏமஞ் சான்ற உவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்
அன்னவும் உளவே ஓரிடத் தான. உ0

1057 தலைவிகூற்று இன்னவாறுமாமெனல்

வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமும் உளவே. உக

1058 தலைவிகூற்றிற்குச்சிறப்பில்லனகூறி
அவையும் அகப்பொருளாமெனல்

உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன் றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு

காமக் கிழவன உளவழிப் படினும்
தாவில நன்மொழி கிழவி கிளப்பினும
ஆவகை பிறவும தோன்றுமன பொருளே. உஉ

1059 தோழிகூற்றுநிகழிடங்களிவையெனத்
தொகுத்துரைத்தல

நாற்றமும தோற்றமும ஒழுக்கமும் உண்டியும
செய்வினை மறைப்பினும செலவினும பயில்வினும
புணர்ச்சி எதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉம
உணர்ச்சி ஏழினும உணர்ந்த பின்றை
மெய்யினும பொய்யினும வழிநிலை பிழையாது
பலவேறு கவர்பொருள நாட்டத தானும
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப
பெருமையிற பெயர்ப்பினும உலகுரைத
தொழிப்பினும்
அருமையின அகற்சியும அவளறி வுறுத்துப
பின்வா என்றலும பேதைமை ஊட்டலும
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலும உரைத்துழிக் கூட்டமோ
டெஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும
வந்த கிழவனை மாயம செப்பிப
பொறுத்த காரணம் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற கண்ணும

குறைநதவட் படரினும் மறைநதவள் அருகத்
தனனொடும அவளொடும் முதலமூன் றளைஇப்
பினனிலை நிகழும பலவேறு மருஙகினும
நனனயம பெறறுழி நயமபுரி இடத்தினும்
எணணரும பனனகை கண்ணிய வகையினும
புணாசசி வேணடினும வேண்டாப் பிரிவினும்
வேளாண பெருநெறி வேணடிய இடததும்
புணாநதுழி உணாநத அறிமடச சிறபபினும
ஓமபடைக கிளவிப பாஙகின் கண்ணும
செஙகடு மொழியாற சிதைவுடைத தாயினும்
எனபுநெகப பிரிநதோள வழிசசென்று கடைஇ
அன்பு தலைபடுதத வனபுறைக் கண்ணும்
ஆறறது தீமை அறிவுறு கலக்கமும
காபபின் கடுமை கையற வரினும
களனும் பொழுதும வரைநிலை விலக்கிக்
காதல மிகுதி உளப்படப் பிறவும்
நாடும ஊரும இலலும் குடியும
பிறபபும சிறப்பும இறபப நோக்கி
அவனவயிற றோனறிய கிளவியொடு தொகைஇ
அனைநிலை வகையான வரைதல வேண்டினும்
ஐயச செய்கை தாய்க்கெதிர் மறுததுப்
பொய்யென மாறறி மெய்வழிக கொடுப்பினும்

அவன்விலங் குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவனவரைவு மறுப்பினும
முனனிலை அறமெனப படுதலின் றிருவகைப
புரைதீர கிளவி தாயிடைப புகுப்பினும
வரைவுடன் பட்டோர கடாவல வேணடினும
ஆங்கதன் தன்மையின் வனபுறை உளப்பட்ப
பாஙகுற வநத நாலெடடு வகையும
தாஙகருஞ சிறப்பிற றோழி மேன.   உ௩

1060 செவிலிகூற்றுநிகழுமாறுகூறல

களவல ராயினும காமமெய்ப படுப்பினும்
அளவுமிகத தோன்றினும தலைப்பெயது காணினும
கட்டினும சமுஙகினும வெறியென இருவரும
ஒட்டிய திறததாற செய்திக கணணும
ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும
காதல கைம்மிகக் கனவின் அரற்றலும்
தோழியை வினவலும தெய்வம வாழததலும்
போககுடன் அறிநதபின் றோழியொடு கெழீஇக்
கற்பின ஆககததுநிற்றற் கண்ணும
பிரிவின எசசததும மகனெஞசு வலிப்பினும்
இருபாற குடிப்பொருள் இயல்பின் கணணும
இன்ன வகையிற பதினமூன்று கிளவியோ
டன்னவை பிறவும் செவிலி மேன.   உ௪

1061 நற்றாய்க்குரியகூற்றுரைத்தல்

தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே. உரு

1062 நற்றாயகஞ்செவிலிக்குமுரிய இலக்கணம்

கிழவோன் அறியா அறிவினள் இவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவி அறிதலும் உரித்தே. உசு

1063 தலைவிக்குரியவிலக்கணம்

தன்னுறு வேட்கை கிழவன் முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை
பிறநீர் மாக்கள் அறிய ஆயிடை
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப. உஎ

1064 எய்தாததெய்துவித்தது

காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆகலும் உரித்தே. உஅ

1065 களங்கூறுதற்குமுரியாள்தலைவியெனல்

அவன்வரம் பிறத்தல் அறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
தான்செலற் குரியவழி ஆக லான. உகூ

1066 தோழிக்குங்களஞ்சுட்டுக்கிளவியுரித்தெனல்.

தோழியின் முடியும் இடனுமா ருண்டே. ௩௦

1067 தலைவிக்கெய்தியதோரிலக்கணம்

முந்நாள் அல்லது துணையின்று கழியா
தந்நா ளகத்தும் அதுவரை வின்றே. ௯௧

1068 இதுவுமது

பன்னூறு வகையினும் தன்வயின் வருஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
துணையோர் கருமம் ஆக லான ௯௨

1069 செவிலியின் சிறப்பு

ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவோள் செவிலி யாகும் ௯௩

1070 தோழியது சிறப்பு

தோழி தானே செவிலி மகளே. ௯௪

1071 இதுவுமது

சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே ௯௫

1072 தோழிசூழ்ச்சியிற்றுணைப்பகுதியதெனல்

குறைவுற உணர்தல் முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென
மதியுடம் படுத்தல் ஒருமூ வகைத்தே. ௯௬

1073 தலைவன்கூற்று நிகழ்தற்பெறுமாறு

அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாஅனென மொழிப. ௯௭

1074 தோழிமுயற்சிபிறக்குமிடம்

முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்தல் ஆற்றலும் அவள்வயி னான. ௩அ

1075 கூட்டுவிக்கின்றவட்குக்கூடுதற்குரியகுறி

குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப. ௩௯

1076 இரவுக்குறியிடமுணர்த்துமாறு

இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான. ௪0

1077 பகற்குறியுணர்த்துமாறு

பகற்புணர் களனே புறனென மொழிப
அவளறி வுணர வருவழி யான ௪௧

1078 தோழி அல்லகுறிப்படுமாறு

அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே. ௪௨

1079 தலைவனும்அல்லகுறியால்வருந்தல்

ஆங்காங் கொழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான ௪௩

1080 தலைவற்குரியதோரிலக்கணம்

மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளும்
துறந்த ஒழுக்கங் கிழவோற் கில்லை ௪௪

1081 தலைவற்கில்லன கூறல்

ஆற்றின தருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உள்ளப்பட அதனோ ரன்ன. ௪௫

1082 பெற்றோர்களவொழுக்கமுணருமாறு

தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப ௪௬

1083 தந்தைதன்னைக்குற்றேயகளவொழுக்க முணர்த்தல்

தாயறிவுறுதல் செவிலியோ டொக்கும். ௪௭

1084 களவுவெளிப்படுதற்குநிமித்தம் தலைமகனென்ல

அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவன் ஆகும். ௪௮

1085 வரையும்பகுதியினைத்தெனல்

வெளிப்பட வரைதல் படாமை வரைதல்
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே ௪௯

1086 பிரியுமிடமிதுவென்பதும் பிரியலாகா இடமிதுவென்பதும்

வெளிப்படை தானே கற்பினொ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை. ௫௦

களவியல் முற்றிற்று

நான்காவது

# கற்பியல்.

1087 கற்பின் பொதுவிலக்கணம்

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்
வதுவே. ௧

1088 எய்தியதன் மேற்சிறப்புவிதி

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான. ௨

1089 வேளாளர்க்குரியதோரிலக்கணம்

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே. ௩

1090 ஆரிடம் பிறந்தவாறுங்காரணமும்

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப ௪

1091 தலைவன் கூற்றெல்லாந்தொகுத்துரைத்தல்

கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்

நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொ டளவிய இடத்தும்
அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினும்
தான்அவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிய
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்

புகலைவற பயநத புனிறுசேர பொழுதின்
நெயயணி மயககம புரிநதோள நோககி
ஐயா பாஙகினும அமராச சுட்டியும
செயபெருஞ சிறபபொடு சோதற கண்ணும்
பயஙகெழு துணையணை புலலிய புலலா
துயஙகுவள கிடநத கிழததியைக குறுகிய
புலகென முனனிய நிறையழி பொழுதின
மெலலென சீறடி புலலிய இரவினும
உறலருங குணமையின ஊடல மிகுததோளைப
பிறபிற பெணடிரின பெயாததற கணணும
பிரிவின எசசததுப புலமபிய இருவரைப
பிரிவின நீககிய பகுதிக கண்ணும
நினறுநனி பிரிவின அஞசிய பையுளும
சென்றுகை இகநதுபெயாத துளளிய வழியும
காமததின் வலியும கைவிடின அசசமும
தானவட பிழைதத நிலையின கணணும
உடனசேறல செய்கையொ டனனவை பிறவும்
மடமபட வநத தோழிக கண்ணும
வேறுநாட டகலவயின விழுமத தானும
மீட்டுவர வாயநத வகையின கணணும
அவவழிப பெருகிய சிறபபின கணணும்
பேரிசை ஊர்திப பாகர் பாஙகினும

காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி
இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனை வாயில் எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதி முப்பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன ரு

1092 தலைவிகூற்று நிகழுமிடங்கூறல

அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கிற்
பெருமையிற் றிரியா அன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சுபுண் ணுறீஇ
நளியின் நீக்கிய இளிவரு நிலையும்

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற
ககன்ற கிழவனைப புலமபுநனி காட்டி
இயன்ற நெஞசம தலைபபெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுதத ஈரதது மருஙகினும
தஙகிய ஒழுககத்துக கிழவனை வணஙகி
எஙகையர்க குரையென இரததற கண்ணும்
செலலாக காலைச செலகென விடுததலும
காமக் கிழததி தனமகத தழீஇ
ஏமுறு விளையாட டிறுதிக கண்ணும
சிறநத செய்கை அவவழித தோன்றி
அறமபுரி உளளமொடு தனவரவு அறியாமைப
புறஞசெய்து பெயாததல வேண்டிடத தானும
தநதையர் ஒபபர மககள் எனபதனால
அநதமில சிறபபின் மகபபழித்து நெருங்கலும்
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நலலிசை நயநதோர் சொலலொடு தொகைஇப்
பகுதியின நீஙகிய தகுதிக கணணும
கொடுமை ஒழுககம கோடல வேணடி
அடிமேல வீழநத கிழவனை நெருங்கிக
காதல எங்கையர் காணின் நன்றென
மாதர் சான்ற வகையின கண் ணும்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை

மாபப பரததை உளளிய வழியும
தனவயிற சிறபபினும அவனவயிற பிரிபபினும்
இனனாத தொலசூள எடுததற கண ணும
காமக கிழததியா நலமபா ராட்டிய
தீமையின முடிககும பொருளின கண ணும
கொடுமை ஒழுககம தோழிக குரியவை
வடுவறு சிறபபிற கறபிற றிரியாமைக
காயதலும உவததலும பிரிததலும பெட்டலும
ஆவயின வரூஉம பலவேறு நிலையினும
வாயிலின வரூஉம வகையொடு தொகைஇக
கிழவோள செபபல கிழவ தெனப ௬

1093 தலைவிகூற்றினகட்படுவதோரிலககணம

புணாநதுடன போகிய கிழவோள் மனையிருந
திடைசசுரத திறைசசியும வினையும சுட்டி
அனபுறு தகக கிளததல தானே
கிழவோன் செயவினைக கசசம ஆகும. ௭

1094 தோழி முதலியவாயிலகட்கெயதாத
தெய்துவிததல

தோழியுள ளுறுதத வாயில புகுபபினும்
ஆவயின நிகழும என்மனார் புலவர். ௮

1095 தோழிக்குரியகூற்றுரைத்தல்

பெறறகரும பெருமபொருள முடிநதபின வநத
தெறறகரு மரபிற சிறபபின கண ணும
அறறமழி வுரைப்பினும அறறம இலலாக்
கிழவோட சுடடிய தெயவக கடததினும
சீருடைய பெருமபொருள வைததவழி மறபபினும்
அடஙகா ஒழுககத தவனவயின அழிநதோளை
அடஙகக காடடுதற பொருளின கண ணும
பிழைததுவந திருநத கிழவனை நெருஙகி
வணஙகியல மொழியான வணஙகற கண ணும 12
இழைததாங காககித கொடுததற கண ணும 11
புறமபடு விளையாடடுப புலவிய புகறசியும
சிறநத புதலவனை நேராது புலமபினும
மாணலம தாவென வகுததற கண ணும
பேணா ஒழுககம நாணிய பொருளினும
சூளாயத திறததால சோர்வுகண டழியினும்
பெரியோர் ஒழுககம பெரிதெனக கிளநது
பெறுதகை இலலாப பிழைபபினும அவவயின்
உறுதகை இலலாப புலவியுள மூழகிய
கிழவோளபால நினறு கெடுததற கண ணும
உணாபபுவயின வாரா ஊடலுற றோள்வயின
உணாததல வேண்டிய கிழவோன்பால நினறு

தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எண்மைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇக்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலை எதிர்நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக் குரிய என்மனார் புலவர். ௬

1036 காமக்கிழத்தியர் கூற்றைத் தொகுத்துரைத்தல்

புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின் றென்று பெருக்கிய பருவரற் கண்ணும்
காதற் சோர்வின் கடப்பாட் டாண்மையின்
தாய்போற் றழீஇக் கழறிய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்
இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து
பின்னர் வந்த வாயிற் கண்ணும்

மனையோள் ஒத்தலிற் றன்னோர் அன்னோர்
மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும்
எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன. ௧0

1097 அகங்காக்கட்புகுதற்குரியவாயில்கள்
கூற்றுரைத்தல்

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய. ௧௧

1098 செவிலிகூற்றுரைத்தல்

கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப. ௧௨

1099 அறிவர்கூற்றுரைத்தல்

சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய. ௧௩

1100 அறிவர்க்கெய்தியதன்மேற்சிறப்புவிதி

இடித்துவரை நிறுத்தலும் அவர தாகும்
கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின். ௧௪

1101 தலைவர்க்குப்புலவியுமூடலுநிகழிடம்

உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய கரு

1102 புலவியில் தோழிகூற்று நிகழுமெனல்

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய. கசு

1103 எய்தியதன்மேற்சிறப்புவிதி

பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழத்தி
மடத்தகு கிழமை உடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள். கஎ

1104 தலைவிக்காவதோரிலக்கணம்

அவன்குறிப் பறிதல் வேண்டியும் கிழவி
அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே. கஅ

1105 தலைவற்குரியதோரிலக்கணம்

காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக் கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை அவட்கிய லான. ககூ

1106 தலைவன்பணிமொழிக்கேற்பத்தலைவியுங்கூறல்

அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட்கும்
உரித்தே. உ0

1107 தலைவிக்குந்தோழிக்குமுரியகூற்று

களவும் கற்பும் அலர்வரை வின்றே. உக

1108 அலர்கூறியதன்பயனிதுவெனல்

அலரிற் றோன்றும் காமத்தின் சிறப்பே உஉ

1109 காமச்சிறப்புரைத்தல்

கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே. உங

1110 வாயில்கட்குரிய இலக்கணம்

மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை. உச

1111 எய்தியதிகந்துபடாமற்காத்தல்

மனைவி முன்னர்க் கையறு கிளவி
மனைவிக் குறுதி உள்வழி உண்டே. உரு

1112 வாயில்கட்குரியதோர் பகுதி

முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர். உசா

1113 கூத்தர்க்குரியகிளவிகூறல்

தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏற்றலும்
பல்லாற் றானும் ஊடலிற் றணித்தலும்
உறுதி காட்டலும் அறிவுமெய் நிறுத்தலும்
ஏதுவின் உணர்த்தலும் துணிவு காட்டலும்
அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன. உஎ

1114 கூத்தர்க்கும்பாணர்க்குமுரிய

இலக்கணம்

நிலம்பெயர்ந் துறைதல் வரைநிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தனை உரிய ௨அ

1115 இளையோர்க்குரியகிளவி

ஆற்றது பண்பும் கருமத்து வினையும்
ஏவல் முடிவும் வினாவும் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி என்ப ௨௯

1116 உழைப்புக்குங்காப்புக்குமுரிய

இளையோர்க்குரிய இலக்கணமுரைத்தல்

உழைக்குறுந் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு
நடக்கை எல்லாம் அவர்கட் படுமே. ௩௦

1117 தலைவன்பரத்தையைநீங்குமிடங்கூறல்

பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்தது நினைஇக் கிழவோன் ஆங்கட்
கலங்கலும் உரியன் என்மனார் புலவர். ௩௧

ஐந்தாவது

# பொருளியல்.

1140 வழுவமைதியினிருவகை

இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே
அசைதிரிந் தியலா எனமனார் புலவர். க

1141 முறைகூறியஇருவகையானும்பொருள்
வேறுபடவழீஇயமையுமாறு

நோயும் இன்ப மும இருவகை நிலைபிற
காமங் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல நெஞ்சொடு புணர்த்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச
செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும
அவரவர் உறுபிணி தமபோலச சேர்த்தியும
அறிவும் புலனும வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும உரிய வாக
உவம ப் பிற படுத்ததலும உவமமோ
டொ் த் திருவர்க்கும் உரியபாற் கிளவி. உ

1142 பகுதிககிளவி கூறல

கனவும் உரிததால அவவிடத தான. ௩

1143 கனவுகளவினகட்செவிலிக்கு முரிததெனல

தாய்க்கும் உரிததாற போக்குடன கிளப்பின் ௪

1144 எயதாதெயதுவிததது

பாலகெழு கிளவி நாலவாக்கும உரிததே. ௫

1145 இறந்ததுகாததது

நட்பின நடக்கை ஆங்கலங கடையே. ௬

1146 தலைவியினவேறுபாடுபரிகரிததற்குரியோர இவரெனல

உயிரும் நாணும் மடனும என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நாலவர்க்கும உரிய. ௭

1147 வருததமிக்கவழிவழுவமையுமாமெனல

வண்ணம் பசந்து புலம்புறு காலை
உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையிற புணாக்கவும பெறுமே. ௮

1148 தலைவனேடுவேறுபட்டுழிப்பிறக்கும வழுவமைதி

உடமபும உயிரும வாடியக காலும
என்னுற றனகொல இவையெனின்
கிழவோற் சேர்தல் கிழததிக் கில்லை. ௯

1149 இதுவுமது

ஒருசிறை நெஞ்சமொ டுசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப. க0

1150 மடைமையிற்வழுவாகாவழு

தன்வயிற் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப. கக

1151 தலைவியாற்றோழிக்காகும்வழு

அறத்தொடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப. கஉ

1152 இல்லறத்தொடுநிற்றலின்னதென்றல்

எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்
கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பா
டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர். கங

1153 மேலதற்கோர்புறனடை

உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்
அப்பொருள் வேட்கைக் கிளவியின் உணர்ப. கச

1154 மறைபுலப்படுத்தல்வழுவெனல்

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான. கரு

1155 *தோழிக்குந்தலைவிக்குமுரியவழு*

பொழுதும் ஆறும் காப்புமென் றிவற்றின்
வழுவி னாகிய குற்றம் காட்டலும்
தன்னை அழிதலும் அவணாறு அஞ்சலும்
இரவினும் பகலினும் நீவா வென்றலும்
கிழவோன் றன்னை வாரல் என்றலும்
நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப. ௧௬

1156 *கைக்கிளைபெருந்திணைக்கட்படுவதோர்வழு*

வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப. ௧௭

1157 *களவொழுக்கத்துக்குமறுதலையானவழு*

தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப. ௧௮

1158 *சொல்வேறுபட்டுப்பொருளுணர்த்துமவழு*

உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே. ௧௯

1159 *களவின்கணதோழிக்குரியதோர்வழு*

பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக் கைம்மிகுதல் உண்மை யான. ௨௦

1160 மேலதற்கோர்புறனடை

அன்பே அறனே இனபம் நாணொடு
துறநத ஒழுககம் பழிததன றுகலின
ஒனறும வேண்டா காபபின உளளே. ௨௧

1161 தோழிககுநதலைவிககுமுரியதோாவழு

சுரமென மொழிதலும வரைநிலை யின்றே. ௨௨

1162 உலகியலவழககுசெயயுட்காமெனல

உயாநதோா கிளவியும வழககொடு புணர்கலின்
வழககுவழிப படுததல செய்யுட்குக கடனே. ௨௩

1163 உலகியலவழககனறிபபொருளகூறினும
அமைக எனல்

அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்
வழககென வழஙகலும பழிததன றென்ப. ௨௪

1164 அறககழிவுடைததுபொருட்பயம
படுமெனல

மிகக பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத தலைபபிரியா நலவழிப படுததே. ௨௫

1165 முறைப்பெயாசசொற்பற்றிப்பிறநதவழு

முறைபபெயர் மருங்கிற கெழுதகைப் பொதுசசொல்
நிலைக்குரி மரபின இருவீறறும் உரிததே. ௨௬

1166 தோழிதலைவியுறுப்பினைத்தன்னுறுப்பாகக்
கூறப்பெறுமெனவழுஅமைக்கின்றது

தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்லா வாயினும் புல்லுவ உளவே. உஎ

1167 சொல்வழுவும்பொருள்வழுவும்
அமைத்தல்

ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப. உஅ

1168 மேலதற்கோர்புறனடை

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும். உஅ

1169 தலைவனூடலாலும்வாயில்சேறலாலுமாம்வழு

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர் ௩0

1170 களவினில்தலைவியின்கண்
நிகழ்வதோர்வழு

ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்
பிரிதல் அச்சம் உண்மை யானும்
அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்குமென்
றஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போகநும வரைவும மனைவிககட் டோனறும. ருக

1171 கற்புககாலததுததோழிககும
அறிவாககுமுரியவழு

வநதக மிகுதி சுட்டுங காலை
உரிததென மொழிப வாழ்க்கையுள இரககம். ருஉ

1172 கறபினுட்டலைவற்குந்தலைவிககு
மெயதியவழு

மனைவி உயர்வும கிழவோன பணிவும
நினையுங காலைப புலவியுள உரிய ருரு

1173 கறபினுளமேலிருவாககுமுரியவழு

நிகழ்ததகை மருங்கின வேட்கை மிகுதிபிற
புகழ்ததகை வரையார் கறபின உளளே. ருச

1174 தலைவிககுநதோழிககுமுரியவழு

இறைசசி தானே பொருட்புறத் ததுவே. ருரு

1175 எயதியதிகநதுபடாமறகாத்தது

இறைசசியிற பிறககும பொருளுமா ருளவே
திறததியல மருஙகிற றெரியு மோர்க்கே. ருசு

1176 இறைசசிமூற்கூறியவற்றினவேறுய்வால்

அன்புறு தகுந இறைசசியுட் சுட்டலும்
வனபுறை ஆகும் வருநதிய பொழுதே. ருஎ

1177 தலைவன் தலைவியைப் பாராட்டியவழி வருமெழு

செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற உணர்த்துங் கிழவி பாராட்டே ௩௮

1178 தலைவியிடத்து நிகழும் வழு

கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும்
உள்ளத் தூடல் உண்டென மொழிப ௩௯

1179 எய்தியதொருமருங்குமறுத்தல

கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள். ௪0

1180 பரத்தையைப் பாராட்டுப்பாற்படுவதோர்வழு

தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயின் உணர்ந்து
தலைத்தாட் கழறல் தம்மெதிர்ப் பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே ௪௧

1181 பெருந்திணைவழுவமைக்கின்றது

பொழுது தலைவைத்த கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்தம் மருட்கை மிகுதியொ
டவைநாற் பொருட்கண் நிகழும் என்ப. ௪௨

1182 தோழிகூற்றுள்வழுவமைவன

இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே. ௪௩

1183 தோழிக்குந்தலைவிக்குமுரியதோர்வழு

உயர்மொழிக் குரிய உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே. ௪௪

1184 தோழி அறிவுடையளாகக்கூறலும்
அமைகவெனல்

உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகும் தோழிகண் உரனே. ௪௫

1185 தோழிக்குரியதோர்வேறுபாடு

உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே. ௪௬

1186 தலைவிதோழிகூற்றுட்படுமெவழு

வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய தத்தம் கூற்றே. ௪௭

1187 உள்ளுறைஇனைத்தெனல்

உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே. ௪௮

1188 உள்ளுறைபற்றித்தலைவற்குவரும்வழு

அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே. சகூ

1189 எய்தாதெய்துவித்தது

மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கிற் கொள்ளும் என்ப ருய

1190 மெய்ப்பாட்டியலுள் ஆகாதென்பவற்றுட்சில
அமைகவென வழுவமைத்தல்

சினனே பேதைமை நிம்பிரி நல்குர
வன்னநால் வகையும் சிறப்பொடு வருமே ருக

1191 முறைப்பெயர்பற்றிவருவதோர்வழு

அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்
தோன்றா மரபின என்மனார் புலவர். ருஉ

1192 கட்புலனாகக்காணப்படாப்பொருள்மேலும்
காணப்பட்டாற்போலப்பொருள்கோடல்வழு

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்

காமவியின் வரூஉம் கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டல் ஆகாப் பொருள என்ப. ௫௩

1193 காட்டலாகாப்பொருள்கள் ஆசிரியனுணர்வு ற
கொண்டன அல்லனவற்றைப்பொருளெனக்
கொள்ளல்

இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினு ்
அவையில் காலம் இன்மை யான ௫௪

பொருளியல் முற்றிற்று

ஆறாவது

## மெய்ப்பாட்டியல்.

1194 மெய்ப்பாடு இத்துணைப்பகுதியவெனல

பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப. ௧

1195 மெய்ப்பாட்டினடக்கங்கூறல

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே

1196 எண்வகை மெய்ப்பாடு

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப. ௩

1197 நகைக்குறிப்புநான்கெனல

எள்ளல் இளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப. ௪

1198 அழுகைச்சுவையைப்பொருளபற்றி யுரைத்தல்

இளிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே ௫

1199 நாலவகை இளிவரல்

மூப்பே பிணியே வருத்தம் மென்மையோ
டியாப்புற வந்த இளிவரல் நான்கே ௬

1200 நாலவகை மருட்கை

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே ௭

1201 நாலவகை அச்சம

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே. ௮

1202 நாலவகைப்பெருமிதம

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே. ௯

1203 நால்வகை வெகுளி

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே. ௰

1204 நால்வகை உவகை

செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்லல் நீத்த உவகை நான்கே. கக

1205 மேற்கூறிய முப்பத்திரண்டன்றி
இவையும் மெய்ப்பாடெனல்

ஆங்கவை ஒருபால் ஆக ஒருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை அருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
இவையும் உளவே அவையலங் கடையே. கஉ

1206 அவற்றுள் முதலனமூன்றினும் முன்னர்
நின்ற ஒரு கூற்றினை இந்நாற்பகுதித்தெனல்

புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப. கங

1207 இரண்டாம்பகுதிமெய்ப்பாடுணர்த்தல்

கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ
டூழி நான்கே இரண்டென மொழிப. ௧௪

1208 மூன்றாம்பகுதி மெய்ப்பாடு

அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப. ௧௫

1209 நான்காம்பகுதி மெய்ப்பாடு

பாராட் டெடுத்தல் மடந்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப ௧௬

1210 ஐந்தாம்பகுதி மெய்ப்பாடு

தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப. ௧௭

1211 ஆறாம்பகுதி மெய்ப்பாடு

புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப ௧௮

1212 மேலனவற்றிற்கோர் புறனடை

அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப க௯

1213 மேலனவற்றிற்காவதோர் விதி

வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே உ௦

1214 எதிரதுபோற்றியிறந்தது காத்தது

அவையும் உளவே அவையலங் கடையே உக

1215 மேலிவையுமுளவெனப்பட்ட
மெய்ப்பாடு கூறல்

இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்டுயில் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாகக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்தமர் உவத்தல்
அறனளித் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி உவத்தல் உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே. உஉ

1216 வரைந்தெய்துங் கூட்டத்திற்கேதுவாம்
மெய்ப்பாடு

முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை இன்மையென்
றாயிரு நான்கே அழிவில் கூட்டம். ௨௫

1217 அழிவில்கூட்டம் நிகழ்ந்தபின்
வருமெய்ப்பாடு

தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ளது உவர்த்தல்
புணர்ந்துழி உண்மை பொழுதுமறுப் பாக்கம்
அருள்மிக உடைமை அன்புதொக நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை உரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்தும் செப்பிய பொருளே. ௨௬

1218 இதுவும்மெய்ப்பாட்டுப்பகுதிகூறலது

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே. ௨௭

1219 காமக் குறிப்பாகாதன கூறல்

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை இன்மை என்மனார் புலவர். உ௬

1220 மேற்கூறியமெய்ப்பாட்டிற்குப்புறனடை

கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்
குரைத்தே. உ௭

மெய்ப்பாட்டியல் முற்றிற்று

---

ஏழாவது

## உவமவியல்.

1221 உவமத்தின் பொதுவிலக்கணமும் பெயராதியவும்

வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம். க

1222 எய்தியதிகந்துபடாமற்காத்தது

விரவியும் வரூஉம் மரபின என்ப. உ

1223 எய்தாததெய்துவித்தது

உயர்ந்ததன மேறறே உளளுநர காலே. ௩

1224 இதுவுமது

சிறபபே நலனே காதல வலியோ
டநநாற பணபும நிலைககளம எனப. ௪

1225 மேற்கூறியநிலைககளததுககுப்புறனடை

கிழக்கிடு பொருளோ டைநதும ஆகும. ௫

1226 உவமை, முதலசினைபறறிவருஙகா
லின்னவாறுமெனல

முதலும சினையுமென் றுயிரு பொருடகு
நுதலிய மரபின் உரியவை உரிய. ௬

1227 எயதாததெய்துவித்தது

சுட்டிக் கூறா உவம மாயிற
பொருளெதிர் புணர்ததுப புணர்ந்தன
கொளலே ௭

1228 இதுவுமது

உவமையும பொருளும ஒததல வேணடும். ௮

1229 உவமைவிகற்பம்

பொருளே உவமம செய்தனர மொழியினும
மருளறு சிறபபினஃ துவமம ஆகும. ௯

1230 உவமத்திற்காவதோரிலக்கணம்

பெருமையும் சிறுமையும் சிறப்பின் றீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய. க0

1231 உவமவுருபுமொழிகள்

அவைதாம்,
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை எனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட ஆங்க
என்ற இப்பப என்றவை எனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப ஆங்கவை எனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப ஆங்கவை எனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ ஆங்கவை எனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஒட்டப் புரைய என்றவை எனாஅ
ஆறா றவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பலகுறிப் பினவே. கக

1232 வினையுவமவாய்பாடு

அன்ன ஆங்க மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கொடு
கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம். கஉ

1233 எயதியதிகநதுபடாமற்காததது

அன்னவென கிளவி பிறவொடும சிவணும ௧௩

1234 பயனிலையுவம வாயபாடு

எள்ள விழையப புலலப பொருவக
கள்ள மதிபப வெலல வீழ
என்றுங கெடடே பயனிலை உவமம. ௧௪

1235 மெயயுவம வாயபாடு

கடுபப ஏயபப மருளப புரைய
ஒட்ட ஒடுஙக ஓட நிகாபபவென
றபபால எடடே மெய்பபால உவமம. ௧௫

1236 உருவுவம வாயபாடு

போல மறுபப ஒபபக காய்த்த
நேர வியபப நளிய நநதவென
ரொத்துவரு கிளவி உருவின உவமம. ௧௬

1237 மேல்நாலுவமவாயபாட்டிறகுப்புறனடை

தததம மரபிற றோனறுமன பொருளே. ௧௭

1238 இதுவுமமேலனவற்றையேயதககின்றது

நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. ௧௮

1239 உவமைவேறுவகையான எட்டாமாறு

பெருமையும் சிறுமையும மெய்பபா டெடடன்
வழிமருங் கறிய்த தோன்றும எனப. ௧௯

1240 எய்தாததெய்துவித்தது

உவமப் பொருளின் உற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான. ௨௦

1241 மேலதற்கோர்புறனடை

உவமப் பொருளை உணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு படுமே. ௨௧

1242 எய்தாததெய்துவித்தது

இரட்டைக் கிளவி இரட்டை வழித்தே. ௨௨

1243 உள்ளுறையுவமமுணர்த்தல்

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே. ௨௩

1244 உள்ளுறையின்வகை

உவமப் போலி ஐந்தென மொழிப. ௨௪

1245 மேலைந்துமிவையெனல்

தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉந் திறத்திய லென்ப. ௨௫

1246 உள்ளுறையுவமத்திற்கோரிலக்கணம்

கிழவி சொல்லின் அவளறி கிளவி
தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது. ௨௬

1247 இதுவுமது

கிழவோற் காயினு முரனொடு கிளக்கும்
ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே. உ௭

1248 மேலதற்கோர்வேறுபாடு

இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியும்
உவம மருங்கிற் றோன்று மென்ப. உ௮

1249 உள்ளுறையுவமையைவரையறுத்தது

கிழவோட் குவமம் ஈரிடத் துரித்தே உ௯

1250 தலைமகற்கிடவரையறையில்லையென்றது

கிழவோற் காயி னிடம்வரை வின்றே. ௩0

1251 தோழியுஞ்செவிலியும்உள்ளுறையுவமம்
கூறுமிடமுணர்த்தல்

தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கொள்வழி யான. ௩௧

1252 எய்தாததெய்துவித்தது

வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல். ௩உ

1253 வினையுவமத்திற்கோரிலக்கணம்

ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே. ௩௩

1254 எய்தாததெய்துவித்தது

உவமத் தன்மையும் உரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான. ௩௪

1255 உவமத்திற்கேயாவதோரிலக்கணம்

தடுமா றுவமம கடிவரை யின்றே ௩௫

1256 எயதியதுமறுததது

அடுககிய தோறறம விடுத்தல பண்பே. ௩௬

1257 எயதாதனவரையறையுடைமையிற்கூறிய
வறறோடினமாகலினுவமததிறகாவதுணாததல

நிரனிறுத தமைதத நிரனிறை சுணணம
வரைநிலை வைதத மூனறலங கடையே. ௩௭

உவமவியல முறறிறறு

---

எட்டாவது

## செய்யுளியல்.

1258 செயயுட்குறுப்பாவனவற்றின்பெயர்
முதலியன

மாததிரை எழுததியல அசைவகை எனாஅ
யாதத சீரே அடியாப பெனாஅ
மரபே தூககே தொடைவகை எனாஅ
நோககே பாவே அளபியல எனாஅத
திணையே கைகோள கூறறுவகை எனாஅக்
கேடபோர களனே காலவகை எனாஅப
பயனே மெயப்பா டெசசவகை எனாஅ
முனனம பொருளே துறைவகை எனாஅ

மாட்டே வண்ணமொ டியாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே. ௧

1259 மாத்திரையுமெழுத்தியலுமுணர்த்தல்

அவற்றுள்,
மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்
மேற்கிளந் தன்ன என்மனார் புலவர். ௨

1260 அசைவகையுணர்த்தல்

குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசிற் பெயரே ௩

1261 சொல்லாதஅசைக்கூறுமுரைத்தல்

இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேரும் நிரையும் ஆகும் என்ப. ௪

1262 எய்தியதுமறுத்தலும் எய்தாததெய்து
வித்தலும்

குறிலிணை உகரம் அல்வழி யான. ௫

1263 அசைநான்கின்வகைக்கெய்தாத
தெய்துவித்தது

இயலசை முதலிரண் * டேனைய உரியசை. ௬

1264 எய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தல்

தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது. ௭

1265 எய்தாததெய்துவித்தலையமறுத்தல்

ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம். ௮

1266 இதுவுமையமறுத்தது

முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும். ௯

1267 எய்தாததெய்துவித்தது

குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
‡ ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே. ௧௦

1268 மேலவற்றுக்கும்பின்னவற்றுக்கும்
புறனடை

அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே. ௧௧

---

* 'டேனை உரியசை' என்று பாடங்காட்டுவர் இவ்வியற் பதிப்பாளராகிய சேதுசமஸ்தான வித்துவான் ஸ்ரீ ரா இராகவையங்காரவர்கள்

‡ 'ஒற்றொடு' என்று பாடங்கொள்வர்-ரா-ரா அவர்கள்

1269 சீரின் பகுதியும் பொதுவிலக்கணமும்

ஈரசை கொண்டு மூவகை * புணர்ந்தும்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே கஉ

1270 ஈரசைச்சீருணர்த்தல்

இயலசை மயக்கம் இயற்சீ ரேனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர் கங

1271 மேலசைமயக்கத்துளாமிருசீர்

முன்னிரை † உறினும் அன்ன வாகும் கச

1272 இயற்சீருணர்த்தல்

நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால. கரு

1273 ஒழிந்தநான்கியற்சீருணர்த்தல்

இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல வாகும் என்ப. கசு

1274 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. கஎ

1275 எய்தாததெய்துவித்தது

ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப கஅ

* 'புணர்ந்தும்' என்பது உரையாசிரியராகிய இளம்பூரணர் பாடமெனக்காட்டுவர்; நச்சினார்க்கினியர் அவர்கள்.

† 'வரினும்' என்பது நச். பாடம்

1276 வெண்பாவுரிச்சீருணர்த்தல்

இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப. ௧௯

1277 ஒழிந்தமூவகைச்சீருணர்த்தல்

வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீர் அல்லா மூவகை யான. ௨௰

1278 வஞ்சியுரிச்சீர்ப்பாவுரிமை

தன்பா அல்வழித் தானடை * யின்றே ௨௧

1279 மற்றைச்சீர்மயங்குமாறு

வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய. ௨௨

1280 கட்டளையாசிரியப்பாவில் அடியுறழாச்சீர்

வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக் கொருங்குநிலை இலவே. ௨௩

1281 கலிப்பாவிற்சீர்மயங்குமாறு

கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ. ௨௪

1282 கட்டளையடிச்சீர்வரையறை

கலித்தளை அடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே. ௨௫

1283 வஞ்சியில்வாரா இயற்சீர்

வஞ்சி மருங்கினும் இறுதி நில்லா. ௨௬

* "வின்றே" என்பது ரா. ரா. பாடம்

1284 நான்கசையுஞ்சீராகுமிடம்

இசைநிலை நிறைய நிற்குவ தாயின்
அசைநிலை வரையார் சீர்நிலை பெறற்கே ௨௭

1285 எய்தியதொருமருங்குமறுத்தல்

இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை சிதையாத் தன்மை யான ௨௮

1286 வெண்சீராற்கலித்தளையாமாறு

வெண்சீ ரீற்றசை நிரையசை இயற்றே. ௨௯

1287 கட்டளையடியல்லாதவழி, சீர்மயங்குமாறு

இன்சீர் இயைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே. ௩௰

1288 வஞ்சியுரிச்சீர் ஆசிரியஅடியுண்மயங்குமாறு

அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுதல் உடைய * ஓரோ வழியே. ௩௧

1289 நாற்சீரடி

நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே. ௩௨

1290 இதுவுமது

அடி உள்ளனவே தளையொடு தொடர்பே. ௩௩

---

* 'ஓரொரு' என்பது பா. பா. பாடம்

1291 கட்டளைப்பாட்டிற்குந்தொடைக்கு
மாகுநகருவி

அடியிறந்து வருதல் இல்லென மொழிப. ௩௪

1292 பாட்டெனப்படினு முதற்பொருள்
தோன்றுமாறு

அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே ௩௫

1293 குறளடி

நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி என்ப. ௩௬

1294 சிந்தடி

ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் ‡ அவ்வழி யான. ௩௭

1295 அளவடி

பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தொற்றலங் கடையே ௩௮

1296 நெடிலடி

மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப ௩௯

1297 கழிநெடிலடி

மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இவட்பெறு மென்ப ௪௦

‡ அல்வழி என்பது ரா. ரா. பாடம்

1298 ஐவகையடிக்கு நாற்சீருமெழுத்தெண்ணி வருதல்

சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது சக

1299 வஞ்சிப்பாச்சீர்க்கெழுத்துக்கள்

நேர்நிலை வஞ்சிக் காறும் ஆகும் ச௨

1300 சீரெல்லாவற்றிற்கும்பொதுவிதி

எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப. சங

1301 ஆய்தமெய் உற்றுகரமும் ஒற்றுங்கெண்ணப் படுதல் எய்தினவற்றை விலக்கினவாறு

உயிரில் லெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான. சச

1302 வரையறுக்கப்பட்டசீரிரண்டது வஞ்சி

வஞ்சி அடியே இருசீர்த் தாகும். சரு

1303 வஞ்சியடிச்சீர் மூன்றெழுத்துச் சிறுமையது

தன்சீர் எழுத்தின் சின்மை மூன்றே. சசு

1304 ஒழிந்தவியனிலைவஞ்சிக்குறள்

முச்சீ ரானும் வருமிடன் உடைத்தே சஎ

1305 இதுவுமது அதற்கெய்தியதோர்விதி

அசைகூன் ஆகும் அவ்வயி னான. சஅ

1306 இஃதெய்தாததெய்துவித்தது

சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே. ௪௯

1307 ஐவகையடியின் விரிகூறல்

ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினே ழ் நிலத்த
எழுபது * வகைமையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே. ௫௦

1308 ஒழிந்தஅடியுறழாமைக்குக்காரணங்கூறல்

ஆங்ஙனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை. ௫௧

1309 எய்தாததெய்துவித்தது

ஐவகை அடியும் ஆசிரியக் குரிய. ௫௨

1310 எய்தியதிகந்துபடாமைக்காக்கின்றது

விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே. ௫௩

1311 எய்தாததெய்துவித்தது

தன்சீர் வகையினும் தளைநிலை வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக் குரிய. ௫௪

1312 வெண்பாவிற்குச்சீர்தளைவகைகூறல்

தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா. ௫௫

* 'வகையின்' என்பது ரா ரா. பாடம்

1313 கட்டளையடிக்கண் இயற்சீர் தட்குமாறு
சீரியை மருங்கின் ஓரசை ஒப்பின்
ஆசிரியத் தளையென் றறியல் வேண்டும். ருசு

1314 வஞ்சியடியுள் முச்சீராமாறும் அதுபெறு நிலையும்
குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை இலவே வஞ்சிக் கென்ப. ருஎ

1315 வெண்பாவிற்குரிய நிலம்
அளவும் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான. ருஅ

1316 கலிக்குரிய நிலம்
அளவடி மிகுதி உளப்படத் தோன்றி
இருநெடி லடியும் கலியிற் குரிய. ருகூ

1317 கலித்தளை விகற்பங்கூறல
நிரை முதல் வெண்சீர் வந்துநிரை தட்பினும்
வரைநிலை யின்றே அவ்வடிக் கென்ப. சூ0

1318 கலியடித்தளை வெண்பாவோடு விராய்வரினும்
கடியப்படாதென்கிறது
விராஅய தளையும் ஒரூஉநிலை யின்றே. சூக

1319 வெண்சீரொன்றிவரும் அடி ஆசிரியத்திற்கு
மயங்கியல்வகையால் நிற்கவும் பெறுமென்ல
இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே. சூஉ

1320 ஐஞ்சீரடியும் வருமாறு

வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப. ௯௩

1321 அறுசீரடியுங் கலிப்பாவிற்குரித்தென்கின்றது

அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே. ௯௪

1322 எழுசீரான் வருமடி கூறுகின்றது

எழுசீர் அடியே முடுகியல் நடக்கும். ௯௫

1323 எய்தாததெய்துவித்தது

முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும். ௯௬

1324 எய்தியதிகந்துபடாமற்காத்தது

ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே. ௯௭

1325 எய்தாததெய்துவித்தது

ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்
தோற்றம் முச்சீர்த் தாகும் என்ப. ௯௮

1326 இதுவுமது

இடையும் வரையார் தொடையுணர் வோரே. ௯௯

1327 கலிப்பாவிற்குச் சிந்தடியும் உரித்தெனல்

முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும். ௭௰

1328 வஞ்சியீற்றடி ஆசிரியவடி போலுமாறு

வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே. ௭௧

1329* வெண்பாவிற்கீறுணர்தல்

வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும். ௭௨

1330 மேலதற்கெய்தியதோர் விதி

அசைச்சீர்த் தாகும் அவ்வயி னான. ௭௩

1331 இயற்சீர் இன்னுழி இன்னவாறு கொள்ளப்படுமெனல்

நேரீற் றியற்சீர் நிரையும் நிரையும்
சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப ௭௪

1332 ஒழிந்த அசைச்சீர் நிரையீற்றுப் பின்னன்றி வாராவெனல்

நிரையவண் நிற்பின் நேரும் நேரும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர் ௭௫

1333 கலிப்பாவிற்கு அடிவகுக்கின்றது

எழுசீர் இறுதி ஆசிரியம் கலியே. ௭௬

1334 இதுவுமது

வெண்பா இயலினும் பண்புற முடியும் ௭௭

---

* 'அசைச்சீராகும்' என்பது ர. ஈ. பாடம்

1335 யாப்புணர்த்துகின்றது

எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர். எஅ

1336 யாப்பிற்கு மரபிற்கும் பகுதியுரிமை
கூறியது

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர். எகூ

1337 மரபினை விளக்கக்கூறுவது

மரபே தானும்,
நாற்சொல் இயலான் யாப்புவழிப் பட்டன. அ0

1338 அகவற்பாவாமாறு

அகவல் என்ப தாசிரி யம்மே. அக

1339 வெண்பாவாமாறு

‡ அஃதான் றென்ப வெண்பா யாப்பே. அஉ

1340 கலிப்பாவாமாறு

துள்ளல் ஓசை கலியென மொழிப. அ[illegible]

‡ 'அதாஅடைறென்ப' என்பது ரா. ரா. பாடம்;
'அஃதன் றென்ப' என்பது உரையாசிரியர் பாடம்

1341 வஞ்சியாமாறு

தூங்கல் ஓசை வஞ்சி ஆகும். ௮௪

1342 மருட்பாவிற்குவேறுபாடில்லையெனல்

மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னும் தனிநிலை இன்றே. ௮௫

1343 மேலவற்றிற்கோர்வரையறை

* அவ்வியல் அல்லது பாட்டாங்குக் கிளவார். ௮௬

1344 தூக்காமாறு

தூக்கியல் வகையே ஆங்கென மொழிப. ௮௭

1345 தொடைவகைப்பெயர்முறைமுதலியன

மோனை எதுகை முரணே இயைபென
நானெறி மரபின தொடைவகை என்ப. ௮௮

1346 எய்தியதன்மேற்சிறப்புவிதி

அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும். ௮௯

1347 இதுவுமது

பொழிப்பும் ஒரூஉவும் செந்தொடை மரபும்
அமைந்தனர் தெரியின் அவையுமார் உளவே. ௯௰

* 'அவ்வியல்பல்லது' என்பது ஈ. ஈ. பாடம்

1348 நிரனிறைஇரட்டைத்தொடையு மேற்றொடைப்பாற்படுமெனல

நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப. ௯௧

1349 மோனைத்தொடை

அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை. ௯௨

1350 எதுகைத்தொடை

அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும். ௯௩

1351 மேற்றொடைப்பாற்படும்வேறுதொடைகள்

ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய. ௯௪

1352 முரண்தொடை

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே. ௯௫

1353 இயைபுத்தொடை

இறுவாய் ஒன்றல் இயைபின் யாப்பே. ௯௬

1354 அளபெடைத்தொடை

அளபெழின் அவையே அளபெடைத் தொடையே. ௯௭

1355 பொழிப்பெதுகை

ஒருசீர் இடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென ‡ மொழிப புலவர் ஆறே. ௯௮

‡ 'மொழிதல்' என்பது ஈ. ஈ. பாடம்

1356 ஒரூஉத்தொடை

இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப. ௯௯

1357 செந்தொடை

சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவர் அது செந்தொடை என்ப. ௧௦௦

1358 மேற்கூறியதொடையுள் ஒருசீரான்
வரையறையுடைமையின் அவற்றைப்பகுக்கப்போலத்
தொகுத்தோதல்

மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே. ௧௦௧

1359 மேற்கூறியதொடைக்கோர்புறனடை

தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பலவும். ௧௦௨

1360 இதுவுமது

தொடைவகை நிலையே ஆங்கென மொழிப. ௧௦௩

1361 நோக்குணர்த்துகின்றது

மாத்திரை முதலா † அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே. ௧௦௪

---

† 'அடிநிறை' என்பது ரா. ரா. பாடம்

1362 பாவின்பெயரும்வேறுபாடும்விரியும்

ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே. ௧௦௫

1363 பாவின்பொருட்குரிமைபொதுவகை யானுணர்த்தல்

அந்நிலை மருங்கின் அறமுதல் ஆகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப ௧௦௬

1364 பாவின்தொகை

பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
காயிரு பாவினுள் அடங்கும் என்ப. ௧௦௭

1365 இதுவுமது

ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப ௧௦௮

1366 வாழ்த்துநாற்பாவிற்குமுரித்தெனல்

வாழ்த்தியல் * வகையே நாற்பாற்கும்
உரித்தே. ௧௦௯

1367 வாழ்த்துவேறுபாடுணர்த்தல்

வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து

* 'நாற்பாக்கும்' என்பது [illegible] பாடம்.

பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ. ககo

1368 பாக்களை மூன்றாக்கவரையறுத்தல்

வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி ‡ வுறூஉவென அவையும் அன்ன. ககக

1369 வாயுறைவாழ்த்துணர்த்தல்

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே. ககஉ

1370 அவையடக்கியலுணர்த்தல்

அவையடக் கியலே அரில்தப தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே. ககங

1371 செவியுறையுணர்த்துகின்றது

செவியுறை தானே,
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
* நவிலுதல் கடனெனச் செவியுறுத்
தன்றே. ககச

‡ 'வுறூஉவென் றவையும்' என்பது ரா. ரா. பாடம்
* 'அவிதல்' என்பது ரா. ரா. பாடம்

1372 பாவிலக்கணங்கூறுமாறு

ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக் கொட்டின என்ப ௧௧௫

1373 குட்டத்திற்கோர்சிறப்புவிதி

குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும். ௧௧௬

1374 மண்டிலமுங்குட்டமும்வருமிடம்

மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர். ௧௧௭

1375 வெண்பாவின்றுழிபாவாமென
வரையறுத்தல்

நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை எல்லாம் வெண்பா யாப்பின. ௧௧௮

1376 எய்தியதன்மேற்சிறப்புவிதி

கைக்கிளை தானே வெண்பா ஆகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே. ௧௧௯

1377 பரிபாடற்காவதோர்புறனடை

பரிபா டல்லே தொகைநிலை விரியின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப. ௧௨௦

1378 பரிபாடலுறுப்பு

கொசசகம அராகம சுரிதகம எருததொடு
செபபிய நானகும் தனகுறுப பாகக
காமங கண்ணிய நிலைமைத தாகும. கஉக

1379 இதுவுமது

சொறசீர் அடியும முடுகியல அடியும
அபபா நிலைமைக குரிய வாகும கஉஉ

1380 சொறசீரடியாமாறு

கடடுரை வகையான எணணொடு புணர்நது
முட்டடி இன்றிக குறைவுசீரத தாகியும்
ஒழியசை யாகியு ம வழியசை புணர்நதும
சொறசீரத திறுதல சொறசீரக கியலபே. கஉங

1381 அஙகததசசெயயுள

அங்கதம தானே அரிறபத தெரியின்
செமபொருள காநத தெனவிரு வகைததே கஉச

1382 செமபொருளஙகதம

செமபொருள் * ஆயின் வசையெனப்படுமே. கஉரு

1383 பழிகாப்பஙகதம்

மொழிகரநது ‡ சொலலினது பழிகாப்
பாகும. கஉசு

* 'ஆவன' என்பது ரா. ரா. பாடம

‡ 'மொழியினது' என்பது ரா. ரா. பாடம

1384 அங்கதச்செய்யுட்பகுதி

செய்யுட் டாமே இரண்டென மொழிப. கஉஎ

1385 அங்கதச்செய்யுட்பகுதியுளொன்று

துகளொடும் பொருளொடும் புணர்ந்தன் றாயிற்

செவியுறைச் செய்யுள் அதுவென மொழிப. கஉஅ

1386 ஒழிந்த அங்கதச்செய்யுள்

வசையொடும் நகையொடும் புணர்ந்தன் றாயின்

அங்கதச் செய்யுள் என்மனார் புலவர். கஉகூ

1387 கலிப்பாவறுப்பின விரி

ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே

கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே. கங0

1388 ஒத்தாழிசைக்கலி

அவற்றுள்,

ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும். கங௧

1389 நான்குறுப்புடன்வருமொத்தாழிசை

இடைநிலைப் ‡ பாட்டுத் தரவுபோக் கடையென

நடையயின் றெழுகும் ஒன்றென மொழிப. கஙஉ

1390 தரவினடியளவு

தரவே தானும் நாலடி இழிபாய்

ஆறி ரண்டுயர் பேறவும் பெறுமே. கஙங

‡ 'பாட்டே' என்பது ரா. ரா. பாடம்

1391 தரவிற்குச் சுருங்கிய தாழிசைவரவு

இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட * மரபின என்ப. ௧௫௪

1392 ஆங்கெனுஞ்சொல் தனிச்சொல்லாதல்

அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி. ௧௫௫

1393 சுரிதகம்

போக்கியல் வகையே வைப்பெனப் படுமே. ௧௫௬

1394 இதுவுமது

தரவியல் ஒத்தும் அதனகப் † படும்
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே. ௧௫௭

1395 ஒழிந்த ஒத்தாழிசை

ஏனை ஒன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே. ௧௫௮

1396 மேலதன் வகை

அதுவே,
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே. ௧௫௯

* "மரபினதென்ப" என்பது ர. ர. பாடம்

† 'படுமே' என்பது ர. ர. பாடம்

1397 வண்ணக ஒத்தாழிசை

வண்ணகம் தானே,
தரவே தாழிசை எண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்றும் என்ப. கசo

1398 ஒத்தாழிசையுள் ஏனையொன்றின் இலக்கணம்

தரவே தானும்,
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும். கசக

1399 ஒத்தாழிசையுணர்த்துகின்றது

ஒத்து மூன்றாகும் ஒத்தா ழிசையே. கசஉ

1400 இஃது ஐயமறுத்தது

தரவிற் சுருங்கித் தோன்றும் என்ப. கசந

1401 சுரிதகவிலக்கணங்கூறல்

அடக்கியல் வாரம் தரவோ டொக்கும். கசச

1402 எண்ணுறுப்பாமாறு

முதற்றொடை பெருகிச் சுருங்குமன்
எண்ணே. கசரு

1403 மேலதற்கோர்புறனடை

எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் * அல்லாக் காலை யான. கசசு

* 'இல்லா' என்பது நா. நா. பாடம்.

1404 ஒருபோகின்வகை

ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும். ௧௪௭

1405 மேலிரண்டின்பெயருமுறையும்

கொச்சக வொருபோ கம்போ தரங்கமென்
றொருபா னாடி உணர்தல் வேண்டும். ௧௪௮

1406 கொச்சகவொருபோகுணர்த்திற்று

தரவின் றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது
கொச்சக வொருபோ காகும் என்ப. ௧௪௯

1407 கொச்சகவொருபோகிற்குஅளவு

ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே ௧௫௦

1408 அம்போதரங்கவொருபோகினடிவரையறை

அம்போ தரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரம் சிறுமைக் கெல்லை. ௧௫௧

1409 அம்போதரங்கஉறுப்பைந்து

எருத்தே கொச்சகம் அராகம் சிற்றெண்
அடக்கியல் வாரமொ டந்நிலைக் குரித்தே. ௧௫௨

1410 கலிவெண்பாவாமாறு

ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலாற
றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே. கருங.

1411 விரவுறுப்புடைய வெண்கலியைக்கூறுவது

தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெறறும
வெண்பா இயலான வெளிப்படத் தோன்றும கருச

1412 அகநிலைக்கொச்சகக்கலி

பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில புலவர் நுவன்றறைந் தனரே. கருரு

1413 உறழ்கலியுணர்த்திற்று

கூற்றும மாற்றமும இடையிடை மிடைந்தும்
போக்கின் றுகல உறழ்கலிக் கியல்பே. கருசு

1414 ஆசிரியப்பாவின் அடியளவு

ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிரம் ஆகும இழிபுமூன் றடியே. கருஎ

1415 வெண்பாவின் அடியளவு

நெடுவெண் பாட்டே முந்நால் அடித்தே
குறுவெண் பாட்டின் அளவெழு சீரே. கருஅ

1416 அங்கதப்பாட்டினளவு

அங்கதப் ¶ பாட்டவற் றளவோ டொக்கும் கருகூ

¶ 'பாட்டளவைற்றே' என்பது ரா. ஏா. பாடம

1417 எய்தாதெய்துவித்தது

கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
¶ செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகுநிலை அளவின் அடியில என்ப. ௧௫௦

1418 புறநிலைமுதலியவைமுடியுமாறு

புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றும் திண்ணிதிற் றெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப. ௧௫௧

1419 பரிபாட்டில்வரும்வெண்பாவளவு

* பரிபாட் டெல்லை
நாலீ ரைம்பது உயர்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை ௧௫௨

1420 மேற்கூறியஅளவை வரையறுத்தல்

அளவியல் வகையே அனைவகைப் படுமே. ௧௫௩

1421 எழுநிலத்துச்செய்யுட்களவரறெனல்

எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியின்
அடிவரை இல்லன ஆறென மொழிப. ௧௫௪

---

¶ 'புறநிலை வாயுறை செவியறி வென்றிவை' என்பது நா. நா. பாடம்.

* 'பரிபாடலலே' 'உயர்வடி' 'இழிவடி' என்பன நா. நா. பாடம். ௪

1422 மேற்கூறிய ஆறற்கும் பெயரும் முறையும்

அவைதாம்,
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான. ௧௬௫

1423 நூலினது பொதுவிலக்கணம்

அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே. ௧௬௬

1424 நூலின்பகுதி

அதுவே தானும் ஈரிரு வகைத்தே. ௧௬௭

1425 நூற்பகுதியின்பெயரும்முறையும்

ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
